# இயேசுவே வாரும்

ஆமென், கர்த்தராகிய இயேசுவே, வாரும். வெளி. 22:20

*காலேப் யோசுவா*
Cell :9444701953

*பிளாட் எண். 4, 2வது தெரு, மணலி சரவணா நகர்,*
*மாங்காடு, சென்னை - 600 122.*

## *லௌகிக ஞானத்தினாலும், மாயமான தந்திரத்தினாலும் ஒருவனும் உங்களை கொள்ளை கொண்டு போகாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள்.*

1. கிறிஸ்துவின் சரீரமாகிய சபையானது பக்திவிருத்தி அடைவதற்காக சுவிசேஷகனாக கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவனாகிய காலேப் யோசுவா : லவோதிக்கேயா சபை காலத்திற்குரிய செய்தி பிரசங்கிக்கப்பட்ட நாள் முதல் இதுவரைக்கும் அதற்கு உடன்பட்டவர்களாயிருக்கிற, கிறிஸ்து இயேசுவுக்குள்ளான பரிசுத்தவான்கள் அனைவருக்கும் எழுதுகிறதாவது : நம்முடைய பிதாவாகிய தேவனாலும் கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினாலும் உங்களுக்குக் கிருபையும் சமாதானமும் உண்டாவதாக.

2. கடைசி நாட்களில் கொடிய காலங்களாயிருக்கிற இந்நாட்களில் கள்ளகபடமுள்ள வேலையாட்கள், கிறிஸ்துவின் சரீரமாகிய சபை பக்திவிருத்தி அடைய கர்த்தரால் அப்போஸ்தலனாக, சுவிசேஷகனாக, மேய்ப்பனாக ஏற்படுத்தப்பட்டவர்கள் என கூறிக்கொண்டு வருகிறார்கள். மக்களும் அவர்களை நம்புகிறார்கள். ஏனென்றால் இவர்கள் வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் அறியாத ஜனங்களாய் இருக்கிறார்கள். ஜீவவார்த்தையிலும், இக்காலத்திற்குரிய செய்தியிலும் தேர்ச்சி பெறாதவர்களாய் இருகிறார்கள். ஆதலால் அவர்களால் ஒன்றை நிதானிக்க முடியவில்லை. ஒன்றைக் குறித்து அது முற்றிலுமாக சரியா அல்லது தவறா என அறிந்து ஒரு முடிவு எடுக்க இவர்களால் முடியவில்லை. சாத்தானும் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்துக்கொள்வானே, அவனுடைய ஊழியக்காரரும் நீதியின் ஊழியக்காரருடைய வேஷத்தை தரித்துக்கொள்வார்களே (2கொரி 11 : 14, 15) என்ற எச்சரிப்பை அவர்களால் உணர்ந்து கொள்ள முடியவில்லை. ஆதலால் அது அவர்கள் வஞ்சிக்கப்படுவதற்கு ஏதுவாய் இருக்கிறது. இது கொடிதான வஞ்சிப்பின் காலம். வஞ்சக காலங்களில், ஏதேன் தோட்டத்தின் காலத்திலிருந்து தொடங்கி பார்க்கையில் இக்காலத்தை போல கொடிய வஞ்சககாலம் எதுவும் இல்லை.

3. இந்நாட்களில் நமது மத்தியில் வஞ்சிப்பு தலைவிரித்து ஆடும் ஆட்டம் நாளுக்கு நாள் அதிகரித்துக்கொண்டே செல்கிறது. கடைசி நாட்களில் கொடிதான காலங்களில் நாம் வசித்துக் கொண்டிருகிறோம் என்பதை இது அடையாளம் காட்டுகிறது. **வஞ்சிப்பு கடைசி நாட்களுக்குரிய ஒரு அடையாளம்.** ஆதலால் ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்த கள்ளகபடமுள்ள வேலையாட்களின் மாயமாகிய புளித்த மாவை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். வஞ்சிக்கப்படாதீர்கள். மோசம் போகாதீர்கள் என அவர்களது மாறுபாடான உபதேசங்களை சுட்டிக்காட்டி சபைக்கு எச்சரிப்பும் புத்திமதியும் கொடுப்பது எனது கடமையாயிருக்கிறது, பணியாயிருக்கிறது, உக்கிராணப் பொறுப்பாயிருக்கிறது. யார் மேலும் எந்த விதமான காப்புணர்ச்சியோடு நான் இதை எழுதுவதில்லை. இதுவரை அத்தகைய குற்றத்தை நான் செய்ததில்லை. கர்த்தர் என்னை வழிநடத்தும் விதத்தில் என் சிந்தனைகளை செலுத்தி உங்களுக்கு எழுதுகிறேன். என்னுடைய நிருபங்களின் மூலமாக சபைகளை திடப்படுத்த விரும்புகிறேன். கள்ளகபடமுள்ள வேலையாட்களை அடையாளம் காட்ட விரும்புகிறேன். உங்களுக்காக அதற்கென்று எனக்கு அளிக்கப்பட்டிருக்கிற தேவகிருபைக்காக கர்த்தருக்கு நன்றி செலுத்துகிறேன்.

4. **தேவன், ஏன் இந்த வஞ்சகத்தை மக்கள் மத்தியில் அனுப்பவேண்டும்?** சத்தியத்தை விசுவாசியாமல், அநீதியில் பிரியப்படுகிற யாவரும் ஆக்கினைக்குள்ளாக்கப்படும்படிக்கு, அவர்கள் பொய்யை விசுவாசிக்கத்தக்கதாக கொடிய வஞ்சகத்தை தேவன் அவர்களுக்குள் அனுப்புகிறார் (2 தெச 2 : 11 & 12) பாருங்கள், **யாருக்குள் தேவன் வஞ்சகத்தை அனுப்புகிறார்?** தேவனுடைய வார்த்தையை அது எழுதப்பட்ட, கொடுக்கப்பட்ட பிரகாரமாக ஏற்றுக்கொள்ளாது தங்கள் லௌகிக ஞானத்தினால் அதற்கு விளக்கம் கொடுக்கும் ஊழியர்களுக்குள், அவர்கள் போதனையை ஏற்றுக்கொள்ளும் மக்களுக்குள் தேவன் வஞ்சகத்தை அனுப்புகிறார். ஏனெனில் அவர்கள் தேவனுடைய வார்த்தையை ஏற்றுக்கொள்ளாமல் மனுஷர்களுடைய கற்பனைகளை, பாரம்பரியங்களை, பிரமாணங்களை, போதனைகளை, உபதேசங்களை ஏற்றுக்கொள்கிறார்கள். கர்த்தருடைய வார்த்தையை தங்கள் முதுகுக்கு பின் எறிந்துப்போட்டார்கள். அதன் நிமித்தமாக அநீதியில் பிரியப்படுகிறார்கள். அதே போன்று இக்காலத்திற்குரிய தூதனால் பிரசங்கிக்கப்பட்ட பிரகாரமாக அந்த

செய்தியை ஏற்றுக்கொள்ளாமல், அதனோடு ஒன்றை கூட்டியும், குறைத்தும், **வெளிப்பாடு** என்ற பெயரில் தங்கள் லௌகிக ஞானத்தைக்கொண்டு விளக்கம் கொடுத்து அக்கிரமங்களில் பிரியப்படுகிறார்கள். இவர்கள் அனைவரையும் ஆக்கினைக்குள்ளாக்கப்படுத்தும்படிக்கு தேவன் அவர்களுக்குள் கொடிதான வஞ்சகத்தை அனுப்புகிறார்.

5. **சத்தியத்திற்கு போலியாயுள்ளதை நாம் இக்காலத்தில் எதிர்பார்க்க வேண்டுமா?** ஆம், நிச்சயமாக. இஸ்ரவேல் ஜனங்களை விடுவிக்க மோசே கையில் ஒரு கோலை மாத்திரம் அடையாளமாக எடுத்துக்கொண்டு எகிப்துக்கு சென்றான். பரலோகத்தின் தேவன் அவனுக்கு துணையாயிருந்தார். அவன் ஒரு அற்புதத்தை செய்தான். அதன் பின்னர் போலிகளும் எழும்பி அவன் செய்த அதே அற்புதத்தை செய்தனர். அவன் பின்னால் போலியாட்கள் இரண்டாவதாக எழும்பினார்கள். முதன்முறையாக மோசே செய்த அதே அற்புதத்தை அவர்கள் பின்னர் செய்தனர். மோசேயின் நாட்களில் அவ்வாறு இது நிகழ்ந்து என்று நீங்கள் கூறலாம். ஆனால் கடைசி நாட்களில் இது மறுபடியும் நிகழும் என்று வேதவாக்கியம் உரைக்கின்றது. யந்நேயும் யம்பிரேயும் மோசேக்கு எதிர்த்து நின்றது போல இவர்களும் சத்தியத்திற்கு எதிர்த்து நிற்கிறார்கள், இவர்கள் துர்புத்தியுள்ள மனுஷர்கள் (2 தீமோ 3 : 8) ஜனங்களை குழப்பத்தில் ஆழ்த்துவதற்கென்றே அநேக போலியான செயல்கள் தோன்றும். தேவனிடமிருந்து தோன்றி அவருடைய வார்த்தையுடன் இணைந்துள்ள ஏதாவது ஒன்று எழும்பினால், அதை குழப்ப வேண்டும் என்பதற்காக ஏதாகிலும் வேறொன்று சம்பவிக்க வகை உண்டு. சாத்தான் அவ்விதம் செய்ய வேண்டுமென்ற நோக்கம் கொண்டவன் (**ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்,** பக்கம் 13, 14 பத்தி 34 , 35) நம்மத்தியில் தேவனால் ஏற்படுத்தப்படாத கள்ளகபடமுள்ள வேலையாட்கள், மேய்ப்பர்கள் இந்த குழப்பத்தை தங்களின் மாறுபாடான உபதேசங்களினால் உண்டாக்கி வருகிறார்கள்.

6. **நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்துவையே சேவிப்போம், கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்துவையே விசுவாசி, அப்பொழுது நீயும் உன் வீட்டாரும் இரட்சிக்கப்படுவீர்கள், பிரன்காமே கிறிஸ்து** என கோஷம் போட்டுக்கொண்டிருந்து, பின் பிலேயாமைப் போன்று எங்கள் கண்கள் திறக்கப்பட்டது (எண் 22 : 31, 24 : 3, 4) என கூறி வெளியே வந்த ஒரு குரூப், என்னோடு பல ஆண்டுகளாக ஒருமனப்பட்டு, ஐக்கியமாக இருந்த ஒரு சகோதரனை தங்களை வஞ்சனையினால் வசீகரித்து, தங்களது பக்கம் இழுத்து, கர்த்தருக்குரிய தசமபாகத்தை கொண்டும், வங்கியில் கடன் வாங்கி அதன் வட்டியை கர்த்தருக்குரிய தசமபாகத்தை கொண்டு கொடுத்தும் முற்றிலுமாக வேதவாக்கியங்களுக்கு மாறாக செயல்பட்டு, **ஜெயவீடு** என்ற பெயரில், ஒரு கட்டிடத்தை கட்டி, அதை தங்கள் விருப்பத்திற்கேற்ற, தன்னை சுவிசேஷகன் என அழைத்துக்கொள்ளும் சகோ. மோசஸ் தயானந்தத்தை கொண்டு (இவருக்கும் எனக்கும் நல்ல நட்பு இதுவரை உண்டு) அந்த கட்டிடத்தை பிரதிஷ்டை செய்தார்கள். தேவனுடைய ஆட்டுத் தொழுவதிற்குள் வேறு வழியாய் ஏறிய ஒரு நபரை **மேய்ப்பன்** என பிரதிஷ்டை செய்தார்கள். மிகவும் சொற்ப எண்ணிக்கைக்குரியவர்களை கொண்டு சபை கூடுதல் நடைபெற்றது. நான் இவர்களது திட்டங்களை ஆரம்பத்திலிருந்தே எதிர்த்து வந்தேன். ஆதலால் இவர்கள் என்னை புறக்கணித்தார்கள். நான் சத்தியத்தை இவர்களுக்கு சொன்னதினால் அவர்களுக்கு சத்துருவானேன். நான் இக்காலத்திற்குரிய செய்தியையும் செய்தியாளனையும் அங்கீகரிப்பது இல்லை என உண்மைக்கு புறம்பாக ஒரு கட்டுக்கதையை எனக்கு விரோதமாக கூறி என்னை ஓரம்கட்டினார்கள். நிராகரித்தார்கள், புறக்கணித்தார்கள்.

7. ஆனால் பின் சில மாதங்களில் அவர்களுக்குள் உபதேசங்களினால் உண்டான கருத்து வேறுபாடுகளினால் அந்த சபை உடைந்தது. கர்த்தருக்கு ஸ்தோத்திரம். என் அருமை சகோதரன் ஆரம்பத்திலிருந்தே என் ஆலோசனைகளை ஏற்றுக்கொள்ளாமல் **ஜெபவீடு** என்ற பெயரில் ஒரு கட்டிடத்தை கட்ட வேண்டும் என்பதிலே ஆர்வமாக இருந்தார். கர்த்தர் தம்முடைய அனுமதிக்கும் சித்தத்தின் கீழ் (Permissive Will) அதை அனுமதித்தார். சகோதரன் தன் வாஞ்சையை நிறைவேற்றினார். கட்டிடத்தையும் கட்டி முடித்தார். அதை தகாத நபரைக்கொண்டு பிரதிஷ்டையும் செய்தார். தகுதியற்ற ஒரு நபரை பாஸ்டர் ஆக்கினார். இத்தனையும் தேவன் ஏன் அனுமதித்தார்? சபை கூடுதலுக்கு சரியான ஒரு இடம் இல்லை. சபை கூடுதலுக்கென்று ஒரு இடம் அத்தியாவசியமாக தேவைப்பட்டது. அது உண்மைதான். சகோதரர்கள் இல்லங்களில் இதற்கு போதுமான வசதிகளை கொண்ட இடம் இல்லை. தேவன் சகோதரனின் இருதயத்தின் வாஞ்சையை நன்கு அறிவார். நானும் அவருடைய வாஞ்சையை அறிந்தவனாகவே இருந்தேன். ஆனாலும் அவர் தெரிந்துக்கொண்ட வழிகள் தேவனுடைய வார்த்தைக்கு முரணாக காணப்பட்டது. ஆதலால் அவரை எச்சரித்து விட்டு, அவரை விட்டு விலகினேன். என்னால் அவருடைன் ஒத்து போக முடியவில்லை. இப்பொழுதும் தேவன் தம்முடைய மூல சித்தத்தின் கீழ் (Original will) அவருடைய திட்டத்தை அனுமதிக்கவில்லை. ஏனென்றால் அவருடைய திட்டம் தேவனுடைய வார்த்தைகளை மையமாக கொண்டது அல்ல. மாறாக சகோதரனுடைய உண்மையும், உத்தமுமான ஆத்தும பாரத்தை, வாஞ்சையை கர்த்தர் அறிந்தபடியினால், சபை கூடுதலுக்கும் ஒரு இடம் தேவை எந்த அத்தியாவசியத்தை அறிந்தவராய் அந்த திட்டத்தை தம்முடைய அனுமதிக்கும் சித்தத்தின் கீழ் அனுமதித்தார். சகோரனும் அந்த ஜெபவீட்டை

தேவனுடைய மூலசித்தத்திற்கு மாறாக, ஆனால் அவரின் அனுமதிக்கும் சித்தத்தின் கீழ் கட்டிமுடித்து பிரதிஷ்டையும் செய்தார்.

8. ஆனாலும் காலம் நிறைவேறின போது சகோதரனது உண்மையையும் உத்தமத்தையும், இருதயத்தின் வாஞ்சையையும் அறிந்த தேவன், சகோதரனுடைய ஆத்துமாவை மரணக்கண்ணியிலிருந்து தப்புவிக்க மாறுபாடான உபதேசங்களை அந்த **பிரன்காம் கிறிஸ்து** குரூப்பினர்களால் சபைக்குள் கொண்டு வரவும் அவர்களை எதிர்ந்து நின்று சகோதரன் வெற்றியும் பெறவும் வழிகளை திறந்து கொடுத்தார். கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரம். அருமை சகோதரனுடன் சகோ. மார்ஷல் குடும்பத்தினரும் கர்த்தரால் மீட்கப்பட்டதை அறிந்து மிக்க மகிழ்ச்சி அடைந்தேன். மீண்டும் இவர்கள் என்னுடன் ஐக்கியம் கொள்ள கர்த்தர் வழியை திறந்துக் கொடுத்தார்.

9. **தேவனுடைய ஆட்டுத் தொழுவத்திற்குள் வேறு வழியாய் ஏறிய, சகோ. மோசஸ் தயானந்தத்தினால் பாஸ்டராக நியமிக்கப்பட்ட மேய்ப்பனின் தவறான, மாறுபாடான போதனைகளில் சிலவற்றை நாம் இங்கு தியானிப்போம். தேவனுடைய பிள்ளைகள் ஜீரணிக்க முடியாத இவர்களது முதலாம் உபதேசமாவது** : ஏழாம் சபைக்கால தூதனும், தீர்க்கத்தரிசியுமாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** என்ற தொடர் செய்தியை 17.03.1963 முதல் 25.03.1963 வரை சுமார் 11 செய்திகளாக பிரசங்கித்துள்ளார். இந்தச் செய்திகள் யாவும் முற்றிலுமாக **கர்த்தர் உரைக்கிறார்** என்பதை கொண்டது. ஆதலால் இந்த புத்தகத்தின் தொடக்கம் முதல் முடிவு வரை நாம் எதையும் நிராகரிக்கக்கூடாது, எதையும் ஏற்றுக்கொள்ள மறுக்கவும் கூடாது, அது பிரசங்கிக்கப்பட்ட விதமாகவே அதை முற்றிலுமாக ஏற்றுக்கொள்ளவேண்டும். ஒரு வேளை அது ஜீவவார்த்தைக்கு முரணாக இருந்தாலும் சரி, அதை கர்த்தர் அனுமதித்ததினால் அதை ஏற்றுக்கொள்ளவேண்டும். அதாவது வேதவாக்கியங்களுக்கு முரணாக எதும் செய்தியில் காணப்பட்டாலும் நாம் அவர் பிரசங்கித்தவண்ணமாகவே ஏற்றுக் கொள்ளவேண்டும் என்கிறார்கள். லவோதிக்கேயா சபை காலத்து மணவாட்டிக்கு இந்த **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** குறித்த செய்தி பிரசங்கிக்கப்பட்ட பின்பு, அந்த செய்தியை எழுத்து வடிவத்தில் வார்த்தையாக கொண்ட இந்த **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** புத்தகமே பரிசுத்த வேதாகமம் என்கிறார்கள். கிறிஸ்துவின் மணவாட்டி இந்த **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** புத்தகத்தை மட்டும் தியானித்தால் போதும் என்கிறார்கள். இனி கிறிஸ்துவின் மணவாட்டிக்கு நமது கரங்களில் உள்ள பழைய ஏற்பாடும் புதிய ஏற்பாடும் அடங்கிய பரிசுத்த வேதாகமம் தேவையில்லை. இதில் மறைக்கப்பட்டிருந்த அனைத்து சம்பவங்களும் நமக்கு வெளிப்படுத்தப்பட்டு அவைகள் இந்த **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** புத்தகத்தில் உள்ளது. ஆதலால் இனி கிறிஸ்துவின் மணவாட்டிக்கு **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** புத்தகமே போதும், பரிசுத்த வேதாகமம் தேவையில்லை என்கிறார்கள். பரிசுத்த வேதாகமத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த, மறைபொருளாய் இருந்த சம்பவங்கள் அனைத்தும் **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** செய்தியில் வெளிப்படுத்தப்பட்டுவிட்டதினால் இதுவே மணவாட்டிக்கு பரிசுத்த வேதாகமம் என்கிறார்கள். இரகசியங்கள் மறைக்கப்பட்டிருந்த புத்தகம் (பரிசுத்த வேதாகமம்) மணவாட்டிக்கு இனி தேவையில்லை. இரகசியங்கள் வெளிப்படுத்தப்பட்டுள்ள **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** புத்தகமே போதும் என்கிறார்கள். இவர்களின் இருதயம் தேவனுக்கு முன்பாக செம்மையாய் இல்லை. கசப்பான பிச்சிலும் பாவக்கட்டிலும் அகப்பட்டிருக்கிறார்கள். பாருங்கள் பிசாசு எந்த அளவிற்கு இவர்கள் இருதயத்தை ஆட்கொண்டு, இவர்கள் மூலமாக மக்களை வஞ்சிக்கிறான் என்று. **இதுதான் கொடிதான வஞ்சகம்.**

10. பாருங்கள் நாம் சத்தியமுள்ளவரை அறிந்துக்கொள்ள, தேவனுடையகுமாரன் இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வந்தார். நமக்கு ஒரு பாலகன் பிறந்தார். நமக்கு ஒரு குமாரன் கொடுக்கப்பட்டார். கர்த்தத்துவம் அவர் தோளின் மேலிருக்கும். அவர் நாமம் அதிசயமானவர், ஆலோசனை கர்த்தா, வல்லமையுள்ள தேவன், நித்திய பிதா, சமாதானப் பிரபு. (ஏசா 9 : 6) இவரே அந்த சத்தியமுள்ளவரும், மெய்யான தேவனும் நித்திய ஜீவனுமாயிருக்கிறார். (1 யோ 5 : 20) ஆம், தேவன் ஒரு ஆவி (யோ 4 : 24) இந்த ஆவியாகிய தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டு, தேவகுமாரன் ஆனார் (1 தீமோ 3 : 16) ஆவியாகிய தேவன் மாம்சத்தில் வெளிப்பட்டு, தேவக்குமாரனானதால், அவர் இன்னொரு தேவனாகிவிடவில்லை. தேவத்துவத்தில் இரண்டாவது நபராகவும் ஆகிவிடவில்லை. ஏனென்றால் தேவத்துவத்தின் பரிபூரணமெல்லாம் சரீரபிரகாரமாக கிறிஸ்துவுக்குள் வாசமாயிருக்கிறது (கொலோ 2 : 9) பிதா, குமாரன் ஸ்தானத்தை உடையவரானார். தேவனும் தேவகுமாரனும் பதவிகளில் வேறுபட்டாலும் ஆள்தத்துவத்தில் ஒருவராகவே இருக்கிறார். நான் கணவன், தகப்பன், சுவிசேஷகன் என மூன்று பதவிகளை உடையவனாக இருந்தாலும், ஆள்தத்துவத்தில் ஒருவனே. ஒருவனுடைய பல பதவிகளை கொண்டு பல ஆள்தத்துவங்களை உருவாக்க முடியாது. ஆக பிதாவுக்கும் குமாரனுக்கும் உள்ள ஒருத்துவ ஆள்தத்துவத்தை மறுதலிக்கிறவனே அந்திக்கிறிஸ்து (1 யோ 2 : 22) பாருங்கள் குமாரன் பிதாவிலும், பிதா குமாரனிலும் இருக்கிறார்கள். மேலும் இயேசு நானும் பிதாவும் ஒன்றாய் இருக்கிறோம் என்கிறார் (யோ 10 : 30) . இந்த ஐக்கியத்தை யாரும் பிரிக்கமுடியாது. கிறிஸ்தவ ஸ்தாபன சபைகளும், அதன் தலைவர்களும் பிரிக்க முடியாது. எனக்குள் உள்ள கணவன், தந்தை ஐக்கியத்தை யாரும் பிரிக்க முடியாது. அது

ஒன்றாகவே இணைந்தது. அதைப்போன்றுதான் பிதாகுமாரன் ஒன்றாக இணைந்த ஆள்தத்துவத்தை கொண்டது. இந்த பிதாவுக்கும் குமாரனுக்கும் உள்ள ஒருத்துவ ஆள்தத்துவத்தை மறுதலிக்கிறவர்கள் தான் அந்திக்கிறிஸ்து. ஆம், தேவத்துவத்தில் மூவர் உண்டு, மூன்று ஆள்தத்துவங்கள் உண்டு என்று போதித்துவரும் நம் மத்தியில் உள்ள கிறிஸ்துவ ஸ்தாபன சபைகள் மற்றும் அதன் ஊழியர்கள் அனைவரும் வேதவாக்கியங்களின் அடிப்பையில் அந்திக்கிறிஸ்துவே. ஆனால் இந்த உபதேசத்தில் தான் இந்த உலகம் முழுவதும் மூழ்கிக்கிடக்கிறது. ஏனென்றால் இந்த உலகம் முழுவதும் பொல்லாங்கனுக்குள் கிடக்கிறது என வேதம் கூறுகிறது. (1 யோ 5 : 19).

11. இப்பொழுது கவனியுங்கள் எனக்குள் இருந்த சிந்தை / எண்ணங்கள் வார்த்தையாகி, இப்பொழுது அதை எழுத்து வடிவத்தில் **இயேசுவே வாரும்** மூலமாக நீங்கள் வாசிக்கிறீர்கள். இப்பொழுது இந்த இதழில் நீங்கள் வாசிக்கிறது என்ன? அவைகள் யாவும் எனக்குள் இருந்த சிந்தையே. அவ்வாறாவே அந்த நித்திய ஜீவனுக்குள், ஆவியாகிய தேவனுக்குள் இருந்த சிந்தை / எண்ணங்கள் வெளிப்பட்டு வார்த்தையானது. அதை தான் ஆதியிலே வார்த்தையிருந்தது, அந்த வார்த்தை தேவனாயிருந்தது என யோ 1 : 1 ல் வாசிக்கிறோம். இப்பொழுது அந்த வார்த்தை தேவஆவியினால் அருளப்பட்டு எழுத்து வடிவத்தில் பரிசுத்த வேதாகமமாக நம்முடைய கரத்தில் உள்ளது. (2 தீமோ 3 : 16) ஆக நம்முடைய கரத்தில் உள்ள இந்த பரிசுத்த வேதாகமம் தேவனுடைய வார்த்தையாகும். இது தேவனுடைய சிந்தையை பிரதிபலிக்கின்றது. தேவன் நம்முடைய கரத்தில் தவழ்கின்றார். என்ன ஆச்சரியம்? ஆதலால் தான் இயேசு : வானமும் பூமியும் ஒழிந்து போகும், என் வார்த்தையோ ஒழிந்து போவதில்லை என லூக் 21 : 33 ல் கூறுகிறார். மேலும் சங்கீதக்காரன் : கர்த்தாவே உமது வசனம் என்றென்றைக்கும் வானங்களில் நிலைத்திருக்கிறது என சங். 119 : 89 ல் கூறுகிறான். பாருங்கள் நம்முடைய கரத்தில் உள்ள பரிசுத்த வேதாகமம் / தேவனுடைய வார்த்தை குறித்து மேலும் இயேசு : நான் உங்களுக்கு சொல்லுகின்ற வசனங்கள் ஆவியும் ஜீவனாயும் இருக்கிறது என்கிறார். (யோ 6 : 63) தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள். அவருடைய வசனங்களோடு ஒன்றையும் கூட்டாதே. கூட்டினால் அவர் உன்னை கடிந்துக்கொள்வார். நீ பொய்யனாவாய் என தாவீதின் குமாரனும், இஸ்ரவேலின் இராஜாவுமாகிய சாலொமோன் நீதி 30 : 5, 6 வசனங்களில் கூறுகிறான். சங்கீதக்காரனாகிய தாவீதும் கர்த்தருடைய சொற்கள் மண்குகையில் ஏழு தரம் உருக்கி, புடமிடப்பட்ட வெள்ளிக்கொப்பான சுத்த சொற்களாயிருக்கிறது என்கிறான். (சங். 12 : 6)

12. பின்பு இந்த வார்த்தை காலம் நிறைவேறின போது "அந்த வார்த்தை மாம்சமாகி, கிருபையினாலும், சத்தியத்தினாலும் நிறைந்தவராய், நமக்குள்ளே வாசம் பண்ணினார்" (யோ 1 : 14) அவர் உலகத்தில் இருந்தார், உலகம் அவரால் உண்டாயிற்று. உலகமோ அவரை அறியவில்லை (யோ 1 : 10) இந்த உலகம் அவரை அறியாததினால் தேவனுடைய பிள்ளைகளையும் (அப் 2 : 38) அறியவில்லை (1 யோ 3 : 1) ஆதலால் இந்த உலகம் நம்மை அறியாததினால் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. மக்கள் நம்மை புறக்கணிப்பதில் ஒன்றும் விநோதமில்லை.

13. பிரியமானவர்களே, அடுத்து நம்முடைய கரத்தில் உள்ள தேவனுடைய வார்த்தையைக் கொண்ட பரிசுத்த வேதாகமம் கடந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் ஆகிய இம்மூன்று காலங்களுக்கும் உரிய சம்பவங்களை கொண்ட ஒரு திர்க்கதரிசன புத்தகம் ( வெளி 1 : 19) ஆதலால் இது ஒரு குறிப்பிட்ட காலத்திற்குரிய சம்பவங்களை கொண்ட புத்தகம் என கூறக்கூடாது. ஆதலால் இது ஏழாம் சபை காலத்து மணவாட்டிக்கு உரியது அல்ல என கூறமுடியாது. அவ்வாறு கூறுவது பிசாசு. இந்நாட்களில் பிரன்காம், பிரன்காம், இக்காலத்திற்குரிய செய்தி, செய்தி, தாங்கள் கிறிஸ்துவின் மணவாட்டி என கூறிக்கொண்டு, தேவனுடைய வார்த்தை, இக்காலத்திற்குரிய செய்தியை கூட்டியும், குறைத்தும், தங்களுக்கு கிடைத்த வெளிப்பாடு என தாங்கள் யுகித்ததை கூறிக்கொண்டு கள்ளகபடமுள்ள வேலையாட்கள் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களையும் வஞ்சிக்கத்தக்கதான மாறுபாடான / தவறான போதனைகளை கூறிக்கொண்டு மக்களை வஞ்சித்து வருகிறார்கள். ஆனால் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை இவர்கள் நிச்சயமாக வஞ்சிக்க முடியாது.

14. ஏழாம் சபைக்கால தூதனும், தீர்க்கதரிசியுமாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்காமினால் சபைக்கு பிரசங்கிக்கப்பட்டு, அந்த செய்தியை எழுத்து வடிவத்தில் கொண்டுள்ள **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** என்ற புத்தகம், திவ்யவாசகனாகிய யோவானுக்கு வெளிப்படுத்தின விசேஷத்தில் 5 அதி. யில் கூறப்பட்டுள்ள ஏழு முத்திரைகளினால் முத்தரிக்கப்பட்ட புத்தகத்தில் உள்ள ஏழு முத்தரைகளின் வெளிப்பாட்டை கொண்ட புத்தகம் ஆகும். இந்த புத்தகம் **கர்த்தர் உரைக்கிறார்** என்பதை கொண்டது. ஆதலால் இந்த புத்தகத்தில் தொடக்கம் முதல் முடிவு வரை நாம் எதையும் நிராகரிக்கக்கூடாது. அதை, அது எழுதப்பட்ட / பிரசங்கிக்கப்பட்ட பிரகாரமே ஏற்றுக்கொள்ளவேண்டும். கிறிஸ்துவின் மணவாட்டிக்கு இது இன்றைய பரிசுத்த வேதாகமம் என்பது போன்ற வேற்றுமையான உபதேசங்களை போதித்து பிசாசு மக்களை வஞ்சித்து வருகிறான். இது பரிசுத்த வேதாகமத்தில் ஆதி 1 : 1 முதல் வெளி 22 : 21 வரை அடங்கியுள்ள மறைக்கப்பட்டுள்ள வேதஇரகசியங்கள்

அனைத்தையும் வெளிப்படுத்தின புத்தகம் என்றும் கள்ளகபடமுள்ள வேலையாட்கள் கூறுவது போன்று கூறமுடியாது. ஏழு முத்திரைகளின் வெளிப்பாட்டை ஏழு தூதர்களிடமிருந்து பெற்று, அவ்வண்ணமாக பெற்ற வெளிப்பாட்டை அவர் செய்தியாக பிரசங்கிக்கிறார், அன்றன்று பிரத்தியேகமாக அதற்கென்றே அனுப்பப்பட்ட தேவதூதன் மூலமாக வெளிப்பாட்டை பெற்று, அதை செய்தியாக பிரசங்கிக்கிறார். அவ்வளவுதான். ஆதலால் இது **கர்த்தர் உரைக்கிறார்** என்பதை கொண்ட புத்தகம் என்று கூறமுடியாது. ஏனென்றால் இந்த புத்தகத்தில் தவறுகள் உண்டு. ஒன்றுக்கொன்று மாறுபட்ட போதனைகள் உண்டு. அவைகள் அறியாமலே நடந்தவைகள் ஆகும். ஆதலால் அவைகள் பின்னால் திருத்தப்படுகின்றன. ஆனால் தவறுகள் அறியாமல் சொற்தவறுகளினால் நடந்தது ஆகும். ஒரு புத்தகம் **கர்த்தர் உரைக்கிறார்** என்பதை கொண்டிருக்குமானால் அது வானமும் பூமியும் ஒழிந்து போகும், என் வார்த்தையோ ஒழிந்து போவதில்லை (லூக் 21 : 33) என்பதை கொண்டதாக இருக்கும்.

15. இப்பொழுது கவனியுங்கள் **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** என்ற புத்தகத்தில் **ஏழு சபை காலங்களுக்கும் ஏழு முத்திரைகளுக்கும் இடையில் உள்ள பிளவு** என்ற செய்தியில் பக்கம் 106, பத்தி 3, பிரசங்கிக்கப்பட்ட நாள் 17.03.1963, இதில் எழு சபையின் காலங்களில் ஏழு தீர்க்கதரிசிகள் புறப்பட்டு சென்றனர் - ஏழு ஞானதிருஷ்டிக்காரர்கள். கண்கள். ஆகவே கடைசி சபையின் காலத்தில் உள்ளவரும் ஒரு ஞானதிருஷ்டிக்காரராகவே இருக்கவேண்டும். அடுத்து மறுநாள் 18.03.1963 ல் பிரசங்கிக்கப்பட்ட **முதலாம் முத்திரை,** பக்கம் 149, பத்தி 2 ல் கடைசி சபையின் காலத்து தூதன் ஓர் சீர்திருத்தக்காரன் (Reformer) அல்ல. அவன் ஒரு தீர்க்கதரிசி (Prophet). தேவனுடைய வார்த்தை முழுவதும் அவர்களிடத்தில் (முந்திய காலத்து சபை தூதர்களிடத்தில்) வரவில்லை. ஏனென்றால் அவர்கள் தீர்க்கதரிசிகள் அல்ல. அவர்கள் சீர்திருத்தக்காரர்கள் என்கிறார். அதாவது ஏழாவது சபை காலத்து தூதன் மட்டும் தீர்க்கதரிசி. ஏனைய சபை காலத்து தூதர்கள் யாவரும் சீர்திருத்தக்காரர்கள் என்கிறார். அப்படியானால் முதல் சபை எபேசுவின் தூதன் அப். பவுலும் ஒரு சீர்திருத்தக்காரனா? மீண்டும் 25.11.1965 ல் பிரசங்கித்த **கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு** பக்கம் 67, பத்தி 1 ஐ கவனியுங்கள். இங்கு ஏழு சபை காலங்களில் சீர்திருத்தக்காரர்கள் தோன்றி, முடிவில் ஏழாம் சபையில் காலத்தில், இந்த நேரத்தில், அது வெளி.10 ல் உரைத்துள்ளது நிறைவேறவேண்டியதாய் உள்ளது. அந்த ஒரு மாற்றம் மாத்திரமே. அது அவ்வாறே நிகழ்ந்தது. பாருங்கள் ஒரு சம்பவம் குறித்து மூன்று வித்தியாசமான போதனைகள். அதுவும் **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** என்ற புத்தகத்தில். காரியங்கள் இப்படியிருக்க **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** என்ற புத்தகம் **கர்த்தர் உரைக்கிறதாவது** என்பதை கொண்டுள்ள ஒரு புத்தகமாக இருக்கமுடியுமா? முடியாது. முடியவே முடியாது. முடியும் என்பவன் பிசாசே.

16. மேலும் ஒரு சம்பவத்தையும் இங்கு குறிப்பிட விரும்புகிறேன் முதலாம் முத்திரையின் வெளிப்பாடு குறித்து சகோ. பிரன்காம் 18.03.1963 அன்று பிரசங்கித்தார். அந்த செய்தியில் பக்கம் 215, பத்தி 75ல் கீழ்கண்டவாறு கூறுகிறார். பின்னர் வேதத்தில் எழுதப்படாத ஏழு இரகசியமான இடிமுழக்கங்கள். அது சரி. ஆகவே எடுத்துக்கொள்ளப்படுவதற்கான விசுவாசத்திற்காக மணவாட்டியை ஒன்று சேர்ப்பதற்கென்று, இந்த கடைசி நாட்களில் அந்த ஏழு இடிமுழங்களின் மூலமாக வெளிப்படுத்தப்படும் என்று நான் நம்புகிறேன் என்கிறார். அதாவது இங்கு வேதத்தில் எழுதப்படாத ஏழு இரகசியமான இடிமுழங்கள் என்கிறார். மேலும் கீழ்கண்ட செய்தியில் இந்த ஏழு இடிமுழங்களின் சத்தங்கள் ஒன்று மாத்திரமே, புத்தகத்துடன் ஒட்டிக்கொண்டு, வெளிப்படுத்தப்படாமல் உள்ளது. அவை அந்த புத்தகத்தில் எழுதப்படவில்லை (**ஐயா, இதுதான் முடிவின் அடையாளமா?** பக்கம் 96, பத்தி 306, நாள் : 30.12.1962) ஆனால் இந்த இரு போதனைகள் குறித்து, இதை தவறாக கூறிவிட்டேன் என பின் மற்றொரு செய்தியில் தன் தவறை உணர்ந்து, அந்த தவறை திருத்திக்கொள்கிறார். பாருங்கள், புத்தகத்தின் புறம்பாக முத்தரிக்கப்பட்டிருந்தது எனவும், அவை (முத்தரிக்கப்பட்டிருந்த இரகசியங்கள்) வேதத்திலே எழுத்தப்பட்டிருக்காத காரியங்களாக இருக்கும் என்றும் நான் எப்பொழுதும் நினைப்பேன் : ஆனால் அவர் அவ்விதமாக செய்யமாட்டார் என்று விளங்க வைக்கப்பட்டது. அவை வேதத்திலே எழுதப்பட்டிருக்கும் காரியங்கள் அல்ல. அவை வேதத்திலே மறைத்து வைக்கப்பட்டிருக்கும் காரியங்களாக இருக்கின்றன. ஆகவே ஒருவன் இத்துடன் ஒரு வார்த்தையை கூட்டினாலும் அல்லது எதையாகிலும் எடுத்துப்போட்டாலும் (சகோ. பிரன்காம் வெளி. 22 : 18, 19 வசனங்களை குறிப்பிடுகிறார்) ... ஆகவே இந்த ஏழு சபையின் காலங்களாக வேதத்திலேயே இருக்கும் இரகசியமாக அவை இருக்கின்றன. செய்தி : **ஏற்றகாலத்தின் ஆவிக்குரிய ஆகாரம்,** பக்கம் 24, 25, பத்தி 83, நாள் : 18.07.1965 இங்கு நன்கு கவனியுங்கள் : **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** செய்தியில், 1962 டிசம்பர் மற்றும் 1963 மார்ச் மாதம் பிரசங்கித்த செய்தியில் உள்ள தவறுகளை 1965 ஜுலை மாதத்தில் திருத்துகிறார். காரியம் இப்படியிருக்க, **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** புத்தகம் எப்படி தொடக்கம் முதல் முடிவு வரை **கர்த்தர் உரைக்கிறார்** என்பதை கொண்டதாக இருக்கமுடியும்? ஆனால் பரிசுத்த வேதாகமம் ஆதி. 1 : 1 முதல் வெளி. 22 : 21 வரை **கர்த்தர் உரைக்கிறார்** என்பதை கொண்டதான புத்தகம்.

17. பரிசுத்த வேதாகமத்திற்கு ஒப்பாக அல்லது இதற்கு ஒரு மாற்று புத்தகமாக சகோ. பிரன்காம் பிரசங்கித்த **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** புத்தகத்தை கொண்டு வருபவர்கள் வஞ்சகர்கள், ஏமாற்றுக்காரர்கள்,

அவர்கள் பிசாசே. இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள விசுவாசிகளுக்கு சகோ. பிரன்காம் பிரசங்கித்த செய்திகள் தான் வேதாகமம் என கூறும் பேலியாளின் மக்களை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். ஆனாலும் இவர்களை நம்பி ஒரு கூட்டம் ஜனங்கள் இருக்கத்தான் செய்வார்கள். இந்த கூட்டத்தை சார்ந்தவர்கள் தங்கள் ஆத்துமாவை மரணத்துக்கு ஆயத்தப்படுத்திக்கொண்டிருக்கிறார்களேயன்றி, அவர்கள் கர்த்தராகிய கிறிஸ்துவின் இரகசிய வருகைக்காக ஆயத்தப்படுத்துகிறவர்களாக அல்ல. இவர்களுக்காக நான் பரிதபிக்கிறேன். என் மூலமாக கேள்விப்பட்டதை விசுவாசித்தவர்கள் யார்?

18. **இந்த கள்ளகபடமுள்ள வேலையாட்களின் இரண்டாவது வஞ்சக உபதேசம் என்வென்றால் :** சகோ. பிரன்காமின் ஊழியத்தில் 28.02.1963 அன்று வானத்தில் வட்டமிட்டுக்கொண்டிருந்த அந்த கூர்நுனி கோபுர வடிவில் காணப்பட்ட மேகம் வெளி. 10 : 1 ல் கூறப்பட்டுள்ள பலமுள்ள வேறொரு தூதன் வானத்திலிருந்து இறங்கிய காட்சி என்பதாகும். இந்த உபதேசம் இந்நாட்களில் இக்காலத்திற்குரிய செய்தியிலிருக்கிறோம் என கூறும் மக்களில் பெரும்பாலானோர் மத்தியில் காணப்படுகிறது. ஆனால் இதுவும் பிசாசின் உபதேசமே. பாருங்கள் இது தவறு. இக்காலத்திற்குரிய செய்தியை கொண்டே உங்களுக்கு விளக்கி காண்பிக்கிறேன். நான் அந்த ஏழு தூதர்களை ஒரு கோபுர வடிவில் கண்டேன் (**இடைவெளியில் நின்றல்,** பத்தி 80, நாள் 23.06.1963) அது கூர்நுனி கோபுரத்தைப்போன்று நாளுக்கு நாள் சிறுபான்மையோரை கொண்டதாய் குறுகிக்கொண்டே வருகிறது... இது ஒரு அடையாளமாக திகழ்கின்றது... கூர்நுனி கோபுரம் ஒரு அடையாளமாக திகழ்கின்றது. (**எக்காளப்பண்டிகை,** பக்கம் 27 ன் கடைசி பகுதி மற்றும் பக்கம் 28 ன் தொடக்கப்பகுதி. நாள் 19.07.1964) **இயற்கைக்கு மேம்பட்ட மேகம் :** பிப்ரவரி 28, 1963 அன்று திகைப்பூட்டுகிற ஒரு மேகம் அரிசோனாவிற்கு மேலே ஆகாயத்தில் காட்சி அளித்தது. சகோதரன் பிரன்காம் ஏப்ரல் 18, 1965 அன்று அளித்த **இது சூரிய உதயம்** என்ற செய்தியில், இந்த மேகம் ஏழு தேவதூதர்கள் அடங்கிய ஒரு கூட்டத்தால் உருவாக்கப்பட்டது என்பதை விளக்குகிறார்.



19. **ஏழு தூதர்கள் வானத்திலிருந்து இறங்கி வந்த சம்பவம் குறித்து சகோ. பிரன்காம் கூறுவதாவது :** ஒரு நாள் அதிகாலை, அதாவது சூரியன் உதிக்கும் வேளை காலை 7.00 மணியளவில் வேட்டைக்காக மலைமேல் சகோ. ஃபிரட் சோத்மேன் உடன் சென்றபோது, திடீரென்று ஒரு வெடி சத்தத்தை கேட்டதாகவும், அது தேசம் முழுவதையும் அசைத்தது என்கிறார். அப்பொழுது அவர் முன் ஏழு தூதர்கள் நின்றார்கள். அவர் பூமிக்குமேல் சற்று உயரத்தில் நின்றது போல் கூறுகிறார். மேலும் அபூர்வ மேக வளையம் வானத்தின்மேல் ஒரு அடையாளம் என்றே கூறுகிறார் (There shall be signs in the heaven above) இது குறித்து நீங்கள் Doing God a service without His will என்ற செய்தியில் பத்தி 63 - 83 வரை தியானிக்கலாம். இது 27.11.1965 அன்று பிரசங்கிக்கப்பட்டது. மேலும் இந்த செய்தி இதுவரை தமிழில் மொழிபெயர்க்கப்படவில்லை என நினைக்கிறேன். மேலும் சத்தியம் ஒன்று வெளிப்படும் போது, அது அடையாளங்களினால் உறுதிப்படுகிறது ( **ஏழு முத்திரையில் நான்காம் முத்திரை,** புதிய பதிப்பு, பக்கம் 485, பத்தி 59 நாள் 21.03.1963) அப்பொழுது மனுஷகுமாரனின் அடையாளம் வானத்தில் காணப்படும். மனுஷகுமாரன் வெளிப்படும் நாள். லூக் 17 : 30 (**தேவசித்தத்திற்கு புறம்பாக அவருக்கொரு சேவை செய்தல்,** பக்கம் 52, பத்தி 167 நாள் 16.07.1965)

20. இப்பொழுது அந்த மேகத்தில் கிறிஸ்துவின் முகத்தோற்றத்தை கவனியுங்கள். அவருடைய சிரசும் மயிரும் வெண்மையாக வெளி. 1 : 14 க்கு ஏற்ற நியாயாதிபதியின் தோற்றமாக காணப்பட்டது. ஆனால் வெளி. 10 : 1 ன் தோற்றம் அவருடைய சிரசின் மேல் வானவில் கொண்டதாக உள்ளது. இது உடன் படிக்கையின் அடையாளம். அதாவது அவர் உடன்படிக்கையின் தூதனாக காட்சியளிக்கிறார். பலமுள்ள வேறொரு தூதன் என்று கூறப்பட்டிருபதால் அவர்ஒரு செய்தியுடைய தூதனாக வருகிறார். யாருக்கு? இஸ்ரவேல் ஜனங்களுக்கு. புறஜாதிக்கு அவர் உடன்படிக்கையின் தூதன் அல்ல. தியானியுங்கள் **ஏழு முத்திரை - ஏழு சபை காலங்களுக்கும் ஏழு முத்திரைகளுக்கும் இடையே உள்ள பிளவு** பக்கம் 120, பத்தி 31, நாள் : 17.03.1963. மேலும் கவனியுங்கள், அன்று காலை எனக்கு முன்அறிவிக்கப்பட்டிருந்த அதே இடத்தில் ஏழு தூதர்கள் பரலோகத்திலிருந்து இறங்கி வந்தனர். அவர்கள் சுழற்காற்றில் மேலே சென்றனர். நாங்கள் கண்கூடாக கண்டோம். விஞ்ஞானம் அதை புகைப்படம் எடுத்தது. (**ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்படுதல்,** பத்தி 157, நாள் 04.12.1965) மேலும் கவனியுங்கள் நாம் வெளி. 10 : 1 ல் பலமுள்ள வேறொரு தூதன் இறங்கிவர காண்கிறோம். ஆனால் இங்கு ஏழு தேவதூதர்கள் வானத்திலிருந்து இறங்கி வந்தனர். சகோ. பிரன்காமை சந்தித்தனர். அவர்கள் பணி முடிந்தது. மேலே ஏறி சென்றனர். அப்பொழுதுதான் அந்த மேகவட்டம் ஏற்பட்டது. மாறாக அந்த தூதர்கள் இறங்கி வரும்போது அந்த மேகவளையம் காணப்படவில்லை. அடுத்து இந்த சம்பவம் 28.02.1963 அன்று நடந்தது. ஆனால் தீர்க்கதரிசியும் ஏழாம் சபைக்கால தூதனுமாகிய சகோ. பிரன்காம் : **அவர்**

**10. அதி. இறங்கி வருகிறார். அந்த தூதன் பிரத்தியட்சமாவதற்கு சமயம் வந்து விட்டது. நாம் மிக அருகாமையில் இருக்கிறோம், நான் கூறுவது சரி என ஏழு சபையின் காலங்களுக்கும் ஏழு முத்திரைகளுக்கும் இடையே உள்ள பிளவு பக்கம் 125 ன் தொடக்கப்பகுதியில் பத்தி 47 ல், 17.03.1963 ல் பிரசங்கிக்கப்பட்ட செய்தியில் கூறுகிறார். இந்த கள்ளகபடமுள்ள வேலையாட்கள் வெளி. 10 : 1 ன் தூதன் 28.02.1963 ல் இறங்கிவிட்டார் என்கிறார்கள். ஆனால் தீர்க்கதரிசியோ 17.03.1963 ல் அவர் பிரத்தியட்சமாகும் சமயம் மிக அருகாமையில் இருக்கிறது என்கிறார். ஆக இந்த முரண்பாடுகள் பிசாசினுடையதே.**

21. ஆதலால் கிறிஸ்துவுக்குள் எனக்கு பிரியமானவர்களே 28.02.1963 ல் தோன்றிய மேகவட்டம் வெளி 10 : 1 ன் பலமுள்ள வேறொரு தூதனின் தோற்றம் என்ற உபதேசத்தை நம்பி மோசம் போகாதீர்கள். இது ஒரு அடையாளமேயன்றி வேறொன்றும் இல்லை. செய்தியை உறுதிப்படுத்த, வார்த்தையை உறுதிப்படுத்த வானத்தில் கொடுக்கப்பட்ட ஒரு அடையாளம். இப்பொழுது அவர் பூமிக்கு வரமாட்டார். ஆயிரம் வருட அரசாட்சிவரைக்கும் மேசியா பூமிக்கு வரமாட்டார். நாம் ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டு கர்த்தரை அங்கு சந்திப்போம். அவர் பூமிக்கு வருவதில்லை. அவர் மணவாட்டியை ஆகாயத்தில் இழுத்துக்கொள்கிறார். **கே.ப. 123,** பக்கம் 115, பத்தி 448, நாள் 12.01.1961. பாருங்கள் ஆயிரம் வருட அரசாட்சி வரை கிறிஸ்து பூமிக்கு வருவதில்லை.

22. **இவர்களது மூன்றாவது கள்ளகபடமுள்ள உபதேசம் என்னவென்றால் :** நாம் ஏனோக் தேவனோடு தன்னுடைய வாழ்நாட்களாகிய 365 ஆண்டுகளில் 300 ஆண்டுகள் தேவனோடு சஞ்சரித்தான் என ஆதி 5 : 22 ல் தியானிக்கிறோம். இதை தவறாக சகோ. பிரன்காம் 500 ஆண்டுகள் என தனது கேள்வி பதில் 197 நாள் 24.03..1963 ல் கூறுகிறார். நிச்சயமாக சகோ. பிரன்காமிற்கு 300 ஆண்டுகள் என தெரியும். ஆனாலும் அது அவருடைய வாயிலிருந்து வந்த சொற்பிசகு என்பதை ஆவிக்குரியவர்கள் அறிவார்கள். இதை சகோ. பிரன்காம் கூறும்போது "It was just simply a mumble of speech" என கூறுகிறார். ஆனால் ஆட்டுத் தொழுவத்திற்குள் வேறு வழியாய் நுழைந்த கள்ளர்கள் நோ நோ மணவாட்டி யுகமாகிய இக்காலத்தில் வேதவாக்கியங்களை விட சகோ. பிரன்காம் பிரசங்கித்த செய்திதான் முக்கியம். அவருடைய செய்தியில் கூறப்பட்டுள்ளதை நாம் அப்படியே ஏற்றுக்கொள்ளவேண்டும். அவருடைய செய்தி இக்காலத்திற்குரிய நடபடிகள் (Acts). **ஆதலால் சகோ. பிரன்காம் கூறியபடி 500 என்பது தான் முற்றிலும் சரி. அதை நாம் அப்படியே விசுவாசிக்க வேண்டும் என பிசாசு நம்முடைய விசுவாசத்தை தேவன் மேல், அவருடைய வார்த்தையின் மேல் வைப்பதை அப்புறப்படுத்தி அதை சகோ. பிரன்காம் தன்னுடைய சொற்பிசகினால் சொல்லிய வார்த்தையின் மேல் விசுவாசத்தை கொண்டுவந்து, நம்மை நித்திய ஜீவனுக்கு அபாத்திரராக்குகிறான்.** ஆதலால் இப்படிப்பட்ட உபதேசங்களை கொண்டு வருபவர்களை உங்கள் வீட்டு வாசல்படியில் ஏற்றாதீர்கள். அவர்களுடன் ஐக்கியம் கொள்ளாதீர்கள். அவர்களுடைய உபதேசம் வஞ்சிப்பு ஆகும். இக்காலத்திற்குரிய வஞ்சிப்பை தேவன் அவர்கள் மூலம் அனுப்புவதை ஆவிக்குரியவர்கள் அறிவார்கள்.

23. **இவர்களது நயவஞ்சமான நான்காவது உபதேசம் என்னவென்றால் :** இந்த கள்ளகபடமுள்ள வேலையாட்கள் சகோ. மோசஸ் தயானந்தத்திடமிருந்து கற்றுக்கொண்ட பாடம் என்னவென்றால் : இஸ்ரவேல் புத்திரர், தேவனுடைய பலிபீடங்களை இடித்து, அவருடைய தீர்க்கதரிசிகளை பட்டயத்தால் கொன்று போட்டார்கள். தான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருகிறேன் என்று எலியா நினைத்தான். ஆனால் கர்த்தர் அவனிடம் பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தஞ்செய்யாதிருக்கிற வாய்களையுடைய ஏழாயிரம் பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன் என்று கூறினார் (1 இரா 19 அதி ) அது உண்மைதான். எலியாவின் நாட்களில் 7000 பேர் இரட்சிக்கப்பட்டவர்களாய் இருந்தார்கள். ஆனால் இந்த ஏழாவது சபை காலத்தில் 700 பேர் தான் இரட்சிக்கப்பட்டவர்கள். 700 பேர் என்பதை சகோ. பிரன்காம் **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** (புதிய பதிப்பு) செய்தியில் ஏழு இடங்களில் கூறுகிறார். ஏழு பூரணத்தை குறிக்கிறது. ஏழு முறை 700 என்று கூற கர்த்தர் சகோ. பிரன்காமை அனுமதித்தார். ஆதலால் ஏழாம் சபை காலத்தில் மணவாட்டியின் எண்ணிக்கை 700 என்பதாகும். அதாவது லவோதிக்கேயா சபைக்காலத்தில் நித்திரையடையாமல், மறுரூபப்படுகிறவர்களின் எண்ணிக்கை 700 என்கிறார். இது குறித்து நான்காம் முத்திரைக்கு சற்று திரும்புங்கள். இது **சகோ பிரன்காம் வாய் பிசகினால் உண்டான தவறுகள் :**

அ. 555 வது பக்கம் 365 வது பத்தி. அந்த காலத்தில் எலியாவின் போதகத்தின் மூலம் முழு உலகிலேயே அக்காலத்தில் 700 பேர் மாத்திரமே இரட்சிக்கப்பட்டனர் அது சரியா? ஆம், அது சரி.

ஆ. 366 வது பத்தி. தேவன் முத்திரைகளில் ஒன்றை உடைத்து, ஸ்தாபனங்களின் பிரமாணங்களுக்கு முன்னால் முழங்காற்படியிடாத 700 பேரை அவருக்காக வைத்திருக்கிறார் என்று காண்பித்தார்.

இ. 366 வது பத்தி. தேவன் எலியாவுக்கு அவருடைய புத்தகத்தை திறந்து, சற்று பொறு மகனே : ஒளிந்துக்கொண்டிருக்கும் 700 பேரை எனக்காக வைத்திருக்கிறேன். அவர்களுடைய பெயர்கள் உலக தோற்றத்திற்கு முன்னால் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டிருக்கின்றன. அவர்கள் எனக்கு சொந்தமானவர்கள் என்கிறார்.

ஈ. பக்கம் 556, பத்தி 370. ஸ்தாபனங்களின் கொள்கைகளுக்கு முழங்காற்படியிடாத - ஸ்தாபனங்களுடன் சேராத 700 பேரை எனக்காக வைத்திருக்கிறேன் என்பது உனக்கு தெரியுமா என்றார்.

உ. மேலும் அதே பத்தியில் 700 பேர் எடுக்கப்படுதலுக்கு ஆயத்தமாயுள்ளனர் என்கிறார்.

ஊ. மீண்டும் அதே பத்தியில் இந்த சந்ததியில் தெரிந்துக்கொள்ளப்பட்ட 700 பேர்களின் பட்டியலை வைத்திருக்கிறேன் என்கிறார்.

எ. நான்காது முறையாக மீண்டும் அதே பத்தியில் 700 பேர்கள் இருக்கின்றனர் (இக்காலத்தையொட்டி கூறவேண்டுமானால்) அவர்கள் மதசம்பந்தமான ஸ்தாபனங்களுக்கும் அவைகளின் கொள்கைகளுக்கும் முழங்காற்படியிடாமல் இருக்கின்றனர் என்கிறார். இந்த ஏழு இடங்களில் சகோ. பிரன்காம் எலியா தீர்க்கதரிசியோடு தேவன் இடைப்பட்டதை குறித்து விளக்கத்துக்காக, எடுத்துக்காட்டுக்காக, மாதிரிக்காக, மேற்கோள்காக்க , உதாரணத்திற்காக, உவமையாக திருஷ்ட்டாந்தப்படுத்தி அதை இக்காலத்துடன் பொருத்தி சம்பவத்தை விளக்கி 700 என்ற எண்ணிக்கையை தன்னுடைய வாய்ச்சொல் தவறுதலாக கூறியதை பிடித்துக்கொண்டு தங்கள் லௌகிக ஞானத்தினாலும், பரத்திலிருந்து இறங்காத ஞானத்தினாலும் விளக்கம் கொடுத்து மக்களை உண்மைக்கு புறம்பாக வழிதிருப்பி அநேக ஆத்துமாக்களை மரணத்துக்கு வழிநடத்துகிறார்கள்.

ஏ. இந்த ஏழு இடங்களில் மட்டுமல்ல, இன்னும் அவரது செய்திகளில் எலியா "நான் ஒருவன் மாத்திரம் மீதியாயிருக்கிறேன்" என்று கதறினான். ஆனால் பாகாலுக்கு முன்பாக முழங்காற்படியிடாத 700 பேரை தேவன் வைத்திருந்தார். உங்களுக்கு அது ஞாபகம் இருக்கிறதா? அது தெரிந்துக்கொள்ளப்பட்ட சபை வெளியே வருவதற்கு முன் அடையாளமாக உள்ளது (**நாம் ஏன் ஒரு ஸ்தாபனம் அல்ல,** பக்கம் 68, பத்தி 182, நாள் : 27.09.1958)

ஐ. நீங்கள் எலியாவாக இருப்பதற்கு தேவன் உங்களை அழைத்திருந்தாலொழிய நீங்கள் எலியாவாக இருக்க முயலவேண்டாம். ஆம், ஐயா நானும் யேகோவாவின் ஊழியக்காரன் என்று கூறவேண்டாம். அங்கு 700 பேர் இருந்தனர். அவர்களில் ஒருவனும் இதை செய்ய துணிச்சல் கொள்ளவில்லை (**தேவனுடைய வார்த்தையை கேட்டு, அதை அடையாளம் கண்டுகொண்டு, அதன்படி நடத்தல்,** பக்கம் 42, பத்தி 175, நாள் 21.02.1960) பாருங்கள் சகோ. மோசஸ் தயானந்தம் போன்று ஐந்துவகை ஊழியத்தில் அழைக்கப்படாதிருந்து, தன்னை அழைக்கப்பட்டவனாக காட்டிக்கொண்டு வரும் நபர்களின் குழப்பமே இது. அவர் வெளிநாட்டினர் வெளியிடும் புத்தகங்களை தமிழில் மொழிபெயர்த்து அதை பிரசுரித்து அதில் கிடைக்கும் வருமானத்தை தன் பிழப்பை நடத்திக்கொண்டிருந்தால் அதுவே நலம் என்பது என் கருத்து.

ஒ. தேவன் அவனுக்கு பிரதியுத்திரமாக, ஒரு நிமிடம் பொறு எலியா, நான் எனக்காக 700 பேர்களை மீதியாக மறைத்து வைத்திருக்கிறேன். யார்? அவர்கள் எனக்குரியவர்கள் என்பதை நீ அறிவாயா, பரிசேயர், சதுசேயர், பாப்தீஸ்ட்கள், மெத்தடிஸ்டுகள், பிரஸ்பிட்டேரியன்கள் ஆகியோர் நடுவில் அவர்கள் மறைந்துள்ளர். நான் அவர்களை வெளியே கொண்டு வருவேன். கொஞ்சம் பொறுத்திருந்து பார் அவர்கள் என்னுடையவர்கள். அவர்கள் இதுவரைக்கும் பாகாலுக்கு முன்பாக முழங்கால்படியிடவில்லை என்று கூறினார். (**இயேசு கிறிஸ்துவை பற்றிய வெளிப்படுத்துதல், தியத்தீரா சபையின் காலம்,** பக்கம் 147, பத்தி 81, நாள் 08.12.1960)

ஓ. **அவன்** அந்த சிறு மந்தையை தவிர மற்ற அனைவராலும் புறக்கணிக்கப்பட வேண்டும். எனென்றால் 700 பேரை கொண்டிருந்த எலியாவை போலவும், சிறுமந்தையை கொண்டிருந்த யோவானை போலவும் அவன் இருப்பான். (**கண்டும் காணாததுபோல விடப்படுகிற ஒரு உண்மையான அடையாளம்,** பக்கம் 63, பத்தி 224, நாள் : 12.11.1961) ஆம் இங்கு சகோ. பிரன்காம் **அவன்** என்று குறிப்பிட்டது இக்காலத்திற்குரிய எலியாவின் ஊழியமாகிய தன் ஊழியத்தை குறிப்பிடுகிறார்.

24. ஆக சகோ. மோசஸ் தயானந்தத்தின்படி சகோ. பிரன்காம் ஏழு முறை மட்டுமல்ல தனது செய்திகளில் சுமார் 11 முறை எலியாவின் நாட்களில் பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்கள், அவனை முத்தம் செய்யாதிருக்கிற வாய்களையுடைய 700 பேரை பெற்றிருப்பதாக தன் வாய்ச்சொல் தவறினால் கூறுகிறார். சுமார் 1958 லிருந்து 1963 வரை இந்த தவறை செய்கிறார். பின் தன் தவறை திருத்திக்கொள்கிறார். இப்பொழுதும் அது குறித்து கவனியுங்கள். **சகோ. பிரன்காம் தன் வாய் பிசகினால் உண்டான தவறை திருத்துதல் :**

அ. சென்ற இரவு பிரசங்கித்ததை மறுபடியும் விமர்சனம் செய்யலாம். அதற்கு முன்பு வேறொன்றைக் கூற விரும்புகிறேன். கேள்வி பெட்டியில் நான்கைந்து முக்கியமான கேள்விகள் இருந்தன. அதற்காக நான் மன்னிப்பு கேட்க விரும்புகிறேன். ஒலிநாடாவில் பதிவு செய்யப்படுகிறதா? ஒலிநாடாவில் பதிவு செய்யப்படுகிறதா? ஊழியம் செய்யும் சகோதரரிடமும், இங்குள்ள உங்களிடமும் நான் மன்னிப்பு கேட்க விரும்புகிறேன். அவர்கள் சொல்வதாவது, இன்று இரவு நான் எலியாவை குறித்து பேசிக்கொண்டிருக்கையில் எலியா ஒருவன் மாத்திரம் எடுத்துக்கொள்ளப்படுதலில் இருப்பதாக அல்லது இரட்சிக்கப்படயிருப்பதாக அவன் எண்ணினபோது, பாகாலுக்கு முன்பாக முழங்காற்படியிடாத 7000 பேரை கர்த்தர் அக்காலத்தில் வைத்திருந்தார். 7000 என்று சொல்வதற்கு பதிலாக 700 என்று சொல்லிவிட்டேன். அது உண்மையா? (சபையார் ஆமென் என்கிறனர்) நல்லது மக்களே, இதற்காக நிச்சயமாகவே நான் வருந்துகிறேன். அதைவிட நான் நன்றாக அறிந்துள்ளேன்.

அது 7000 என்று நான் அறிவேன். ஆகவே அது பேச்சின் புரியா ஒலிப்பு (Mumble of Speech) மாத்திரமேயாகும். நான் அதை சற்று சரியாக கூறவில்லை. நான் உங்களுக்கு நன்றி செலுத்துகிறேன். அதன் கருத்தாவது : நான் கூறுவதை நீங்கள் கவனமாய் கேட்பது எனக்கு மிகவும் மகிழ்ச்சி. நீங்கள் பாருங்கள், அது 7000 மாக இருக்கின்றது. (**ஆறாம் முத்திரை,** பக்கம் 668, 669, பத்தி 16, 17 நாள் 23.03.1963)

ஆ. சகோ. பிரன்காம், நீங்கள் தவறு செய்து விட்டீர்கள் என்று நினைக்கிறேன். அப்பொழுது 7000 பேர் இருக்கவில்லையா? நிச்சயமாக நான் 700 என்று சொல்லவில்லையே என்று நினைத்தேன். வேறொரு சகோதரன் 700 பேர்கள் எடுக்கப்படுதலில் செல்வார்கள் என்று நீர் தரிசனம் கண்டீரா? அந்த 7000 ... அதனை முன் அடையாளமாக்கிக் காண்பிக்கிறீரா என்று எழுதியிருந்தார். இவ்விதம் பேசியிருப்பதினால் ஜனங்கள் குழப்பமுறுகின்றனர். அது என்னை அந்த முனையின் மேல் வைக்கிறது என்பதே எனக்கு போதுமானதாயிருக்கிறது. (**ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு, ஆறாம் முத்திரை,** புதிய பதிப்பு, பக்கம் 669, பத்தி 18,19, 21) பாருங்கள் சகோ. பிரன்காம் 7000 என்பதை 700 என்று கூறியதற்காக மன்னிப்பு சபையரிடம் கேட்கிறார். அதற்காக வருந்துகிறேன் என்கிறார். இது பேச்சின் புரியா ஒலிப்பு என்கிறார். **அது 7000 தான் என உறுதிப்படுத்துகிறார். மேலும் 700 என ஏழாம் சபை காலத்திற்கு முன்அடையாளமாக கூறவில்லை எனவும் கூறுகிறார்.** ஆனாலும் ஏழாம் சபை காலத்தில் 700 பேர் தான் எடுத்துக்கொள்ளப்படுவார்கள் என சகோ. பிரன்காம் கூறுகிறார் என தன் சொந்த யூகத்தை கூறி, சகோ. பிரன்காம் கூறுவதை போன்று சகோ. மோசஸ் தயானந்தம் ஜனங்களை குழப்புகிறார். நம்முடைய தேவன் குழப்பத்தின் தேவன் அல்ல. ஆதலால் இந்த உபதேசத்தை தேவனுடைய சபையில் கொண்டு வந்த இவர் தன்னை தானே யேகோவாவின் ஊழியக்காரன் என்று அழைத்துக்கொள்ளும், அந்த அழைப்புக்கு பாத்திரவான் இல்லை என்பது நன்கு தெளிவாகிறது.

இ. அன்று ஒரு இரவு 7000 க்கு பதிலாக 700 என்று சொல்லிவிட்டேன் ... அது என்னை பயமுள்ளவனாக்குகிறது (Nervous) (**முத்திரைகள் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்,** பக்கம் 801, பத்தி 131, நாள் : 24.03.1963)

ஈ. சகோ. பிரன்காமே, பாகாலுக்கு தங்கள் முழங்கால்களை முடக்காதவர்கள் 7000 என்று சொல்ல நினைத்தீர்களா? அல்லது 700 ரா? 7000 என்றே சொல்ல நினைத்தேன். அதற்காக என்னை மன்னியுங்கள். பாருங்கள் அது ஒரு பேசும் தோரணையாயிருந்தது (**முத்திரைகளின் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்,** பக்கம் 830, பத்தி 227, 228, நாள் : 24.03.1963)

உ. தவறுக்காக என்னை மன்னியுங்கள். சகோதரர்களே தூரஇடங்களில் இந்த ஒலி நாடாக்களை கேட்கிறவர்களே, நண்பர்களே, கேளுங்கள், நான் அதை அவ்விதம் சொல்ல நினைக்கவில்லை. நான் **சுவிசேஷத்தின் ஒரு ஊழியக்காரன். அதை எத்தனை முறை பிரசங்கித்திருக்கிறேனோ, அத்தனை முறையும் அது 7000 என்பதை அறிந்திருந்தேன். நான் 700 என்று சொல்ல நேர்ந்தது. 700 என்று நான் நினைக்கவில்லை. நான் அதை வேதத்திலிருந்து படிக்கவில்லை. நான் பேசிக்கொண்டிருக்கும்போது என் மனதில் அவ்வண்ணம் வந்தது. 7000 என்பதற்கு பதிலாக 700 என்று கூறிவிட்டேன். அத்தகைய தவறுகளை நான் எப்பொழுதும் செய்கிறேன். நான் நிச்சயமாக ஏதும் அறியாதவன். ஆகவே நீங்கள் என்னை மன்னித்து விடுங்கள். பாருங்கள் அப்படி சொல்ல நான் நினைக்கவில்லை (முத்திரைகளின் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்,** பக்கம் 831, பத்தி 230, நாள் : 24.03.1963)

ஊ. 1 இராஜாக்கள் 19 - பாகாலுக்கு முன்பாக முழங்காற்படியிடாதவர்களின் எண்ணிக்கை ... 700 பதிலாக 7000. இப்பொழுது அதை கவனித்தீர்களா? **முத்திரைகளின் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்,** பக்கம் 830, பத்தி 330, நாள் : 24.03.1963)

எ. சகோ. பிரன்காமே, 1 இராஜாக்கள் 19 : 18 ம் வசனத்தில் "ஆனாலும் பாகாலுக்கு முடங்காதிருக்கிற முழங்கால்களையும், அவனை முத்தம் செய்யாதிருக்கிற வாய்களையுடைய 7000 பேரை இஸ்ரவேலிலே மீதியாக வைத்திருக்கிறேன்" என்று எழுதப்பட்டுள்ளதே? அந்த 700 யை குறித்து தயவு செய்து விவரிக்கவும் அது 7000 தான் (**முத்திரைகளின் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்,** பக்கம் 830, பத்தி 344,345, நாள் : 24.03.1963)

ஏ. சகோ. பிரன்காமே, எலியாவின் பிரசங்கத்தின் மூலம் 700 பேர் இரட்சிக்கப்பட்டனர் என்று சென்ற இரவு கூறினீர்கள். நீங்கள் அர்த்தம் கொண்டது 7000 பேர் அல்லவா? ஆம், அது சரி. அதற்காக என்னை மன்னித்துவிடுங்கள். (**முத்திரைகளின் மீதுள்ள கேள்விகளும் பதில்களும்,** பக்கம் 830, பத்தி 347, 348, நாள் : 24.03.1963)

ஐ. கடந்த இரண்டு, மூன்று நாட்களில் என்னவெல்லாம் சம்பவித்தன என்பதை நீங்கள் கவனியுங்கள். பாருங்கள் நான் கூறினேன் 700, 7000, 700. இக்காலை முயற்சித்துக்கொண்டிருந்தேன். அது ஜனங்கள் கண்டறிந்துக்கொண்டனர். பாருங்கள், ஆகவே நீங்கள் கவனித்துக்கொண்டிருகிறீர்கள் என்பதை காண்பிக்கிறது. இப்பொழுது, இன்னும் ஒன்று, வேறொருமுறை **புறா** என்று சொல்வதற்கு பதிலாக **ஆட்டுக்குட்டி** என்று சொல்லிவிட்டேன். ஆனால் அந்த தவறை நானே புரிந்துக்கொண்டேன். ஆனால் மற்றொரு தவறு நான் செய்தபோது, நான் தவறு செய்ததை நான் உணரவில்லை. ஆனால் பரிசுத்த ஆவியானாவர் என் சிந்தனைகளை கவர்ந்து என் தவறை உணர்த்தினார் (**ஏழாம் முத்திரை,** பக்கம் 901, பத்தி 39, நாள் : 24.03.1963)

ஒ. விசுவாசிகள் தங்களுடைய சந்ததியில் வார்த்தை மாம்சமாவதைக் கண்டு தேவன் பேசுவதை கேட்க

முடிகிறது. உண்மையான விசுவாசிகள் அந்த 7000 பேர் - அல்லது எலியா காலத்தில் இருந்தவர் 700 பேரா? 7000 என்பது தான் சரி. எலியாவின் காலத்திலிருந்த இருபது அல்லது முப்பது இலட்சம் பேர்களில் 7000 பேர் மாத்திரமே அது சரி என்று கண்டுக்கொள்ள முடிந்தது. அது உண்மை. நூற்றில் ஒரு பாகம் கூட இல்லை. **(தீர்க்கதரிசனத்தினால் தெளிவாக்கப்பட்ட சம்பவங்கள்,** பக்கம் 28, பத்தி 69, நாள் 01.08.1965)

ஓ. மேலும் நோவாவின் நாட்களில் நடந்தது போலமனுஷகுமாரனுடைய நாட்களிலும் நடக்கும். எட்டு பேர் மட்டுமே இரட்சிக்கப்பட்டார்கள். எலியாவின் நாட்களில் 7000 பேர் மட்டும் அதை ஏற்றுக்கொண்டனர் என்கிறார். (**பரிபூரண பலவீனத்தில் விளங்கும் பரிபூரண பலன்,** பத்தி 356, நாள் : 19.11.1961)

ஔ. இதோடு மட்டுமா? இன்னும் Voice of the sign பத்தி 21 ல், நாள் 13.03.1964 ல் எலியாவின் நாட்களில் அது 7000 மோ, அல்லது 700 ரோ அது என்னவாக இருந்தாலும் சரி அவர்கள் முழங்கால் படியிடவில்லை என்கிறார்.

25. பாருங்கள் சகோ. மோசஸ் தயானந்தம் ஏழு இடங்களில் சகோ. பிரன்காம் 700 பேர் என்று சொன்னதை குறிப்பிட்டு ஒரு தத்துவத்தை நிலைநாட்டுகிறார். ஏழு இடங்களில் மட்டும் என்று கூறியதே தவறு. அது சுமார் 11 இடங்கள். மேலும் சகோ. பிரன்காம் அதை மறுத்து 7000 பேர் என்பதை 11 இடங்களில் அங்கீகரிக்கிறாரே? 11 இடங்களில் செய்த தவறை 11 இடங்களில் திருத்துகிறாரே? அதற்கு சகோ. மோசஸ் தயானந்தம் என்ன பதில் சொல்ல இருக்கிறார்? அவர் தனது மொழிபெயர்ப்பு பணியை மட்டும் செய்துக்கொண்டிருந்தால் அது அவருக்கு நலமாயிருக்கும். அவருக்கு அளிக்கப்படாத பணிகளில் அவர் தலையிடவேண்டாம் என்பதே எனது தாழ்மையான வேண்டுகோள். ஏனென்றால் அவர் எனக்கு ஒரு அருமையான சகோதரன். அவரை கண்டிக்க வேண்டிய இடத்தில் அவரை கண்டிக்க நான் கடமைப்பட்டிருக்கிறேன்.

26. ஆதலால் எனக்கு பிரியமானவர்களே எலியாவின் காலத்தில் இரட்சிக்கப்பட்டவர்கள் 7000 பேர்கள். ஏழாம் சபை காலத்தில் இரட்சிக்கப்பட்டவர்கள், அதாவது கிறிஸ்துவின் மணவாட்டி, அதாவது எடுத்துக்கொள்ளப்படுதலில் பங்கு பெற போகிறவர்கள் 700 பேர் என்ற சகோ. மோசஸ் தயானந்தத்தின் உபதேசம் பேய்தனத்திற்கடுத்தது. இவர் சுவிசேஷகன் என்ற போர்வையில், தேவனுடைய சபையை மரணத்திற்கு வழிநடத்தி செல்ல முயற்சிக்கிறார். எதற்கும் நாம் தேவனுடைய வார்த்தைக்குதான் முக்கியதுவம் கொடுக்க வேண்டும். ஏனென்றால் தேவனுடைய வசனமெல்லாம் புடமிடப்பட்டவைகள். அவருடைய வசனங்களில் ஒன்றையும் நாம் கூட்டக்கூடாது. அப்படி கூட்டினால் நாம் பொய்யனாவோம் (நீதி 30 : 5, 6). இது குறித்து சகோ. பிரன்காம் கூறுவது என்ன? **எதற்கும் தேவனுடைய வார்த்தையே முடிவு :**

அ. எல்லா தேவனுடைய வசனத்திற்கும் செவிகொடுத்து, தேவனை பிரியப்படுத்தவே நான் விரும்புகிறேன். அவருடைய வார்த்தையை அறிந்து, அவருடைய வார்த்தையினாலே அவருக்கு ஊழியம் செய்து, அவரை பிரியப்படுத்துவதையே என் குறிக்கோளாக கொண்டிருக்கிறேன். (**உரைக்கப்பட்ட வார்த்தையே மூல வித்து** பாகம் - 1, பக்கம் 73, கடைசி பத்தி)

ஆ. தேவனுடைய வார்த்தையை தனிப்பட்ட விதத்தில் வியாக்கியானம் செய்யக்கூடாது. யாருமே அதற்கு தனிப்பட்ட வியாக்கியானம் அளிக்கக்கூடாது. அது எவ்வாறு வியாக்கியானம் செய்யப்பட வேண்டுமென்று தேவன் விரும்புகிறாரோ, அதே விதமாக அது எழுதி வைக்கப்பட்டுள்ளது. அது என்ன கூறுகின்றதோ அது தான் அது. அது கூறும் விதமாக - அது எழுதப்பட்டுள்ள விதமாக அதை ஏற்றுக்கொள்ளுங்கள் (**உன் வாழ்க்கை சுவிசேஷத்திற்கு தகுதியாக அமைந்துள்ளதா?** பங்கம் 17, பத்தி 43, நாள் : 30.06.1963)

**இ. சபைதான் உங்கள் முடிவாக இருக்கும் என்றால், மற்றவர்கள் என்ன கூறினாலும் அதை நீங்கள் ஏற்றுக்கொள்ளமாட்டீர்கள். அதுவே உங்களுக்கு முடிவானது. என்னை பொருத்தளவில் அது அனைத்தும் தவறு. தேவனுடைய வார்த்தை மாத்திரமே முடிவானது. வார்த்தை என்ன கூறுகிறதோ அதுவே உண்மை(அதை அறியாமலிருக்கிறாய், பக்கம் 36, கடைசி இரு பத்திகள், நாள் : 15.08.1965)**

27. இந்த மூன்று எடுத்துக்காட்டுகளிலிருந்து சகோ. பிரன்காம் தேவனுடைய வார்த்தைக்கு எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறார் என்பதை நீங்கள் அறிந்துக்கொள்ளலாம். என்னுடைய உபதேசம் எதுவும் தேவனுடைய வார்த்தைக்கு மாறாக இருக்குமானால் அதை அப்படியே விட்டுவிடுங்கள். அதை ஏற்றுக்கொள்ளாதீர்கள் என்கிறார். அவர் இவ்வாறாக தேவனுடைய வார்த்தைக்கு முக்கியத்துவம் கொடுக்கும்போது இந்த கள்ளகபடமுள்ள வேலையாட்கள், ஆட்டுத் தொழுவத்திற்குள் வேறுவழியாய் ஏறிய கள்ளர்கள் வேதவாக்கியங்களை புறம்பே எறிந்துவிட்டு சகோ. பிரன்காம் கூறியதை ஏற்றுக்கொள்ளுங்கள், அது வேதவாக்கியங்களுக்கு மாறாக இருந்தாலும் அதை அவர் பிரசங்கித்த பிரகாரமாகவே ஏற்றுக்கொள்ளவேண்டும் என்று உபதேசிக்கிறார்கள். இவர்கள் இக்காலத்திற்குரிய செய்தியை கலங்கப்படுத்தும், மயக்கி மயக்கி இழுக்கும் வஞ்சிக்கிற ஆவியினால் வழிநடத்தப்படுகிறார்கள் என்பதை மறந்துவிடாதீர்கள். பாருங்கள் அன்று பிசாசு **"என்பதாய் எழுதியிருக்கிறதே"** என்று சொன்னான். ஆனால் இயேசுவும் **"என்று எழுதியிருக்கிறதே"** என்று கூறி அவனை மேற்கொண்டார். நீங்களும் சகோ. தயானந்தத்தின், அவருடைய குழுவினரின் போதனைகளை இயேசு கூறிய வண்ணமாகவே கூறி

முறியடியுங்கள். சத்துருவை சந்திக்க ஒரு இடம் உள்ளது. அது தான் தேவனுடைய வார்த்தை. அங்குதான் அவனும் உங்களை சந்திக்க முயலுகிறான்.

28. தேவனுடைய சபையில் கர்த்தராகிய பிரன்காம் கிறிஸ்து குழுவினர் செய்துவரும் அயோக்கியத்தனங்கள் போதாதா என்று நினைக்கும் நேரத்தில், நைனிட்டால் சகோ. டால்டன் புரூஸ் பக்தர்கள் எழும்பி செய்யும் பித்தலாட்டங்களையும் நீங்கள் அறிய வேண்டியதே. இந்நாட்களில் ஊட்டியில் குன்னூர் பகுதியில் வசித்துவரும் நேசக்குமாரன் என்ற சகோதரன் ஊர்ஊராக சுற்றி வலது கைக்கும் இடது கைக்கும் வித்தியாசம் தெரியாத இளம் விசுவாசிகளை தனது மாறுபாடான உபதேசங்களினால் கொள்ளை கொள்ளுவதை சென்னை, கேரளா, ஊட்டி வாழ் சகோதரர்கள் மூலமாக அறியவந்தேன். இவரை நான் நன்கு அறிவேன். ஒரு முறை குன்னூரில் இவரது இல்லத்தில் எனக்கும் இவருக்கும் வேதவாக்கியங்களின் நியாயங்களுக்கு அடுத்த காரியங்களில் மிக்க வாக்குவாதமும், தர்க்கமும் உண்டாயிற்று. அந்த நாளில் இவரது மனைவி, இவர் அவர்களை கொடுமைப்படுத்தும் அனைத்து காரியங்களையும் என்னிடம் கூறினார்கள். இவர் வீட்டில் நான் இருந்தபோது, இவர் எனக்கு தேநீர் வாக்குவதற்காக மற்றொரு சகோதரனை கூட்டிக்கொண்டு கடைக்கு சென்றார். அப்பொழுது பக்கத்து அறையில் இருந்த இவரது மனைவி அந்த சந்தர்ப்பத்தை பிரயோஜனப்படுத்தி என்னிடம் இவர் அவர்களுக்கு இழைத்துவரும் தீங்குகளை கூறி கண்ணீர் விட்டார்கள். இவர் தனது மனைவியை கட்டாயப்படுத்தி அப்போஸ்தலர் 2 : 38 ஞானஸ்நானம் கொடுத்தார். பின்பு நைனிட்டால் சகோ. டால்டன் புரூஸ் அவர்களது உபதேசத்தை அவர்கள் மீது தினித்தார். அந்த சகோதரி அவைகளை ஏற்றுக்கொள்ளவில்லை. அவர்களையும் தன் பிள்ளைகளையும் ஒரு அறையில் அடைத்து வைத்துவிட்டு, அவ்வப்போது அவர்களுக்கு ஏதாவது உதவிகள் செய்துவிட்டு, தான் தனது இல்லத்தில் மற்றொரு அறையில் தங்கி ஹோட்டல்களில் சாப்பிட்டுக்கொண்டு சபை கூடிவந்தார். இவரை நம்பி 5/6 பேர் மோசம் போனார்கள். இந்நாட்களில் அந்த சகோதரி இவரை விட்டு முற்றிலுமாக பிரிந்து சென்றுவிட்டார்கள் என அறியவந்தேன். இந்நிலையில் இவருக்கு ஊழியம் ஒன்று தேவையா? ஊழியத்திற்கு முற்றிலுமாக தகுதியற்ற இவர் மத். 19: 29 யை பிடித்துக்கொண்டு நான் கர்த்தருடைய நாமத்தின் நிமித்தம் என் மனைவியையும் பிள்ளைகளையும் தெருவில் விட்டுவிட்டு கர்த்தருக்கு ஊழியம் செய்ய வந்துள்ளேன் என்று பெறுமையாக சொல்லிக்கொள்கிறார்.

**29. கணவன் மனைவிக்கு இடையே உள்ள அன்பு குறித்து இக்காலத்திற்குரிய செய்தி கீழ்கண்டவாறு கூறுகிறது : கடைசி காலங்களில் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் மத்தியில் மாத்திரமே அன்பு காணப்படும். மற்றொரு இடத்தில் அன்பு காணப்படாது. அது சரியே. வேதம் அவ்விதமாகவே கூறுகிறது. மனைவிக்கு விரோதமாக புருஷனும், புருஷனுக்கு விரோதமாக மனைவியும், பெற்றோருக்கு விரோதமாக பிள்ளைகளும். தெரிந்துக்கொள்ளப்பட்ட ஜனங்கள் மத்தியில் மாத்திரமே அன்பு காணப்படும் (அவர் விசாரிக்கிறவராயிருக்கிறார் நீ கவலை கொள்கிறாயா? பக்கம் 24, பத்தி 56, நாள் : 21.07.1963)** பாருங்கள் கணவன் மனைவிக்கு இடையில் அன்பு இல்லாமல் அவர்கள் பிரிந்து காணப்படுவார்களானால் அவர்கள் தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்கள் இல்லை. தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்ட குடும்பத்தில் கணவன் மனைவிக்குள் பிரிவினை இருக்காது. ஏனென்றால் மனைவி புருஷனின் எலும்பில் எலும்பும், மாம்சத்தில் மாம்சமுமாய் இருக்கிறாள். அவர்கள் ஒரே மாம்சமாயிருக்கிறார்கள்.

30. இப்பொழுது தனது பிழைப்புக்காக சகோ. நேசக்குமார் அவர்கள் தன் கரங்களில் சகோ. டால்டன் புரூஸ் எழுதிய புத்தகங்களை வைத்துக்கொண்டு, அவருடைய பொருளாதார உதவிகளை பெற்றுக்கொண்டு, அவருக்கென்று ஒரு ஊழியம் செய்து வருகிறார். ஊழியத்தை ஒரு தொழிலாக கொண்டு சகோ. டால்டன் புரூஸ் அவர்களுக்கு ஆத்தும ஆதாயம் செய்து வருகிறார். நான் இவரை இவரது இல்லத்தில் சந்தித்தபோது என்னுடன் வாக்குவாதத்திற்காக சகோ. டால்டன் புரூஸ் எழுதிய புத்தகங்களை எடுத்தார். நான் அதை தடை செய்தேன். பின் சகோ. பிரன்காம் எழுதிய செய்தி புத்தகங்களை எடுத்தார். அதையும் நான் தடை செய்தேன். பரிசுத்த வேதாகமத்தை உங்கள் கரங்களில் எடுத்துக்கொண்டு, அதிலிருந்து வசனங்களை காட்டி என்னிடம் வாக்குவாதம் செய்ய முடிந்தால் செய்யுங்கள் என்றேன். இவரால் முடியவில்லை. இவருக்கு முதல் ஆதாரம் சகோ. டால்டன் புரூஸ் எழுதிய புத்தகங்கள். இரண்டாவது சகோ. பிரன்காமின் செய்திகள். இவருக்கு தேவனுடைய வார்த்தையை குறித்த கவலையே இல்லை. இவர் கர்த்தரால் தம்முடைய சரீரமாகிய சபை பக்தி விருத்தியடைய அவரால் ஏற்படுத்தப்பட்ட ஒரு மேய்ப்பன் இல்லை. மாறாக முன்பு சகோ. டால்டன் புரூஸ் எழுதிய புத்தகங்களை ஆதாரமாக கொண்டு ஆண்கள் தாடி, மீசை வைக்கக்கூடாது, பெண்கள் சேலை அணியாமல் கவுன் மாத்திரமே அமெரிக்க பெண்மணிகளைப்போன்று அணிய வேண்டும் என தங்கள் மனம் போன போக்கில் புது புது உபதேசங்களை கொண்டு வந்தார்கள். மக்கள் மத்தியில் இவர்கள் சரக்குகள் விலைபோகவில்லை. ஆதரவும் இல்லை. எடுபடவுமில்லை. தமிழ்நாட்டை பொறுத்த அளவில் ஒரு சிறு கூட்டம் சகோ. டேனியல் ஆசீர்வாதம் தலைமையில் பணஉதவிகளில் மயங்கி, வெளிநாடு சென்று வரும் மோகத்தில் இயங்கி வந்தது. பின் சகோ. டால்டன் புரூஸ் தன்னை மனுஷகுமாரன் என்று அழைக்க ஆரம்பித்தார், ஆதலால் அவரை விட்டு விலகிவிட்டோம் என்றார்கள். ஆனாலும் அவரை விட்டு இன்னும் விலகிபோனதுபோல் தெரியவில்லை. மாறாக இப்பொழுது தேவஇரகசியங்கள் ஏழாம் சபைக்கால தூதனுக்கு முற்றிலுமாக தேவனால் வெளிப்படுத்தப்படவில்லை. ஆதலால் அவருக்கு வெளிப்படுத்தப்பட்டாத இரகசியங்கள் சகோ. ராபர்ட் லீ

லாம்பர்ட்டின் ஊழியத்தில் நிறைவேறியது. இவர் இக்காலத்திற்குரிய செய்திக்காக அதாவது மல்கியா 4 : 5, 6 செய்திக்காக முதல் இரத்தசாட்சியாக மரித்துவிட்டார். அப்பொழுது தனக்கு வெளிப்படுத்தப்பட்ட தேவஇரகசியங்களை சகோ. டால்டன் புரூஸ் உடன் பகிர்ந்துக்கொண்டார். அந்த வெளிப்பாடுகளை சகோ. புரூஸ் இந்நாட்களில் புத்தகமாக வெளியிட்டு வருகிறார் என கூறி மக்களை வேதவாக்கியங்களில் இருந்தும், ஏழாம் சபை கால தூதனாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் மூலம் தேவன் அருளிய, கொடுத்த செய்திகளிலிருந்தும் தங்களது நயவஞ்சகமான, சாதுரியமான சொற்களால் வழிவிலகச்செய்து மக்களை கலக்கி, அவர்கள் ஆத்துமாவை புரட்டி மோசம் போக்கி வருகிறார்கள். கர்த்தருடைய வசனத்தை உபதேசித்து, பிரசங்கிப்பதற்கு பதிலாக சகோ. டால்டன் புரூஸ் உபதேசங்களை பிரசங்கித்து வருகிறார்கள். இவர்கள் தங்கள் பிழைப்புகாக செய்துவரும் இந்த தொழில் விஷயமாக உங்களை அணுக வந்தால் தயது செய்து இந்த கூட்டத்தாரை உங்கள் இல்லங்களில் ஏற்றுக்கொள்ளதீர்கள் என உங்களை எச்சரிக்க வேண்டியது என்மேல் விழுந்த கடமையாக இருக்கிறது.

31. **இப்பொழுது இவர்களது மாறுபாடான உபதேசங்களை சற்று ஆராய்ந்து பார்ப்போம் :** இவர்கள் தங்கள் உபதேசத்தை நிலைநாட்ட பிரதானமாக எடுத்துக்கொண்ட வேதவாக்கியம் பிரசங்கி 11 : 1,2 ஆகும். **"உன் ஆகாரத்தை தண்ணிர்கள் மேல் போடு: அநேக நாட்களுக்கு பின்பு அதின் பலனை காண்பாய். ஏழு பேருக்கும் எட்டு பேருக்கும் பங்கிட்டு கொடு ; பூமியின் மேல் என்ன ஆபத்து நேரிடுமே உனக்கு தெரியாது"** இந்த வசனங்களுக்கு இவர்கள் கொடுக்கும் லௌகிக விளக்கமானது : ஆகாரம், தேவனுடைய வார்த்தையை குறிக்கிறது. தண்ணீர்கள் ஜனங்களை குறிக்கிறது. ஜனங்களுக்கு தேவையான ஆகாரத்தை தேவன் ஏழு சபைக்கால தூதர்கள் மூலமாக கொடுத்தார். ஏழாம் சபைக்கால தூதனுக்கு கர்த்தர் முற்றிலுமாக தேவஇரகசியங்களை வெளிப்படுத்தாத நிலையில். அவர் நித்திரை அடைந்துவிட்டார். ஆதலால் எட்டாவது தூதனாக சகோ. ராபர்ட் லீ லாம்பர்ட்டின் என்பவரை எடுத்து உபயோகித்து மீதமுள்ள இரகசியங்களின் வெளிப்பாடுகளை அவருக்கு வெளிப்படுத்தினார். அவரும் இரத்தசாட்சியாக மரித்துவிட்டார். இந்நிலையில் இந்த சகோ. ராபர்ட் லீ லாம்பர்ட்டின் தனக்கு தேவன் கொடுத்த முழு வெளிப்பாட்டையும் சகோ. டால்டன் புரூஸ் என்பவருக்கு ஒப்புக்கொடுத்தார். ஆக சகோ. பிரன்காமுக்கு வெளிப்படுத்தப்படாத தேவஇரகசியங்கள் சகோ. ராபர்ட் லீ லாம்பர்ட்டிற்கு வெளிப்படுத்தப்பட, அவரும் இரத்தசாட்சியாக மரிக்க, அந்த வெளிப்பாட்டை சகோ. டால்டர் புரூஸ் பெற்று அதை புத்தகவாயிலாக வெளியிட்டு ஊழியம் செய்து வருகிறார் என்பதாகும். பாருங்கள் பிசாசு எந்த அளவிற்கு இவர்களை ஆட்கொண்டு மக்களை வஞ்சிக்கிறான்? ஆம், இது மிக்க கொடிதான வஞ்சிப்பின் காலம். தேவனால் தெரிந்துக்கொள்ளப்படாதவர்கள் இவர்களின் மரணக்கண்ணியில் விழுந்து ஆத்தும மரணம் அடைந்து வருகிறார்கள்.

32. இந்த இரு வசனங்களுக்கும் சொல்லுக்குசொல் விளக்கம் கொடுக்கப்போனால் : **உன் ஆகாரத்தை தண்ணீர்கள் மீது போடு** என்பதை நீர்வளம் பொருந்திய இடங்களில் உன் தானிய விதைகளை விதை என்பதாகும். அது நெல், கோதுமை, கம்பு போன்ற தானிய விதைகளாகும். ஆகாரத்திற்காக பயன்படுத்தப்படும் தானியவிதைகளாகும். **அநேக நாட்களுக்கு பின்பு அதன் பலனை காண்பாய்** என்பதற்கு : நீ விதைத்த விதையானது முளைத்து, வளர்ந்து அநேக நாட்களுக்கு பின்பு அறுவடைக்கு தயாராகி முப்பதும், அறுபதும், நூறுமாக அது தன் பலனை கொடுக்கும். **ஏழு பேருக்கும் எட்டு பேருக்கும் பங்கிட்டு கொடு** என்தபற்கு : உன் அறுவடையின் பலனை உன் மத்தியில் உள்ள ஏழை சகோதரனுக்கும், உன்னிடத்தில் உள்ள எளியவனுக்கும், சிறுமைப்பட்டவனுக்கும், தரித்திரனுக்கும் தாராளமாககொடு. அவனுக்கு கொடுப்பதற்கு, அவன் வறுமையில் அவனுக்கு உதவ உன் இருதயம் விசனப்படவேண்டாம். நீ அவனுக்கு கொடுக்காதபட்சத்தில் அவன் தன்னை சிருஷ்டித்த தேவனை நோக்கி அபயமிடுவான். அது உனக்கு பாவமாயிருக்கும். நீ தாரளமாக அவனுக்கு கொடுத்து உதவும் போது உன் தேவன் உன்னுடைய எல்லா கிரியைகளிலும் உன்னை ஆசீர்வதிப்பார் என்பதாகும். இதற்கு ஆதாரமாக நான் ஏசா. 32 : 20, உபா. 15 : 10 வசனங்களை எடுத்துக்கொண்டேன்.

33. பாருங்கள் அப். பவுல் கலாத்தியருக்கு எழுதும்போது : நன்மை செய்கிறதில் சோர்ந்து போகாமல் இருப்போமாக. நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்ற காலத்தில் அறுப்போம். ஆகையால் நமக்கு கிடைக்கும் சமயத்திற்கு தக்கதாக யாவருக்கும், விசேஷமாக விசுவாச குடும்பத்தாருக்கும் நன்மை செய்யக்கடவோம் என்கிறான். (கலா 6 : 9, 10) **ஏழு பேர்கள் எட்டு பேர்கள்** என்பது உதாரணத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட எண்கள். நாம் மத் 25 : 1, 2 வசனங்களில் மொத்தம் 10 கன்னிகைகள். அதில் 5 பேர் புத்தியுள்ளவர்கள், 5 பேர் புத்தியில்லாதவர்கள் என காண்கிறோம். இந்த எண்ணிக்கை ஒரு திருஷ்டாந்தமாக கூறப்பட்டுள்ளது. இதற்கென்று பிரத்தியேகமான எந்த அர்த்தமும் கிடையாது. அப்படிதான் இந்த ஏழு பேருக்கும் எட்டு பேருக்கும் என்பதற்கு விசேஷித்த எந்த அர்த்தமும் கிடையாது.

34. அடுத்து **பூமியின் மேல் என்ன ஆபத்து நேரிடுமே உனக்கு தெரியாது** என்பதற்கு : பூர்வ நாட்களில் தேவன் பூமியை பார்த்தார். அது தேவனுக்கு முன்பாக சீர்கெட்டதாக இருந்தது. தேவன் அந்த பூமியை அழித்துப்போட்டார். இப்பொழுது இருக்கிற வானங்களும் பூமியும் அக்கினிக்கு இறையாக

வைக்கப்பட்டிருக்கிறது. ஆதலால் அந்த ஆபத்து பூமிக்கு எப்பொழுது வருமோ உனக்கு தெரியாது. ஆதலால் நாட்கள் பொல்லாதவைகளானதால் காலத்தை பிரயோஜனப்படுத்திக்கொள் என்ற புத்திமதியாகும். ஆலோசனையாகும். இந்த பொருளுக்கு ஆதாரமாக நான் ஆதி. 6 : 11, 12 மற்றும் 7 : 21, 2பேதுரு 3 : 7, எபே 5 : 16 வசனங்களை எடுத்துக்கொண்டேன். ஆக உன் ஆகாரத்தை தண்ணீர்களின் மேல் போடு, நீ பெற்ற பலனை ஏழு பேருக்கும் எட்டு பேருக்கும் பகிர்ந்து கொடு என்றுதான் கூறப்பட்டுள்ளது. இந்த வசனங்களுக்கு கர்த்தர் எழு சபைக்கால தூதர்களுக்கு பிறகு ஒரு எட்டாவது நபரையும் / தூதனையும் எடுத்து உபயோகப்படுத்துகிறார் என்பது பரத்திலிருந்து வந்த ஞானமாயிராமல் லௌகிக சம்பந்தமானதும் ஜென்ம சுபாவத்திற்கடுத்துமாயிருக்கிறது.

35. **பிரசங்கி 11 : 1 மற்றும் 2 வசனங்களுக்கு ஒரு ஆவிக்குரிய விளக்கம் நான் கீழ்கண்டவாறு கொடுக்க ஆவியானவர் என்னை வழி நடத்துகிறார்.** ஆகாரம் (Bread) என்பது தேவனுடைய வார்த்தை. தண்ணீர்கள் என்பது ஜனங்கள். உன் ஆகாரத்தை, அதாவது உன்னிடம் ஒப்புக்கொடுக்கப்பட்ட தேவனுடைய வார்த்தையை / செய்தியை / உக்கிராணப் பொறுப்பை / தாலந்துகளை தண்ணீர்களின் மேல் போடு. அதாவது தேவனுடைய வார்த்தையை ஜனங்களுக்கு பிரசங்கி / எடுத்துச்சொல் / போதனை செய்/ உபதேசம் செய். அநேக நாட்களுக்கு பின்பு அதன் பலனை காண்பாய். அதாவது அநேக நாட்களுக்கு பின்பு நீ விதைத்த தேவனுடைய வார்த்தை முளைத்து அதன் பலனை காண்பாய். அது ஒன்று முப்பதாகவும், அறுபதாகவும், நூறாகவும் பலன் கொடுத்திருக்கும். பாருங்கள் ஒரு மனுஷன் புறதேசத்திற்கு பிரயாணம் போகிறபோது, தன் ஊழியக்காரர்களை அழைத்து, அவனவனுடைய திறமைக்கு தக்கதாக ஒருவனிடத்தில் 5 தாலந்தும் மற்றொருவனிடத்தில் இரு தாலந்தும், 3 வது நபரிடம் ஒரு தாலந்துமாக தன் ஆஸ்தியை அவர்களிடத்தில் ஒப்புக்கொடுத்தான். ஐந்து தாலந்து வாங்கினவனும், இரண்டு தாலந்து வாங்கினவனும் தங்களுக்கு கொடுக்கப்பட்ட தாலந்துகளை தண்ணீர்களின் மேல் போட்டார்கள். அது பலன் கொடுத்தது. அதிநிமித்தம் ஐந்து தாலந்துள்ளவன், இரண்டு தாலந்து உள்ளவன் தன் எஜமானுடைய சந்தோஷத்திற்குள் பிரவேசித்தார்கள். அநேகத்தின் மேல் அதிகாரியாக வைக்கப்பட்டார்கள். இதுதான் அவர்கள் அடைந்த பலன். தங்கள் ஆகாரத்தை தண்ணீரின் மேல் போட்டதினால் பெற்ற பலன். மத் 25 : 14-23. இப்பொழுது நீ பெற்ற பலனை ஏழு பேருக்கும் எட்டு பேருக்கும் பகிர்ந்து கொடு. ஆம் நீ பெற்ற ஆசீர்வாதங்களை, செய்திகளை கொண்டு நீ உன் சொந்த ஜனங்களையும் விஷேசமாக உன் வீட்டாரையும் கர்த்தருடைய வருகைக்கு என்று ஆயத்தப்படுத்து என்பதாகும் (1தீமோ 5 : 8)

36. **இந்த எட்டாவது தூதன் வரவேண்டும் என்ற தங்கள் உபதேசங்களுக்காக இவர்கள் எடுத்துக்கையாளும் இக்காலத்திற்குரிய செய்தியிலிருந்து சில பகுதிகள், அது எந்த அளவிற்கு இவர்கள் உபதேசத்திற்கு பொருந்தும் என்பதையும் இங்கு காண்போம். தவறான உபதேசத்திற்காக சகோ. டால்டன் புரூஸ் கூலியாட்கள் இக்காலத்திற்குரிய செய்தியிலிருந்து எடுத்துக்காட்டும் பகுதிகள் :**

அ. **கிருபையின் செய்தி** பக்கம் 8, பத்தி 21, நாள் : 27.08.1961, சென்ற ஆண்டு நான் இந்தியானாவில் உள்ள ஒரு இடத்தில் உட்கார்ந்துகொண்டிருந்தபோது, தேவனாகிய கர்த்தர் இறங்கிவந்து, என் இரண்டாம் ஊழியம் வெகுவிரைவில் தொடங்கும் என்று என்னிடம் கூறினார் என்று உங்கள் எல்லாருக்கும் தெரியும். அது அச்சடிக்கப்பட்டு சாட்சியிலும், ஒலி நாடாக்களிலும் உள்ளது. இங்கு சகோதரர் தனது மனுஷகுமாரன் ஊழியத்தை குறித்துத்தான் பேசுகிறாரேயன்றி மற்றொருவர் ஊழியத்தை குறித்து பேசினதாக தெரியவில்லை.

ஆ. **எல்லா நீதியையும் நிறைவேற்றுவது நமக்கு ஏற்றதாய் இருக்கிறது** பக்கம் 49, 50 , பத்தி 186, 193 நாள் 01.10.1961 ஏழாம் தூதன் தன் செய்தியை அளித்துவிட்டான் என்று நாம் அறிந்திருக்கிறோம். அது அடையாளத்தினால் உறுதிப்படுத்தப்படுவதை நாம் காண்கிறோம் (பத்தி 186) அதன் பிறகு ஒரு செய்தி வரும். ஓ,அல்லேலுயா! அது இஸ்ரவேல் ஜனங்களை வழிநடத்தின அதே அக்கினி ஸ்தம்பம் என்று நமக்கு தெரியும். இயேசு கிறிஸ்துவை அபிஷேகம் செய்த அதே அக்கினி ஸ்தம்பம். அதன் மூலம் அவரை தொடர்ந்த அதே ஊழியம் இன்றைய சபையையும் தொடர்கிறது. விஞ்ஞானம் அதை நிருபித்துள்ளது (பத்தி 193) அது உண்மைதான். சகோ. பிரன்காம் ஏழாம் சபை கால தூதனுடைய செய்தியை அளித்து முடிந்து, அடுத்து அவர் மனுஷகுமாரனுடைய ஊழியத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்தார். ஏழு முத்திரைகளின் இரகசியங்களை வெளிப்படுத்துவது மனுஷகுமாரனுடைய ஊழியம். அதற்காக மனுஷகுமாரன் தம்மை சகோ. பிரன்காமில் வெளிப்படுத்தினார். இது எப்படியென்றால் அன்று தேவன் தம்முடைய குமாரனை புறஜாதிகளிடத்தில் சுவிசேஷமாய் அறிவிக்கும் பொருட்டாக அவரை, பவுலுக்குள் வெளிப்படுத்த பிரியமாயிருந்தது போன்றது (கலா 1 : 16) ஏழு முத்திரைகளுக்கடுத்த செய்தியை தான் இங்கு சகோ பிரன்காம் அதன் பிறகு ஒரு செய்தி வரும் என்கிறார். அவருக்கு பிறகு எட்டாவதாக ஒரு தூதன் தோன்றி அவருக்கு பிறகு ஒரு செய்தியை கொண்டு வருவான் என்று அவர் கூறவில்லை.

இ. **சயாங்கால செய்தியாளன் :** பக்கம் 63, பத்தி 224, 225 நாள் : 16.01.1963 தேவனே மல்கியா 4 உடன் துரிதப்படும். இந்த கடைசி நாட்களில் செய்தியை எங்களுக்கு தாரும். யாரையாவது எங்களுக்கு தாரும்.... இந்த கடைசி நாளுக்கென எப்படிப்பட்ட ஒரு செய்தியாளனை தேவன் நமக்கு அனுப்புவார்? அந்த சமயம்

வருவதற்காக காத்துக்கொண்டிருக்கும் உங்கள் சகோதரனாக உடன் ஊழியக்காரனாக நான் இதை உங்களுக்கு கூறுகிறேன். மல்கியா 4 : 5, 6 தீர்க்கதரிசி மற்றும் செய்தியாளன் ஏழாம் சபைகால தூதனாகிய சகோ. பிரான்காம் என்பது உங்கள் அனைவருக்கும் தெரியும். ஆதலால் நான் அதை மீண்டும் விளக்க வேண்டிய அவசியம் இங்கு இல்லை என உணர்கிறேன்.

ஈ. **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** (புதிய பதிப்பு ) பக்கம் 215, பத்தி 75, எடுத்துக்கொள்ளப்படுவதற்கான விசுவாசத்திற்காக மணவாட்டியை ஒன்று சேர்ப்பதற்கென்று, இந்த கடைசி நாட்களில் அந்த ஏழு இடிமுழக்கங்களின் மூலமாக வெளிப்படுத்தப்படும் என்று நான் நம்புகிறேன். இதைக்கொண்டு **ஏழு இடிமுழங்கங்களின் செய்தியை மற்றொரு தூதன் வந்து கொண்டு வரவேண்டுமென நம்புகின்றனர். இது தவறு. ஒவ்வொரு இடியும் முழங்க முழக்க ஒவ்வொரு முத்திரையும் திறக்கப்பட்டு வந்தது.** ஆக ஏழு இடிமுழக்கங்களும் ஏழு முத்திரைகளும் ஒன்றுக்கொன்று இணைந்தது.

உ. இப்பொழுது இந்த ஏழு தேவதூதர்களின் கூட்டத்திற்கும், யோவான் பார்த்த ஆனால் எழுத அனுமதிக்கப்படாத அந்த ஏழு இடி முழக்கங்களுக்கும் உள்ள சம்பந்தம் என்ன? அந்த ஏழு தூதர்களும், அந்த ஏழு இடி முழக்கங்களை தங்கள் கரங்களில் பிடித்திருந்தார்கள் **(ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** நித்திரையடைந்த சகோ. S.P. ஜான் சாமுவேல் அவர்களின், வெளியீடு பக்கம் 19 தொடக்கம்) அந்த ஏழு தூதர்கள் அந்த ஏழு இடிமுழக்கங்கள் கொண்டிருந்ததை வெளிப்படுத்தித்தருவார்கள் (பக்கம் 19 தொடக்கம்) இங்கு கவனியுங்கள் இந்த ஏழு தூதர்களும் ஏழு சபை காலத்தூதர்கள் இல்லை. மாறாக வானத்திலிருந்து வந்த இவர்கள் தேவதூதர்கள். ஏழு சபைக்கால தூதர்கள் இப்பூமிக்குரிய தூதர்கள். அடுத்து மேலும் கவனியுங்கள் **ஏழு முத்திரைகளால் முத்தரிக்கப்பட்ட புத்தகம், வெளி 10 ல் கூறப்பட்டுள்ள ஏழு இடிமுழக்கங்கள் முழங்கும் சமயத்தில் வெளிப்படும் (பக்கம் 75, முதல் பத்தி) ஒவ்வொரு முத்திரையும் ஒவ்வொரு இடிமுழக்கத்துடன் திறக்கப்பட்டது. முத்திரை என்பது இடிமுழக்கம் (ஐயன்மீர்இதுவா சமயம்?** பக்கம் 68, பத்தி 1) இந்த ஏழு முத்திரைகளின் இரகசியத்தை, அந்த ஏழு தேவதூதர்கள், ஏழாம் சபைக் காலத்தூதனுக்கு வெளிப்படுத்தினர். ஏழாம் சபைக்கால தூதன் அதை ஏழாம் சபைக்கு பிரசங்கித்தார். இது தான் காரியம். ஆதலால் **இனி ஏழு இடிமுழக்க செய்தி ஒன்று உண்டு, அதற்கு ஒரு தூதன் வரவேண்டும், அது நீ தான், அது நான் தான் என்ற போட்டி மக்கள் மத்தியில் காணப்படுவது வேதவாக்கியங்களுக்கு புறம்பானது/ இக்காலத்திற்குரிய செய்திக்கு மாறானது.**

ஊ. **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** புதிய பதிப்பு பக்கம் 265, பத்தி 283, 284. இச்சபையை மறுரூபப்படுத்த ஏதோ ஒன்று அவசியமாயிருக்கிறது என்று எழுதப்பட்டிருப்பதை கொண்டு எட்டாவது ஒரு தூதன் வரவேண்டும் என்ற போதனை, வேதவாக்கியங்களுக்கு புறம்பான ஒரு கருத்தை கொண்டுவருவது பிசாசு. நாம் நம்மை எப்படி மறுரூபப்படுத்துவது? நீங்கள் இந்த பிரபஞ்ஜத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல், தேவனுடைய நன்மையும், பிரியமும் பரிபூரணமான சித்தம் என்னதென்று பகுத்தறியதக்கதாக உங்களது மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகுங்கள். ரோ 12 : 2. நாம் அனைவரும் செய்ய விரும்புவதும் இதுவே. அதாவது இந்த பிரபஞ்ஜத்திற்கு ஒத்த வேஷம் தரியாமல் தேவனுடைய பரிபூரணமும் பிரியமுமான சித்தம் செய்வதற்கு நம் மனம் புதிதாகிறதினாலே மறுரூபமாகவேண்டும். நாம் இருக்கிறபடி இப்பொழுது நாம் இரட்சிக்கப்பட்டிருக்கிறோம். நாம் பெற்றுள்ளபடி, பரிசுத்த ஆவியினால் நிரப்பப்பட்டுள்ளோம். வாழ்க்கையில் உள்ள மாமிச பிரகாரமான காரியங்களிலிருந்து மாற்றப்படவேண்டும். அவருடைய வார்த்தையின் மூலம், அவருடைய ஆவியினால் மறுரூபமாக்கப்பட்டு தேவனுடைய பரிபூரணசித்தத்தை செய்யும்படியும் கிறிஸ்துவுக்குள் இருந்த சிந்தை நமக்குள் இருக்க வேண்டும். மனம் புதிதாகுதல் ஒரு காலத்தில் நீங்கள் விலையேறப்பெற்றதாக நினைத்தவைகளை விலக்கி வேறொன்றுக்கு மாற்றப்படுவது. இது தேவனுடைய வார்த்தைக்கு கீழ்படிந்து, அவருடைய பரிபூரண சித்தத்தை செய்வதாகும். நாம் எப்பொழுதும் வார்த்தையில் நிலைத்திருக்க வேண்டும். நம்முடைய குறிக்கோளும் நமது நோக்கங்களும் தேவனுடைய வார்த்தையின்படி உள்ளதா என்று எப்பொழுதும் சரிபார்த்துக்கொள்ள வேண்டும்.

எ. **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** பக்கம் 427, பத்தி 183. மணவாட்டிக்கும் உண்மையான எழுப்புதல் இன்னும் நிகழவில்லை. பாருங்கள் அவளுடைய உணர்ச்சியை தூண்டுவதற்கு தேவனுடைய தோற்றம் இன்னும் வரவில்லை. பாருங்கள்? இதை நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். இதுவரை இரகசியமாயுள்ள அந்த ஏழு இடிகள் தான் அவளை மறுபடியும் எழுப்பும். பாருங்கள், அவர் அதை அனுப்புவார். அவர் அதை அனுப்புவதாக வாக்களித்துள்ளார். இங்கு சகோதரர் மணவாட்டியினிடத்தில் உண்மையான எழுப்புதல் இன்னும் நிகழவில்லை அதை நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம் என்கிறார். இதற்காக எட்டாவது ஒரு தூதன் வரவேண்டும் என்று அவர் கூறவில்லை. இப்பொழுது மல்கியா 4-ம் அதிகாரத்திலும் வெளி 10 : 6 லும் உரைக்கப்பட்ட இந்த செய்தியாளன் இரண்டு காரியங்களை செய்வார். முதலாவதாக மல்கியா 4 உரைத்தபடி அவர் பிள்ளைகளின் இருதயத்தை பிதாக்களிடத்திற்கு திருப்புவார். இரண்டாவதாக வெளி 10 ல் உள்ள ஏழு முத்திரைகளில் இருக்கின்ற அந்த ஏழு இடிமுழங்கங்களின் இரகசியங்களை அவர் வெளிப்படுத்துவார். இந்த தெய்வீகமாக வெளிப்படுத்தப்பட்ட இந்த இரகசிய சத்தியங்கள் தான் பிள்ளைகளின் இருதயங்களை பெந்தெகொஸ்தே பிதாக்களிடத்திற்கு திரும்பும். முற்றிலுமாக சரி (**ஏழு சபைக்காலங்களின் வியாக்கியானம்,** புதிய பதிப்பு, லவோதிக்கேயா சபையின் காலம் பக்கம் 463, பத்தி 1 நாள் : டிசம்பர் 4-11, 1960) பாருங்கள், கர்த்தருடைய

தூதன் முத்திரைகளை நமக்காக உடைத்து தருவார். அது மறைபொருளான ஏழு இடி முழக்கங்களில் முத்தரிக்கப்பட்டுள்ளது என்பதை நினைவில் இருக்கவும் (**ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு,** சகோ. ஜான்சாமுவேல் அவர்கள் பதிப்பு, பக்கம் 60 கடைசி பத்தி)

ஏ. **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு,** பக்கம் 496, பத்தி 107, ஆட்டுக்குட்டியானவர் முத்திரைகளை உடைத்துக்கொண்டிருந்தார். ஆனால் தேவனோ அதை இன்னும் வெளிப்படுத்தாதிருந்தார். அது கடைசி நாளுக்கென்று விடப்பட்டிருந்தது... ஆனால் இப்பொழுது இந்த கடைசி நாட்களில், அது என்னவாயிருந்தது என்பதை நாம் திரும்பி பார்க்க முடிகிறது. எடுக்கப்படுதலுக்கு முன்னால் கடைசிகால சபையின் முடிவில் அது வெளிப்படும். இதில் எட்டாவது தூதனுக்கு எங்கு வேலையிருக்கிறது? எட்டாவது தூதன் என்பதற்கு வேதவாக்கியங்களில் ஆதாரம் ஒன்றுமில்லை. வேதவாக்கியங்களில் ஆதாரம் ஒன்று இல்லாததை மக்கள் மீது தந்திரமாக திணிப்பது யார்? அவன் பிசாசே.

ஐ. **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு,** பக்கம் 513, பத்தி 180, ஏழு இடிமுழக்கங்கள் அந்த சிறு குழுவிற்கு தங்கள் சத்தங்களை முழங்கும்வரை காத்திருங்கள். ஆனால் அவர் (தேவன்) அது (வார்த்தை) கிரியை செய்யத்தக்கதாக எப்பொழுதும் மனிதனை உபயோகிக்கிறார். இங்கும் எட்டாவது தூதனுக்கு இடமில்லை. அர்த்தமில்லாமல் இவர்கள் செய்தியில் அநேக பகுதிகளை எடுத்துக்காட்டுகின்றனர். ஏழு இடிமுழக்கத்தை கொண்டு ஒரு பிரத்தியேகமான தூதன் தோன்ற வேண்டிய தேவையில்லை. ஏழு இடிமுழக்கங்கள் என்ன என்பதை முன்னே நான் எழுதியுள்ளேன்.

ஒ. **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு,** பக்கம் 784, பத்தி 66, 67. தேவன் நமக்கு முத்திரைகளை திறக்கின்றார். அது என்ன? முதலில் ஏழு சபையின் செய்தியாளன். சபையின் காலம். அதற்கு பிறகு ஏழு முத்திரைகள்... ஏழாம் முத்திரையில் என்ன நடக்கபோகிறது என்பதை அறிவிக்கவில்லை என்பதை அறியவும். பாருங்கள் ஏனென்றால் இந்த சபையின் காலத்தின் முடிவில் இவைகளை வெளிப்படுத்த ஒரு தீர்க்கதரிசன வரம் வரவேண்டும். மேலும் ஏழாம் முத்திரைகுறித்து நாம் **ஏழாவது முத்திரை** பக்கம் 947, பத்தி 256 ல் வாசிக்கிறோம். இயேசு அதை குறித்து பேசவும் இல்லை. யோவானும் அதை எழுதமுடியவில்லை. தேவதூதர்களும் அது என்னவென்று அறியார்கள். அது என்ன? பரலோகத்தில் உள்ள தூதர்களும் அறியார்கள் என்று இயேசு சொன்ன அதே காரியம் தான் அது . பாருங்கள் அவரும் கூட அதை அறிந்திருக்கவில்லை. தேவன் மாத்திரமே அதை அறிவார் என்று அவர் கூறினார். அது தான் "அந்த நாளையும், அந்த நாழிகையையும் பிதா ஒருவர் தவிர மற்றொருவரும் அறியார். பரலோகத்திலுள்ள தூதர்களும் அறியார்கள். குமாரனும் அறியார் என்பதாகும். மாற். 13 : 32 .

ஓ. **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு,** பக்கம் 784, பத்தி 66,67 இங்கு சகோ.பிரன்காம் லவோதிக்கேயா சபை குறித்து அந்த சபை செய்தி குறித்தும், ஏழு முத்திரைகள் குறித்து, அதற்கு ஒரு தீர்க்கதரிசி சபை முடிவில் வரவேண்டும் என தம்முடைய ஊழியத்தை குறித்து பேசுகிறார். இங்கு தீர்தரிசன வரமுடைய ஒரு எட்டாவது தூதன் வரவேண்டும் என்று அவர் கூறவே இல்லை. இதற்கு வேதவாக்கியங்களில் ஆதாரமும் இல்லை.

ஔ. **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு,** பக்கம் 732, பத்தி 223, எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன்பு கிறிஸ்துவின் மணவாட்டிக்கு ஊழியம் இருக்குமா? நிச்சயமாக. இப்பொழுது நேரடியாக அதுதான் நடந்துக்கொண்டிருக்கிறது... நிச்சயமாக, அவர் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள், சுவிசேஷகர்கள் மற்றும் மேய்பர்களை உடையவர்களாயிருக்கிறார். அது சரியா? இங்கும் எட்டாவது தூதனுக்கு இடமில்லை. இவர்கள் இக்காலத்திற்குரிய செய்திக்கு தவறான விளக்கம் கொடுக்கிறார்கள், செய்தியை தவறாக வியாக்கியானம் செய்கிறார்கள். ஒன்றை தகாதஇடத்தில் பொருத்தி விசுவாசிகள் மத்தியில் குழப்பத்தை உண்டுப்பண்ணும் குழப்பத்தின் ஆவியையுடய பிசாசாக இருக்கிறார்கள்.

ஃ. **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு,** பக்கம் 963, பத்தி 326 - 328, அந்த ஏழு இடிகளும் பரலோகம் அமைதியான காரணத்தின் இரகசியத்தை தங்களுக்குள் பெற்றுள்ளன. அந்த மகத்தான நபர் தோன்ற நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். அவர் தோன்றும் நேரம் இப்பொழுதாக இருக்கலாம் (பத்தி 326) ஜனங்களை தேவனுடைய வார்த்தைக்கு திருப்ப முயன்ற என்னுடைய ஊழியம் ஒருக்கால் அதற்கு அஸ்திபாரமாக அமைந்திருக்கும். அப்படியானால் நான் உங்களைவிட்டு ஒரேயடியாகச் செல்ல நேரிடும். ஒரேசமயத்தில் நாங்கள் இருவர் இருக்க முடியாது. அப்படியிருந்தால் அவர் பெருகவேண்டும், நான் சிறுக வேண்டும். எனக்கு தெரியாது (பத்தி 327) ஆனால் அந்த இரகசியம் அது என்னவென்றும், அதுவரை அது வெளிப்படுவதை நான் கண்ணார காணவும் தேவன் எனக்கு சிலாக்கியம் அளித்தார் (பத்தி 328) பத்தி 326 ல் நாம் எதிர்பார்த்துக்கொண்டிருக்கும் அந்த மகத்தான நபர் யார்? இதற்கு பதில் பத்தி 321 ல் உள்ளது. அவருடைய ஜனங்கள் **கிறிஸ்து**வின் அதிசீக்கிர வருகையை எதிர்நோக்கிக்கொண்டிருக்கின்றனர், எட்டாவது தூதன் ராபர்ட் லீ லாம்பர்ட்டின்காக எதிர்பாத்துக்கொண்டிருக்கவில்லை. நிச்சயமாக ஏழாம் சபை கால தூதனுடைய ஊழியம் கிறிஸ்துவின் வருகைக்கு அஸ்திபாரம் தான். சகோ. பிரன்காம் பத்தி 328 ல் கூறும் அந்த இரகசியம் எது? இதற்கு பதில் பத்தி 323 ல் உள்ளது. அவர் பார்த்தபோது அந்த ஏழு இடிகள் ஒன்றுக்கொன்று அருகாமையில் இருந்துக்கொண்டு, ஏழு வித்தியாசமான சமயங்களில் முழங்கி, நான் கண்டதை வெளிப்படுத்தியது என்பதை மாத்திரம் அறிவேன். இது என்ன? ஒவ்வொரு இடிமுழக்கத்தின் சமயம் அதாவது ஏழு வித்தியாசமான சமயங்களில் அது முழங்கி, ஏழு முத்திரைகளின் இரகசியத்தை சகோதரருக்கு வெளிப்படுத்தினது. ஆனால் கிறிஸ்து வெளிப்படுவதற்கு இன்னும் சமயம் வரவில்லை, அவர் வரும் நாளை

அறிவதாக கூறுபவர் தவறு செய்கின்றார்கள். தேவன் மாத்திரமே அதை அறிவார் எனக் கூறி முடிக்கிறார்.

க. **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு,** பத்தி 973, பத்தி 373 நான் இந்த ஊழியத்தினை முடிக்கும் காலம் வரும்போது, இந்த பழைய பட்டயத்தை உத்தமும், உண்மையுள்ளவரும், சத்தியதை முழுவதுமாய் பிரசங்கிக்கும் ஒருவரிடம் ஒப்படைக்க அருள்புரியும். இது சகோ. பிரன்காமுடைய வாஞ்சை. அவருடைய ஊழியத்தை மற்றொருவரிடம் ஒப்படைக்க விரும்புகிறார். நல்லது தான். இது பவுல், தீமோத்தேயுவுக்கு எழுதும்போது, அநேக சாட்சிகளுக்கு முன்பாக நீ என்னிடத்தில் கேட்டவைகளை மற்றவர்களுக்கு போதிக்கத்தக்க உண்மையுள்ள மனுஷர்களிடத்தில் ஒப்புவி என்று எழுதியதற்கு ஒப்பாகும். (2 தீமோ 2 : 2) ஆனால்அது வேதவாக்கியங்களோடு இணைந்திருக்கவேண்டும். அவருடைய வாஞ்சை நிறைவேற வேதவாக்கியங்களில் இடமில்லை. ஆனால் அவருடைய ஊழியத்ததை எடுத்துசெல்ல கர்த்தர் ஐந்து வகை ஊழியங்களை வைத்திருக்கிறார். அவர்கள் அதை எடுத்துச்சென்று கிறிஸ்துவின் சரீரமாகியசபை பக்திவிருத்தியடைய தங்கள் பணிகளை செய்துக்கொண்டிருக்கிறார்கள். ஆதலால் எட்டாவது தூதன் வேதவாக்கியங்களில் ஆதாரமில்லாத ஒரு அழைப்பு / ஊழியம். அதில் கிறிஸ்துவின் மணவாட்டிக்கு நாட்டம் இல்லை. ஆனாலும் பிசாசினுடைய ஊழியக்காரர்கள் அவனுடைய பணியை செய்து வருகிறார்கள். அதை நாம் தடுக்க முடியாது. ஏனென்றால் அது கர்த்தரால் அனுமதிக்கப்படுவதாகும். கர்த்தர் கொடிய வஞ்சகத்தை அனுப்புகிறார்.

கா. **ஏழு சபை காலங்களின் வியாக்கியானம்** (பழைய பதிப்பு) பெர்கமு சபையின் காலம் பக்கம் 204 பத்தி 2, யோசுவா, காலேப் இவர்களை போன்று நாம் விசுவாசத்தில் உறுதியாய் நிற்போமாக... யோசுவா என்பதற்கு யெகோவா என் இரட்சகர் என்று அர்த்தம். கடைசி காலத்தில் வரபோகும் வழிகாட்டிக்கு யோசுவா முன் அடையாளமாக இருக்கிறான். காலேப், யோசுவாவிற்கு துணை நின்றதுபோல், கடைசிகாலத்தின் உண்மையான சபையும் இவ்வழிகாட்டிக்கு துணை நிற்கும். இந்த மாறுபாடான ஊழியர்கள் தங்களின் வழிகாட்டி ஸ்தானத்திற்கு சகோ. ராபர்ட் லீ லாம்பர்ட்டினையும் (யோசுவா) அவருக்கு உதவியாக சகோ. டால்டன் புரூஸையும் (காலேப்) வைத்துள்ளார்கள். இதுவும் தவறான உபதேசம். இந்நாட்களின் நம்முடைய யோசுவா யார்? அவர் பரிசுத்த ஆவி. Who is our Joshua to-day? Our Joshua which is the Holy Spirit. (Ephesians parallels Joshua, Page 11, Para 69) நமது பரிசுத்த ஆவியாகிய யோசுவா. யோசுவா என்னும் சொல்லுக்கு **இயேசு, இரட்சகர்** என்றும் அர்த்தம் உண்டு. யோசுவா எவ்வாறு மாம்சபிரகாரமாக இஸ்ரவேலருக்கு மகத்தான போர் வீரனாக திகழ்ந்தானோ, அதே போன்று பரிசுத்த ஆவியானவர் ஆவிக்குரிய விதமாக நமக்கு இருக்கிறார். அவரே நமது மகத்தான தலைவர். தேவன் யோசுவாவுடன் இருந்து போன்று, இந்த பரிசுத்த ஆவியின் ரூபத்தில் நம்மை அசைத்துக்கொண்டிருக்கிறார் (**புத்திர சுவிகாரம்,** பாகம் 1, பக்கம் 23, பத்தி 69) கர்த்தாவே, எங்களை நாங்கள் உமக்கு முன்பாக அமைதிப்படுத்திக்கொண்டிருக்கையில், எங்கள் மகத்தான யோசுவா, பரிசுத்த ஆவியாகிய எங்களது இந்நாளுக்குரிய தெய்வீக தலைவர் எங்களுக்கு முன்பாக இருப்பதை உணர்ந்துக்கொள்ளுகிறோம் (**இயேசு கிறிஸ்துவை பற்றிய வெளிப்படுத்துதல்,** இரண்டாம் பாகம், 5 ம் அதிகாரம், பக்கம் 1385, பத்தி 61) இந்த பரிபூரண மனிதனின் வளர்ச்சி படத்தை நீங்கள் நன்கு கவனித்தால் லவோதிக்கேயா சபை காலம் தூதன் சகோ. பிரன்காம். இவர் மோசேக்கு எடுத்துக்காட்டு. மோசேக்கு பின் ஜனங்களை கானான் தேசத்துக்குள் வழிநடத்த யோசுவா காட்சிக்கு வந்தார். இங்கு யோசுவா ஸ்தானத்தில் பரிசுத்த ஆவி. பரிசுத்த ஆவியே நமக்கு தலைவராகயிருந்து நம்மை எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு ஆயத்தப்படுத்துகிறார் / தகுதிப்படுத்துகிறார் / கொண்டு சேர்க்கிறார். ஆமென். ஆக இந்த பரிசுத்த ஆவி ஸ்தானத்தை ஒருவன் எடுத்துக்கொள்ள முயற்சித்தால், அவன் பிசாசாகவே இருக்கவேண்டும். சகோ. பிரன்காமுக்கு பின் நீ, நான் என்று கூறுபவர்கள் அனைவருமே பிசாசினுடையவர்களே.




37. மேலும் செய்தி **இதை அறியாமலிருக்கிறாய்.** பக்கம் 26 கடைசி பத்தி நாள் 15.08.1965 நான் கட்டிடம் கட்ட மாத்திரம் செய்கிறேன். ஏதோ ஒன்று நடப்பதை நீங்கள் காணப்போகும் நேரம் மிக அருகாமையில் உள்ளது. ஏதோ ஒன்று நடக்கப்போகிறது. இங்குள்ள இந்த பின்புறக்காட்சி அனைத்தும் ஒரு குறுகிய, வேகமான செய்திக்கு அடிக்கல்லை நாட்டுவதாக அமைந்திருக்கும். இந்த செய்தி முழு தேசத்தையுமே குலுக்கும்.

அ. இனிமேல் சபைக்கு அடுத்ததாக நிகழவேண்டியது எடுத்துக்கொள்ளப்படுதலாகும். ஆமென், ஆமென் (**ஏழு முத்திரை புதிய பதிப்பு, முதலாம் முத்திரை** பக்கம் 290, பத்தி 380, நாள் 18.03.1963

ஆ. கிறிஸ்துவின் மணவாட்டிக்கு எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன்பு ஒரு ஊழியம் உண்டா? நிச்சயமாக. இப்பொழுது அதுதான் நடந்துக்கொண்டிருக்கிறது. அதுதான் இந்த மணி நேரத்திற்கான செய்தி.

அவருடைய ஊழியத்தில் அப்போஸ்தலர்கள், தீர்க்கதரிசிகள், போதகர்கள், சுவிசேஷகர்கள் மேலும் மேய்ப்பர்கள் அடங்கியிருக்கிறார்கள் Would the Bride of Christ have a ministry before the rapture? Sure, that is what is going on right now. The Bride of Christ, certainly! It is the message of the hour - the Bride of Christ. Sure, she consist of apostles, prophets, teachers, evangelists and pastors. Is that right? that is the Bride of Christ. Sure, She is got a ministry, great ministry, the ministry of the hour (COD Vol. II Q&A 194 Page No. 840 Para No. 233 Date 24.03.1963)

இ. சகோ. பிரான்காமே ஆதி அப்போஸ்தல திருச்சபை போல மணவாட்டி உபத்திரவத்தின் வழியாக நடந்து செல்வாளா? இல்லை... அடுத்ததாக எடுத்துக்கொள்ளப்படுதல், ஞாபகம் இருக்கட்டும் (COD 19 கே.ப. 276, பக்கம் 102, பத்தி 267 நாள் : 23.08.1964)

ஈ. எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு முன்பு சபைக்கு நிகழவேண்டிய கடைசி காரியத்தை நீங்கள் கண்டுக்கொண்டிருக்கிறீர்கள் என்று நான் விசுவாசிக்கிறேன். அது முற்றிலும் உண்மை. அதை நான் விசுவாசிக்கிறேன். மாரி முடிந்துவிட்டது. வெளிப்படுத்தின விசேஷம் முதல் மூன்று அதிகாரங்களை படியுங்கள். சபைக்கு என்ன வாக்களிக்கப்பட்டுள்ளது என்பதை நீங்கள் காண்பீர்கள். அது தான் சபைக்கு அங்கே வாக்களிக்கப்பட்டுள்ளது: **நாம் கர்த்தருடைய வருகைக்கு காத்திருக்கமட்டும் செய்யவேண்டும். காத்திருக்க மட்டும் செய்யுங்கள். உங்கள் தீவட்டிகளை சுத்தம் பண்ணி வைத்திருங்கள். அதை முழுவதும் எண்ணையினால் நிரப்புங்கள். ஒவ்வொருமணி நேரமும் ஜெபித்துக்கொண்டிருங்கள். ஒவ்வொரு நாளும் அல்ல. ஒவ்வொரு மணி நேரமும் உங்களை ஆயத்தமாக வைத்திருங்கள். ஆயத்தமாயிருங்கள். இனிமையாயிருங்கள். விழித்து காத்திருங்கள்** (COD 2 : 19, கே.ப. 253, பக்கம் 72 , 73, பத்தி 195, 198, நாள் 23.08.1964.)

உ. சகோ. பிரன்காமே நாம் வாழ்த்துக்கொண்டிருக்கும் இந்த நாளில் ஏற்பட்டுள்ள தவறு என்னவென்றால், ஒரு விசுவாசியாயிருந்துக்கொண்டு செய்தியையும், இந்நாளின் செய்தியாளனையும் பின்பற்றினபோதிலும், நம்மால் நமது விருப்பதிற்கேற்ப ஜெபம் செய்ய இயலுவதில்லை. ஏன்? இந்நேரத்தின் நிலையே அதற்கு காரணம். எழுப்புதல் முடிந்துவிட்டது. அது ஏறக்குறை 15 ஆண்டுகளாக நீடித்தது. அது அதற்கு முன்பு 3 ஆண்டுகளுக்குமேல் நீடித்தது இல்லை. அது கடைசி எழுப்புதலை பெற்றுக்கொண்டதென்று நான் நினைக்கிறேன். ஆகையால் தான் உங்களுக்கு முன் போல ஜெபிக்கவும் ஆவியில் உணரவும் முடிவதில்லை. ஏனென்றால் எழுப்புதல் தீ அனைந்துவிட்டது. COD 2:22 கே.ப. 386, பக்கம் 28, பத்தி 66 நாள் : 30.08.1964. பாருங்கள் இனி நமது மத்தியில் ஒரு பெரிய எழுப்புதல் நடைபெற போவதில்லை

ஊ. மணவாட்டி இங்கிருந்து புறப்படுவதற்கு முன்பு பரிசுத்த ஆவியின் அசைவு இருந்து, அவளால் அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப்படுமா? அல்லது அவருடைய பிரதியட்சமாவதற்கு மட்டும் நாம் காத்திருக்க வேண்டுமா? இங்குள்ள கேள்வி இது. மணவாட்டியினால் அற்புதங்கள் செய்யப்படுமா? ஆம் ஐயா. அது இப்பொழுது செயல்பட்டு வருகிறது. அது உண்மை பாருங்கள். ஆனால் மகத்தான அற்புதங்களை எதிர்பார்க்காதிருங்கள். அவருடைய வருகையை நாங்கள்இன்றிரவு கூட எதிர்பார்த்துக்கொண்டிருக்கிறோம். (**வித்து பதருடன் சுந்தரவாளியாயிருப்பதில்லை** பக்கம் 43, முதற்பத்தி, நாள் 18.02.1965)

38. சகோ. டால்டன் புரூஸ் பக்தர்கள் எட்டாவது தூதன் வருவதற்கு இந்நாளுக்குரிய செய்தியிலிருந்து கொடுக்கும் பகுதிகளையும் அதற்குரிய விளக்கங்களையும் நாம் காணும்போது, இனி கிறிஸ்துவின் மணவாட்டியில் ஒரு பெரிய எழுப்புதலும், பெரிய அசைவை உண்டாக்கும் செய்தியும் (குறிப்பாக ஏழு இடிமுழக்கசெய்தி என்று அவர்கள் கூறுவது போன்று) கிடையாது. கர்த்தருடைய வருகைக்காக மாத்திரம் நாம் காத்துக்கொண்டிருக்க வேண்டியவர்களாயிருக்கிறோம். ஏழாம் சபைக்கால தூதன் மூலமாக சபைக்கு கொடுக்கப்படவேண்டிய செய்தியே சபைக்கு கடைசி செய்தி. இனி சகோ ராபர்ட் லீ லாம்பர்ட்டின் செய்தியோ அல்லது சகோ. டால்டன் புரூஸ் செய்தியோ, அல்லது நமது நாட்டில் மும்பை வாழ் சகோ. டேனியல் கிறிஸ்டியான் செய்தியோ நமக்கு தேவையில்லை. (ஏனென்றால் இவர் மும்பையிலிருந்து தனது மூலமாக உலகம் முழுவதும் செய்தி செல்லும் என அந்நாட்களில் முழக்கமிட்டுக்கொண்டிருந்தார். என்னை பொறுத்தளவில் அது மாயையும், ஒரு எத்தனமானதாகவும் இருந்து, மறைந்து போயிற்று) லவோதிக்கேயா சபைக்கு கடைசி செய்தியை கொண்டுவந்த கடைசி செய்தியாளன் சகோ. வில்லியன் மாரியன் பிரன்காம்.

39. சகோ. பிரன்காம் இன்னும் தமிழில் மொழிபெயர்க்கப்படாத Bloomington IL யில் பிரசங்கிக்கப்பட்ட Uncertain Sound என்ற செய்தியில், பிரசங்க நாள் 15.04.1961 ல் பத்தி 97 ல் கீழ்கண்டவாறு கூறுகிறார் And you are hearing it for some of the last times, because I'm leaving the country; and there will never be another on the field till I am gone. **Thus saith the Lord.** There has not been and will not be. சகோ.பிரன்காம் தான் சென்ற பிறகு யாரும் இந்த ஊழியத்தின் அடுத்த கட்டமாக வரபோவது இல்லை. அது **கர்த்தர் உரைக்கிறதாவது** என கூறிவிட்டார். ஆதலால் நம் மத்தியில் சகோ. பிரன்காமுக்கு பின் நீ, நான் என்று போட்டி போடுபவர்களை கண்டு கொள்ளாதீர்கள். அவர்கள் கள்ளகபடமுள்ள, ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய்கள் என அடையாளம் கண்டு கொள்ளுங்கள். பாருங்கள் மோசேக்கு பின் யோசுவா. எலியாவுக்கு பின் எலிசா. அதேப்போன்று சகோ. பிரன்காமுக்கு பின் மற்றொருவர் எழும்ப வேண்டும். கர்த்தர் பயன்படுத்த வேண்டும் என்கிறார்கள். இதுவும் தவறான எண்ணம் / போதனை. ஏனென்றால் இந்நாளுக்குரிய

யோசுவா, பரிசுத்த ஆவியாகும். நீங்கள் ஒரு பரிபூரண மனிதனின் வளர்ச்சி படத்தை பார்த்தால் அங்கு ஏழாம் சபைக்கால தூதனுக்கு பின் பரிசுத்த ஆவி என்பதை காண்பீர்கள். ஆக இது ஏழாம் சபை காலமாக இருந்தாலும், தூதனுக்கு பின் மற்றொரு தூதன் இல்லை. மாறாக அது பரிசுத்த ஆவி. பாருங்கள், நாம் பரிசுத்த ஆவியின் யுகத்தில் இருக்கிறோம். பரிசுத்த ஆவியின் ஸ்தானத்தை எடுத்துக்கொள்ள முயற்சிக்கிறவன் பிசாசே. சகோ. பிரன்காமிற்கு பிறகு நான், நான் என கூறுபவர்கள் அனைவரும் கள்ளகபடமுள்ள, ஒளியின் தூதனுடைய வேஷத்தை தரித்தவர்களே.

40. அடுத்து மற்றும் ஒரு செய்தியிலிருந்து ஒரு எடுத்துக்காட்டையும் கவனியுங்கள். செய்தி **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு,** புதிய பதிப்பு, **ஐந்தாவது முத்திரை** பக்கம் 631, பத்தி 320, நாள் 22.03.1963. இப்பொழுது கவனியுங்கள். முதன்முறையாக அவன் எலியாவாக வருகிறான். இரண்டாவது முறை எலிசாவாக வருகிறான். மூன்றாவது முறை யோவன் ஸ்நானகனாக, நான்காம் முறை மல்கியா 4 ன் படியும், வெளி 10 : 6ன் படியும் அவன் ஏழாம் சபையின் தூதனாகவும், ஐந்தாம் முறை மோசேயுடன் யூதருக்கான செய்தியாளனாக 1,44,000 பேருக்காக வருகிறான். ஆகவே இது சபை எடுக்கப்பட்டபின் நிகழும். இந்த மொழிப்பெயர்பில் ஒரு தவறு உண்டு. தீர்க்கதரிசியின் செய்திகளை மொழிப்பெயர்ப்பதிலும், பின் அதை அச்சிட்டு வெளியிடுவதிலும் ஒரு தொழில் நடைபெற்று வருகிறது. இந்த **ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** நான் அறிய மூவர் இடைப்பட்டு, இதை அச்சிட்டு வெளியிட்டனர். முதலாவது கர்த்தருக்குள் நித்திரையடைந்த பாஸ்டர். S.P. ஜான் சாமுவேல் அவர்கள். அதை தழிழாக்கம் செய்தவர் நித்திரையடைந்த சகோ. சாமுவேல் கிறிஸ்டோபர் ஜக்கப் அவர்கள். இதை அவர் தனது **மணவாட்டிக்கூடாரம்** சார்பாக வெளியிட்டார். மேற்கூறிய பகுதி, பக்கம் 382 தொடக்கப்பகுதியாக உள்ளது. அடுத்து சகோ. சாமுவேல் கிறிஸ்டோபர் ஜேக்கப் மொழிப்பெயர்த்ததையே யார் வெளியிடுபவர் என்ற அறிவிப்பு இல்லாமல் மீண்டும் ஒரு முறை வெளியிட்டனர். அதில் இந்த பகுதி பக்கம் 413 ல் இரண்டாவது பத்தியாக உள்ளது. மூன்றாவதாக மொழிப்பெயர்த்தவர் யார் என்று குறிப்பிடப்படாமல், வில்லியம் பிரான்காம் நற்செய்தி கழகம் ஒரு மொழிபெயர்ப்பை வெளியிட்டது. என்னை பொறுத்தளவில் மூன்று மொழிபெயர்ப்புகளும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகள் தான் என்ற பழமொழிக்கு ஒத்ததாகவே உள்ளது. யாருடைய மொழிபெயர்ப்பும் நம்பதக்கதாக இல்லை. சகோ. சாமுவேல் கிறிஸ்டோபர் மொழிப்பெயர்த்ததையே சற்று வித்தியாசத்துடன் வெளியிட்டுள்ளார்கள். மூவர் வெளியீடுகளிலும் இங்கு நான் கூறும் தவறுகள் உண்டு. முதல் நபர் தவறு செய்தால் இரண்டாம் நபர் அதை திருத்தவேண்டும். இரண்டாவது நபர் திருத்தாவிட்டாலும் கூட மூன்றாவது நபராவது அதை திருத்தவேண்டும். ஆனால் இங்கு மூவரும் கண்டுக்கொள்ளவே இல்லை. ஏதோ சகோ. பிரான்காம் பெயரை சொல்லி புத்தகங்கள் வெளியிடுகிறார்கள். அதன் பேரில் ஒரு தொழில் நடக்கிறது என்ற நோக்கத்தோடே செயல்பட்டு வந்தனர். தவறை சுட்டிக்காட்டும் காலேப் யோசுவாவை குறித்து, இவனுக்கு வேலை எதுவும் இல்லை. அங்கு குறை, இங்கு குறை என்று ஏதாவது சொல்லிக்கொண்டே, எழுதிக்கொண்டே இருக்கும் நபர். இவர் எழுதுவதை யார் கண்டுக்கொள்ள போகிறார்கள் என இப்பொழுது விலாசம் தெரியாத / கிடைக்காத / கிடையாத வெளிநாடு சகோதரர் அந்தோணி ஆப்மா என்ற பரிசுத்தவான் அந்நாட்களில் என்னைப்பற்றி கூறினார். அதற்கு நம் நாட்டினர் ஜாலரா அடித்தார்கள். ஆக மொழிபெயர்ப்பாளர்களிடமும், வெளியிடுபவர்களிடத்திலும் தேவபக்தி என்பது அறவே கிடையாது. வில்லியம் பிரன்காம் குட்நியூஸ் சொசைட்டியின் முக்கிய பத்திரங்கள் சகோ. ஆப்மாவிடம் சிக்கிக்கொண்டதாகவும், அதனால் அந்த கட்டிடத்தை விலை பேசவும், சம்பாதிக்கவும் பிரயாசப்பட்டுவரும் கொள்ளைக்கூட்டம் அவரை வலைபோட்டு அலசி வருவதாகவும் ஒரு செய்தி பல மாதங்களுக்கு முன் என் காதில் வந்து விழுந்தது.

41. இங்கு கவனியுங்கள் The fourth was the seventh angel, or the last messenger to the church, according to Malachi 4 and Revelation 10 : 7 என்பதை மொழிப்பெயர்த்ததில் **கடைசி செய்தியாளன்** (Last messenger) என்ற வார்த்தையை மூவரும் விட்டுவிட்டனர். ஆக பிரியமானவர்களே சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் ஏழாம் சபைகால தூதன் மற்றும் கடைசி செய்தியாளன். இது வேதத்தில் பூர்வமானது. எட்டாவது நபர் என்ற ஒருவரை அவர்களாகவே ஏற்படுத்திக்கொண்டனர். இப்படிப்பட்டதான அரைகுறை மொழப்பெயர்ப்புகளால் அநேகர் இடறுகிறார்கள். மற்றொரு செய்தியாளன் வரவேண்டும் என்ற தவறான எண்ணம் கொள்கிறார்கள்.

42. அடுத்து கடைசி சபைக்கு கடைசி செய்தியும் கொடுக்கப்பட்டு முடிந்தது. இன்னொரு செய்தியும் கிடையாது. பாருங்கள் சூரிய அஸ்தமன மலையில் நிகழ்ந்தது என்ன? தேவன் தமது வார்த்தையை உறுதிப்படுத்துகிறார். இந்த சந்தடியெல்லாம் அதை குறித்துதான். கவனியுங்கள். அது வெளி 10 : 1 - 7 முடிய வாக்களிக்கப்பட்டுள்ள வார்த்தையை தேவன் நிறைவேற்றுதலாம். ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களில் அவன் எக்காளம் ஊதப்போகிறபோது தேவரகசியம் நிறைவேறும். வெளி 10 : 1-7 உரைக்கும் மறைக்கப்பட்ட ரகசியம் கடைசி சபைக்காலத்திற்கு அளிக்கப்படும் கடைசி செய்தி. இந்த காலத்தில் அப்படியே நிறைவேறுகிறது. பரி. லூக்கா 17 : 30 மனுஷகுமாரன் வெளிப்படும் நாள் (**மலையின் மேலுள்ள கவர்ச்சி என்ன?** பக்கம் 41, பத்தி 148, நாள் : 25.07.1965) ஆங்கிலத்தில் வெளி 10 : 7ல் உள்ள வசனம், தமிழில் வெளி 10 : 6 ல் உள்ளது. இதை என்றுதான் மாற்றி தமிழில் மொழிபெயர்த்து பிரசுரிப்பார்களோ தெரியவில்லை.

வெளிப்படுத்தின விசேஷம், இயேசு கிறிஸ்துவின் முழு வெளிப்பாடாகும். இதை குறித்த எல்லா இரகசியங்களையுமே ஏழு முத்திரை கொண்டிருந்து, அது இந்த கடைசி நாளில் லவோதிக்கேயா சபை காலத்தில், காலத்தின் முடிவில் திறக்கப்படவேண்டியதாயுள்ளது. சபைக்கு செய்தியை முடிக்கும் தேவனுக்கு துதி உண்டாவதாக (**எக்காளப்பண்டிகை** பக்கம் 32 பத்தி 2, நாள் 19.07.1964) பாருங்கள் சபைக்கு செய்தி முடிக்கப்பட்டாயிற்று. இனி மற்றொரு செய்தி இல்லை. அதற்காக தேவனை ஸ்தோத்தரிப்போம்

43. மேலும் கவனியுங்கள், அவர் என்ன செய்தார்? கடைசி செய்தியில் ஏழு முத்திரைகளை திறந்தார். ஏழு சபைக்காலங்களின் இரசியங்கள் அனைத்தும் ஏழு முத்திரைகளில் முத்தரிக்கப்பட்டிருந்தது (**கிறிஸ்துவின் மணவாட்டியின் காணக்கூடாத இணைப்பு** பக்கம் 46, பத்தி 2, நாள் 25.11.1965) பிரியமானவர்களே இங்கு கவனியுங்கள். **கடைசி செய்தி ஏழு முத்திரைகளின் வெளிப்பாடோடு முடிவடைகிறது. அது ஏழாம் சபை காலத்தில் நிறைவேறுகிறது.** இதனால் எட்டாவது தூதனுக்கு இங்கு தேவையுமில்லை, இடமுமில்லை. சகோ.பிரான்காமுக்கு பிறகு நீ, நான் என்பதெல்லாம் வெறும் வெத்துவேட்டு. அது கள்ளகபடமுள்ள வேலையாட்களின் சதி / வஞ்சிப்பு.

44. **அடுத்து எழுப்புதலை குறித்து சகோ. பிரன்காம் கீழ்கண்டவாறு கூறுகிறார்.** உலகம் முழுவதும் ஒரு மகத்தான எழுப்புதல் உண்டாகும் என்று நீங்கள் எதிர்பார்க்க வேண்டாம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகை தவிர இனி நடக்கபோவது வேறுஒன்றுமில்லை (**ஈஸ்டர் முத்திரை** பக்கம் 67, பத்தி 2, நாள் 10.04.1965) ஆனால் சகோ பிரன்காம் குறிப்பிடும் இந்த குறுகிய மிக வேகமான அந்த செய்தி என்ன? மேலும் அதற்கு சகோ. பிரன்காம் மூலம், ஏழாவது சபைக்கால தூதன் மூலமாக கொடுத்த செய்தி அடித்தளமாக காணப்படுமானால் அது எதுவாக இருக்கவேண்டும்? என்னை பொறுத்தளவில் நாம் பெற்றுக்கொண்ட இந்த செய்தி, அதாவது, ஏழாம் சபைக்கால தூதனுடைய செய்தி இஸ்ரவேல் ஜனங்களிடம் சென்று அங்கு 1,44,000 பேரை ஆயத்தப்படுத்த வேண்டியதாயிருக்கிறது. ஆதலால் இந்த செய்தி இஸ்ரவேலரிடம் எலியா மற்றும் மோசேயை கொண்டு செல்லவேண்டியதாயிருக்கிறது. அது மூன்றரை ஆண்டு காலங்களை கொண்ட ஒரு குறுகிய, வேகமான செய்தியாகும். இது குறித்து சகோ. பிரன்காம் கூறும்போது "அங்கே முத்திரையிடும் தூதன் அந்த 1,44,000 பேரை முத்திரையிட ஆரம்பிக்கையில், புறஜாதி சபையில் கதவுகள் மூடப்படும். யூதர்கள் பரிசுத்த ஆவியை யூதர்களிடம் கொண்டுசெல்வர். அவர்கள் உலகம் முழுவதையும் அசைக்கத்தக்கதான ஒரு எழுப்புதலை கொண்டிருப்பர். அல்லேலூயா ! தேவனுடைய வல்லமையானது யூதர்கள் மத்தியில் வெளிப்படும் (COD 1 : 2 பக்கம் 77, பத்தி 236 நாள் 03.01.1954) பிரியமானவர்களே இனி மணவாட்டி மத்தியில் ஒரு எழுப்புதல் இல்லை. மேலும் ஒரு எழுப்புதல் உலகத்தை அசைக்கத்தக்கதாக உண்டாக வேண்டும். அதற்கு ஏழாம் சபைக்கால தூதனுடைய ஊழியம் அஸ்திபாரமாக இருக்கவேண்டுமானால், அது இனி இஸ்ரவேல் ஜனங்கள் மத்தியில் உண்டாகும் குறுகிய கால எழுப்புதலேயாகும்.

45. **பனி வெண்புறா சிறகுமேல்** பக்கம் 48, பத்தி 205, 211 நாள் : 28.11.1965. அடுத்த நாள் ஒரு சத்தம் "மறுபடியும் மலைக்குப் போ என்றது (பத்தி 205) நான் பார்த்தபோது, அந்த பாறையிலிருந்த வெள்ளைபடிவ கல்லில் **வெள்ளை கழுகு** என்று எழுதப்பட்டிருந்து - யார் மூலம் அடுத்த செய்தி வரும்என்று அந்த தரிசனம் கூறின விதமாகவே. And there was wrote in the quantry in this stone, White Eagle just exactly what the vision said that the next message would come forth by. இங்கு வெள்ளை படிகக்கல் என்று கூறப்படவில்லை படிகக்கல் (Quantry) என்றே கூறப்பட்டுள்ளது. பாருங்கள் இந்த செய்தியோடு ஒன்றை கூட்டுவதும் குறைப்பதும் தான் இந்த மொழிபெயர்ப்பாளர்களின் பணி. இக்காலத்திற்குரிய செய்தி தகுதியற்ற மொழிபெயர்ப்பாளர்களை கொண்டு மொழிபெயர்க்கப்பட்டு வருவது துர்அதிர்ஷ்டம். ஆனாலும் அது தேவனால் தெரிந்துக்கொள்ளப்பட்டவர்களை வஞ்சிக்க முடியாது. அடுத்து யார் மூலம் அடுத்த செய்தி? சகோ ராபர்ட் லீ லாம்பர்ட்டின் மூலமாகவா? இல்லை சகோ. டால்டன் புரூஸ் மூலமாகவா? இல்லவே இல்லை. அப்படியனால் மும்பை சகோ. டேனியல் கிறிஸ்டியான் மூலமாகவா? அதுவும் இல்லை. அப்படியானால் பின் யார் மூலமாக? இதற்கு பதில் இந்த செய்தில் பத்தி 225 ல் உள்ளது. வயோதிபனாக நான் என் வாழ்நாள் முழுவதும் அவதிப்பட்டேன். அவர் ஏன் இப்பொழுது என்னை சுகப்படுத்தினார்? இந்த பாதையில் நான் இன்னும் ஒரு முறை சவாரி செய்வேன் என்று நம்புகிறேன். நான் ஒரு செய்தியை கொண்டுவர வேண்டும்... கர்த்தாவே, உமது ஊழியன் ஊழியத்திற்காக ஆஜராகிறேன் என்பதே. ஆமென், நான் ஆயத்தமாயிருக்கிறேன். பாருங்கள் சகோ பிரன்காம் யார் மூலம் அடுத்தசெய்தி என்பதற்கு இங்கு பதில் கூறிவிட்டார். அப்படியே அவர் ஊழியத்தில் நிறைவேறியது.

46. முடிவாக, கிறிஸ்து பிரன்காம் குருப்பினர் கொண்டுவந்துள்ள நயவஞ்சகமான போதனைகளுக்கும், சகோ. மோசஸ் தயானந்தத்தின் வெளிப்பாடுகளுக்கும் வேதவாக்கியங்களில் இடமில்லை. ஆதாரங்கள் இல்லை. மேலும் சகோ. டால்டன் புரூஸ் பணிவிடையாளர்கள் எட்டாவது தூதன் வரவேண்டும, அவர் வந்து (சகோ. ராபர்ட் லீ லாம்பர்ட்டின்) இந்த செய்திக்காக, மல் 4 அதி.க்காக முதல் இரத்தசாட்சியாக மரித்துவிட்டார், அதன்பின் சகோ. டால்டன் புரூஸ் எழும்பியுள்ளார் என மக்கள் மத்தியில் தங்கள் கட்டு கதையை உறுதிபடுத்த

அவர்கள் கையாண்டுள்ள இக்காலத்திற்குரிய செய்தியில் உள்ள பகுதிகள் யாவும் அவர்கள் உபதேசத்திற்கு, பொருளுக்கு பொருந்தாது. இவர்கள் இக்காலத்திற்குரிய செய்தியை எடுத்துக்கொண்டு, அதற்கு தங்கள் லௌகிக ஞானத்தின்படி விளக்கம் கொடுத்து, ஒவ்வொரு இடத்திலும் மூலைமுடுக்குகளில் நான்கு ஐந்து பேர்களை கொண்டு சபைகளை ஆரம்பித்து, மக்களை தங்கள் மாயமான தந்திரத்தினால் கொள்ளைகொள்ளும் **மேய்ப்பன்** போர்வையில் நடமாடும் ஆட்டுத்தோலைபோர்த்திய ஓநாய்களை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். பசியிலும் பட்டினியிலும் கிடக்கும் ஆடுகளை கொண்டு கொழுத்த கன்றுகளை அடித்து பிரியாணி சாப்பிட்டு, ஆடம்பரமாக வாழும், உடம்பை வளர்த்து, ஏசி கார்களிலும், வானவூர்திகளிலும் பவணிவரும் கள்ளகபடமுள்ள வேலையாட்களை குறித்து எச்சரிக்கையாயிருங்கள். அன்றியும் சகோதரரே நீங்கள் பரிசுத்த வேதவாக்கியங்களிலிருந்தும், இக்காலத்திற்குரிய செய்தியிலிருந்தும் கற்றுக்கொண்ட உபதேசங்களுக்கு விரோதமாய் பிரிவினைகளையும் இடறல்களையும் உண்டாக்குகிறவர்களைகுறித்தும் எச்சரிக்கையாயிருந்து அவர்களை விட்டு விலகவேண்டுமென்று கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் உங்களுக்கு புத்தி சொல்லுகிறேன். அப்படிப்பட்டவர்கள் நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவுக்கு ஊழியம் என்ற பெயரில் மனுஷர்களுக்கு ஊழியம் செய்து, உதவிகள் பெற்று தங்கள் வயிற்றுகே ஊழியம் செய்கிறார்கள். அவர்கள் தங்கள் நயவசனிப்பினாலும் இச்சக பேச்சினாலும் கபடில்லாதவர்களுடைய இருதயங்களை வஞ்சிக்கிறவர்களாயிருக்கிறார்கள். இவர்கள் வேதவாக்கியங்களிலிருந்து ஒன்றையும் எடுத்து போதிப்பதில்லை. இவர்கள் தாங்கள் உதவிபெறும் மனிதர்களின் உபதேசங்களை கொண்டுவந்து மக்களை குழப்புகிறார்கள். ஆனால் ஒன்றைமட்டும் நீங்கள் மறந்து விடாதீர்கள். **நியாயந்தீர்க்க தேவனுக்கு ஒரு நியமமம் உண்டு. அது தேவனுடைய வார்த்தை.** ஒருவன் என் வார்த்தைகளை கேட்டும் விசுவாசியாமற்போனால், அவனை நான் நியயந்தீர்ப்பதில்லை. : நான் உலகத்தை நியாயந்தீர்க்கவராமல், உலகத்தை இரட்சிக்க வந்தேன். என்னை தள்ளி என் வார்த்தைகளை ஏற்றுக்கொள்ளாதவனை நியாயம் தீர்க்கிறதொன்றிருக்கிறது. நான் சொன்ன வசனமே அவனை கடைசி நாளில் நியாயம் தீர்க்கும். (யோ 12 : 47, 48) யாராவது வேதத்தில் உள்ளவைகளில் ஏதாவது ஒன்றை கூட்டினாலும் அல்லது குறைத்தாலும், அவனுடைய பாகத்தை தேவன் ஜீவபுத்தகத்திலிருந்து கிறுக்கிப்போடுவார். ஆதலால் தேவனுடைய வார்த்தைதான் முக்கியதுவம் வாய்ந்தது. நான் தேவனுடைய வார்த்தையை விசுவாசிக்கிறேன், தியானிக்கிறேன், எழுதுகிறேன் மேலும் பிரசங்கிக்கிறேன். நீங்கள்? என்ற ஒரு கேள்வியுடனும், உங்களை கலக்குகிறவர்கள் எப்படிப்பட்டவர்களாயிருந்தாலும், தங்களுக்கேற்ற ஆக்கினை அடைவார்கள் என்ற ஒரு எச்சரிப்புடனும் இந்த நிருபத்தை முடிக்கிறேன்.

47. கர்த்தர் அவருக்கு சொந்தமான ஜனமாகிய உங்களுக்கு கடந்த ஆண்டுகளில் செய்த, இந்த ஆண்டு (2012) தொடக்கம் முதல் முடிவு வரை செய்யப்போகும் சகல நன்மைகளுக்காக சந்தோஷமும், மனமகிழ்ச்சியும் உள்ளவர்களாக நாம் காணப்படுவதற்காக கர்த்தரின் கண்கள் எப்பொழுதும் நம்மேல் வைக்கப்பட்டிருப்பதற்காக அவருக்கு ஸ்தோத்திர பலிகளை ஏறெடுப்போம். நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவினிடத்தில் அழியாத அன்புடனே அன்பு கூறுகிற யாவரோடும் கிருபை உண்டாயிருப்பதாக. ஆமென்.

**சகோ. காலேப் யோசுவா**

## செய்திகளின் தவறான மொழிப்பெயர்ப்பினால் நாம் சாத்தானாலே மோசம் போகாதபடிக்கு :

1. ஏழாம் சபைக்கால தூதனாகிய சகோ, வில்லியம் மாரியன் பிரன்காம், நான் அறிந்த வரையில் 1947 ம் ஆண்டு முதல் 1965 வரை சுமார் 1299 செய்திகளை பற்பல இடங்களில் பிரசங்கித்திருக்கிறார். இங்கு அவர் பிரசங்கித்த செய்திகளின் வருடத்தையும், ஒலிநாடாக்களில் பதிவுசெய்யப்பட்ட செய்திகளின் எண்ணிக்கைகளையும் உங்களின் அறிந்துக்கொள்ளுதலுக்காக கீழே தருகிறேன். இதன் ஆதாரம் : Master index to sermons by Rev. William M. Branham by Bro. David Mamalis, published in the year 1981 by The Willliam Branham Library, Arizona, U.S.A. தேதியிடப்படாத செய்திகள் - 5, 1947ம் வருடம் - 6 செய்திகள், 1948 /2, 1949/7, 1950/26, 1951/35, 1952/22, 1953/63, 1954/67, 1955/82, 1956/80, 1957/108, 1958/85, 1959/106, 1960/99, 1961/95, 1962/102, 1963 / 96, 1964/76, 1965/52. ஆக மொத்தம் 1299 செய்திகள். இவைகள் யாவும் தூதனுடைய தாய்மொழியாகிய ஆங்கிலத்தில் உள்ளது. ஆனால் அவர் சபைக்காலங்களில் கடைசி சபையாகிய லவோதிக்கேயா சபையின் தூதனாக இருப்பதால், அவரால் பிரசங்கிக்கப்பட்ட செய்திகள் விசுவாசிகளின் ஆத்தும ஆகாரமாயிருக்கிறது. கடைசி சபைக்கு கடைசி செய்தியாக இருக்கிறது. செய்திகள் மணவாட்டி எடுத்துக்கொள்ளப்படுதலுக்குரிய விசுவாசத்தை அவள் உள்ளத்தில் கொண்டு வருவதாக இருக்கிறது. விசுவாசத்தினாலே ஏனோக்கு மரணத்தை காணாதபடிக்கு எடுத்துக்கொள்ளப்பட்டான். (எபி 11 : 3) பாருங்கள் எடுத்துக்கொள்ளப்படுதலுக்கு நமக்கு விசுவாசம் தேவைப்படுகிறது. அந்த விசுவாசம் இக்காலத்திற்குரிய செய்தியிலிருந்து வரும். ஆதலால் அவரது செய்தி உலகம் முழுவதும் செல்ல வேண்டியதாயிருக்கிறது. இந்நாட்களில் அவரது செய்திகள் உலகம் முழுவதும் முக்கியமான அனைத்து பாஷைகளிலும் மொழிபெயர்க்கப்பட்டு, பிரசுரிக்கப்பட்டு, இலவசமாக விநியோகிக்கப்பட்டு வருகிறது. அதற்கென்று ஒவ்வொரு நாடுகளிலும் கர்த்தர் வாசல்களை

திறந்துக்கொடுத்துள்ளார். நமது நாட்டிலும் அது அனைத்து முக்கியமான மொழிகளிலும் மொழிப்பெயர்க்கப்பட்டுள்ளது. இவரது செய்திகள் கிறிஸ்துவின் மணவாட்டிக்கு, அவள் மணவாளனாகிய கிறிஸ்துவை பற்றிய அனைத்து வெளிப்பாடுகளையும் கொண்டதாக இருக்கிறது. ஏனென்றால் மணவாட்டி, தன் மணவாளனைப் பற்றிய விவரங்கள் அனைத்தையும் அறிந்துக்கொள்ள வேண்டியவளாயிருக்கிறாள். அநேகர் சகோ. பிரன்காம் ஆதி 1 : 1 முதல் வெளி 22 : 21 வரை அடங்கியுள்ள தேவனுடைய இரகசியங்கள் (Mystries of God) அனைத்தையும் அறிந்தவர். அவைகளை சபைக்களுக்கு வெளிப்படுத்திவிட்டார் என்கிறார்கள். நான் அதை ஏற்றுக்கொள்ளமுடியாது. வேதவாக்கியங்களில் கண்ட அனைத்து தேவனுடைய இரகசியங்களையும் (Mystries of God) கர்த்தர் தூதனுக்கு வெளிப்படுத்தாமல், மணவாட்டிக்கு தேவையான தேவரகசியத்தை (Mystry of God) வெளி 10 : 6 மாத்திரமே வெளிப்படுத்திக்கொடுத்துள்ளார் என்று நான் விசுவாசிக்கிறேன். கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைப்பற்றிய வெளிப்பாடு உலகத்தோற்றம் முதல் மறைபொருளாக இருந்து ஆறு சபைக்காலங்கள் தோறும் கொஞ்சம் கொஞ்சமாக வெளிப்படுத்தப்பட்டு, இந்த கடைசி சபைக்காலத்தில், கடைசி சபைக்கால தூதன் மூலமாக மறைப்பொருளாக இருந்த இரகசியம் முற்றிலும் வெளிப்படுத்தப்பட்டுள்ளது. யாருக்கு? கிறிஸ்துவின் மணவாட்டிக்கு மாத்திரமே. பாருங்கள் நீங்கள் கேள்வி பதில்களை தியாணித்தால், அநேக இடங்களில் தூதன், இது குறித்து தனக்கு தெரியாது, தெரியாது என பதில் கொடுக்கிறார். அவர் தேவரகசியங்கள் அனைத்தையும் தெரிந்துள்ளதாக காட்டிக்கொள்வதில்லை. அறிந்ததை கூறுகிறார் அறியாததை தெரியாது என்று கூறுகிறார். ஆனால் இன்று நம்மிடத்தில் உள்ள சில பந்தாக்கள் தங்களுக்கு தெரியாதது ஒன்றுமில்லை என அலட்டிக்கொள்கிறார்கள். இப்படிப்பட்டவர்களில் உங்கள் மும்பை பாஸ்டரும் ஒருவர். ஆனால் தூதன் அவ்வாறாக இல்லை. தனக்கு தெரியாததை வெளிப்படையாக தனக்கு தெரியாது என்றே கூறுகிறார். உங்கள் கவனத்திற்கு இங்கு சில உதாரணங்களை எடுத்துக்காட்டுகிறேன்.

அ. **கே.ப. 166** ஐ பார்த்தால் அங்கு மத் 16 : 9, 10 வசனங்களில் கூறிய 12 கூடைகள், 7 கூடைகள் எதற்கு எடுத்துக்காட்டு என்ற கேள்விக்கு அது என்வென்று இப்பொழுது எனக்கு நிச்சயமாக தெரியவில்லை என்கிறார் (கூடைகள் 12 குறித்து மத் 14 : 20, கூடைகள் 7 குறித்து மத் 15 : 37 ல் வாசியுங்கள்).

ஆ. **கே.ப. 393** ஐ தியானியுங்கள். எக்காளங்களுக்கும் மணவாட்டிக்கு சம்பந்தம் இல்லை என்று பரிசுத்த ஆவியானவர் உம்மிடம் உரைத்திருக்கிறார். 7 கலசங்களுக்கும் நமக்கும் ஏதாயிலும் சம்பந்தம் உண்டா? பரிசுத்த ஆவியானவர் அவ்விதம் வெளிப்படுத்தியிருக்கிறாரா என்று நான் பொறுத்திருந்து பார்க்கிறேன். இதுவரைக்கும் எனக்கு தெரியாது என்கிறார்.

இ. **கே.ப. 396.** உயிரோடிக்கின்ற மணவாட்டியின் சிறுகூட்டம், முதலாவது மணவாட்டி செய்தது போல, கர்த்தராகிய இயேசு மேகங்களின் மேல் வருவதற்கு முன்பு, எப்பொழுதாகிலும், எங்காகிலும் ஒன்றுகூடி எல்லாவற்றையும் பொதுவாக அனுபவிப்பாள் என்று நீங்கள் நம்புகின்றீர்களா? வேதவாக்கியங்களை ஆதாரமாக கொண்டு என்னால் நிருபிக்க முடியாது. ஒருகால் அத்தகைய நேரம் ஒன்று வரக்கூடும், எனக்கு தெரியாது என்கிறார். ஆதலால் சகோ பிரன்காம் அறியாத அநேக தேவரசகியங்கள் இன்னும் வேதவாக்கியங்களில் உண்டு. அவர் எல்லாம் அறிந்திருப்பாரானால் அது அவரை தேவனாக்கிவிடும். பாருங்கள் தேவன் ஒருவரே எல்லாவற்றையும் அறிகிறவர், சர்வஞானி. சகோ. பிரன்காமிற்கு எல்லாம் தெரியும் என கூறுபவர்கள் அவரை தேவன் ஆக்குகிறார்கள். அப்படியானால் அது பிசாசு. பாருங்கள் பிரன்காம் கிறிஸ்து உபதேசம் பிசாசினுடையதே. சகோ. பிரன்காம், பிரன்காம் என துதி பாடிக்கொண்டே இருக்கும் கூட்டம் அனைத்தும் பிசாசினுடையதே.

2. நமது நாட்டை பொருத்தளவில், நான் அறிய தமிழில் அந்நாட்களில் சகோ. டாக்டர். சாமுவேல் கிறிஸ்டோபர் ஜக்கப், சகோ. M.R. சாமுவேல், சகோ. S. ஜெயராஜ், சகோ. A. கிறிஸ்டோபர் ராஜ்குமார், சகோ. டாக்டர். ராபர்ட் J. ராஜய்யா, சகோ. பெஞ்சமின் ஜக்கப் போன்றவர்கள் செய்திகளை தமிழில் மொழிப்பெயர்த்து வந்தார்கள். இவர்களின் டாக்டர். ஜக்கப் அவர்களே அதிகமான செய்திகளை மொழிப்பெயர்த்துள்ளார்கள். ஆனால் இவர்களுக்குள் செய்தியை குறித்து கருத்து வேறுபாடுகள் இருந்தன. செய்தியை குறித்ததான முழுமன ஒற்றுமை இவர்களுக்குள் இருந்ததில்லை. அப்படியானால் இவர்களுடைய மொழிப்பெயர்ப்பு எப்படி இருந்திருக்கும் என்பதை நீங்கள் யூகித்துக்கொள்ளலாம். ஒவ்வொருவரும் அவரவர்கள் செய்தி கிரகித்துக்கொண்டதற்கேற்ப / விசுவாசத்திற்கேற்ப அவைகளை மொழிப்பெயர்த்தார்கள். தங்கள் சொந்த அபிப்பிராயங்களையும், கருத்துக்களையும் செய்தி மொழிப்பெயர்ப்புக்குள் நுழைத்து செய்தியை தாறுமாறாக்கினார்கள். நான் இந்த நிருபத்தில் முன் எழுதியபடி சகோ. மோசஸ் தயானந்தத்தை போன்று செய்திக்கு தங்கள் சொந்த கருத்துக்களை கொடுத்து மக்களை குழப்பத்திற்குள்ளாக அழைத்து சென்றனர். இவர்கள் ஒவ்வொருவருடைய மொழிப்பெயர்ப்பும், அவர்கள் செய்தியில் கொண்டுள்ள கருத்துக்களை பிரதிபலிக்கிதாக இருந்தது.

3. மேலும் சிலகாலம் செய்தியை மொழிப்பெயர்ப்பவர் யார் என்று குறிப்பிடாமலும், பிரசுரிப்பவர் யார் என்று கூறாமலும், **கல்வாரி பிரிண்டர்ஸ்,** சூளைமேடு, சென்னை - 600 094. என்று மட்டும் அறிவிக்கப்பட்டது. பின் காலப்போக்கில் அது **ஈவினிங் லைட் பிரிண்டர்ஸ்** பிரிண்ட் செய்ய **வில்லியம் பிரன்காம் குட்நியூஸ்**

**சொசைட்டி,** கோடம்பாக்கம், சென்னை - 600 024 என விலாசம் கொடுத்து பிரசுரிக்கப்பட்டது. மீண்டும் காலப்போக்கில் வில்லியம் பிரன்காம் குட்நியூஸ் சொசைட்டி ஆரம்பிக்கப்பட்டது. ஏழாம் சபைக்கால தூதனுடைய பெயரைக்கொண்டு அவருடைய நாமத்தை தூஷிக்க வேண்டாம் என அந்நாட்களில் அவர்கள் ஆரம்பித்த சொசைட்டி அனைத்து மெம்பர்களுக்கும் எழுதினேன். யாரும் கண்டுக்கொள்ளவில்லை. பின் இந்த செய்திக்கு The Spoken Word by William Marrion Branham என பெயர் கொடுத்து, பின் கீழே **"உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்தாகும்"** என தலைப்பு கொடுத்தார்கள். இங்கு The Spoken Word by William Marrion Branham என்ற தலைப்பு OK. ஆனால் அதன் கீழ் **உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து** என்ற சிறு தலைப்பு பிசாசினுடையதே. ஏனென்றால் **தேவனுடைய வார்த்தையே மூலவித்து.** சகோ. பிரன்காம் செய்திகளை / அவரால் உரைக்கப்பட்ட வார்த்தைகளை மூலவித்து என்று கூறுவது தேவதூஷணம் என எழுதினேன். ஆனாலும் அவர்கள், அவர்கள் போக்கிலே சென்றார்கள். நான் எழுதும் ஒவ்வொரு காரியத்தையும் இன்று போல் அன்றும் அசட்டையே பண்ணினார்கள்.

4. இதன் மத்தியில் **"ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே ..."** வெளி 10 : 6 தலைப்பில் சில செய்திகளை **வாய்ஸ் ஆப் காட் டேப் லென்டிங் லைபிரரி,** நுங்கம்பாக்கம், சென்னை - 34. வெளியிட்டார்கள். இந்த தலைப்பு தான் சகோ. பிரன்காம் பிரசங்கித்த செய்திகளுக்கு வேதவாக்கியங்களின் அடிப்படையில் சரியானதொன்றாகும். ஆதலால் இதர அனைத்து தலைப்புகளும் வேதவாக்கியங்களுக்கு முரணானதே. ஆனால் இவர்களும் யார் தூதனுடைய செய்தியை மொழிப்பெயர்த்தது என்பதை வெளியிட மறுத்தார்கள். மொழிபெயர்த்தவர்களின் குடும்பம் செய்தியில் இல்லையென அந்நாட்களில் அறியவந்தேன். ஆதலால் அவர்களுக்கு மொழிப்பெயர்க்க தகுதியில்லை.

5. **வில்லியம் பிரன்காம் குட்நியூஸ் சொசைட்டி** ஆரம்பிக்கப்பட்டு, அதன் பொறுப்பை சகோ. டாக்டர் S.C. ஜக்கப் ஏற்றுக்கொண்டார்கள். ஆனால் அவருடைய குடும்பத்தினர்கள் யாரும் அந்நாட்களில் செய்தியில் இல்லை. அவர்கள் ஸ்தாபனத்தை சேர்த்தவர்களாகவே இருந்தார்கள். ஆதலால் அவரது தலைமை ஏற்கக்கூடியதாக இல்லை. **ஆக வில்லியம் பிரன்காம் குட்நியூஸ் சொசைட்டி ஆரம்பமே முரண்பாடாகத்தான் இருந்தது.** இவர்கள் செய்தியை மொழிப்பெயர்ப்பது யார் என்பதை விசுவாசிகளுக்கு அறிவித்தார்கள். மொழிப்பெயர்ப்பாளர்களுக்கு ஒரு பக்கம் மொழிப்பெயர்க்க சம்பளம் பேசி, அந்த மொழிப்பெயர்ப்பை ஒரு தொழிலாக மாற்றிவிட்டார்கள். மொழிப்பெயர்ப்பாளர்கள் ஏனோ தானோ என்று எவ்வளவு சீக்கிரமாக ஒரு செய்தியை மொழிப்பெயர்க்கமுடியுமோ அவ்வளவு சீக்கிரமாய் மொழிப்பெயர்த்து பணவரவை மட்டும் எதிர்நோக்கியிருந்தார்கள். சகோ டாக்டர். S.C. ஜக்கப் அவர்களுக்கும் பக்கவருமானம். ஒருபக்கம் அவருக்கு அரசாங்க ஊழியம் உண்டு. அங்கும் அவர் செல்லவேண்டும். பின் மொழிப்பெயர்ப்பு, பிரஸ் காரியங்களை கவனிக்க வேண்டும். அதற்கும் ஒரு ஊதியம். பலவழிகளிலிருந்து பணவரவு இருந்ததால் எல்லா பணிகளும் அவசர அவசரமாக நடைபெற்றது. ஆதலால் இவர்களது அனைத்து மொழிப்பெயர்ப்புகளிலும் குளறுபடிகள் உண்டு.

6. **இங்கு தமிழ் மொழிப்பெயர்ப்புகளிலும் உதாரணத்திற்காக சில தவறுகளை சுட்டிக்காட்ட விரும்புகிறேன்.**

அ. **கிறிஸ்துவின் மணவாட்டியன் காணக்கூடாத இணைப்பு** ஏழாம் தூதனுடைய சத்தத்தின் நாட்களிலே வெளி 10 : 6 Bride Tabernacle. Bro. S.P. ஜான் சாமுவேல் வெளியீடு. செய்தியில் பக்கம் 68, பத்தி 2. "இது தேவன் மறுபடியுமாக மனித மாம்சத்தில் வருவார் என்பதை காட்டுகிறது" என மொழிப்பெயர்த்துள்ளார்கள். ஆனால் இது ஆங்கிலத்தில் It would be God working in human flush again என உள்ளது. அப்படியானால் இதன் சரியான மொழிப்பெயர்ப்பு என்ன? இது தேவன் மறுபடியும் மாம்ச சரீரத்தில் கிரியை செய்வார் என்பதை காட்டுக்கிறது என்பதாகும். பாருங்கள் மாம்ச சரீரத்தில் கிரியை செய்வார் என்பதற்கும், மாம்ச சரீரத்தில் வருவார் என்பதற்கு உள்ள வித்தியாசத்தை உங்களால் புரிந்துக்கொள்ள முடிகிறதா? ஆனால் இந்த பகுதி WBGNS பதிப்பில் சரியாக உள்ளது. சத்தியத்தை தலைகீழாக மாற்றினார்கள்.

ஆ. மற்றுமொரு செய்தி : **இயேசு நோக்கி பார்த்தல்** (Looking unto Jesus) இதுவும் வாய்ஸ் ஆப் காட் மொழிப்பெயர்ப்பின் அநாகரீகத்தை காண்பிக்கிறது. செய்தியின் பக்கம் 42, பத்தி 179. "ஆனால் அவர், சோதோமில் நடந்தது போன்று இந்த கடைசி நாட்களில் மனித மாம்சத்தில் வெளிப்படுவார் என்று வாக்களித்துள்ளார்" ஆனால் இது ஆங்கிலத்தில் But he promised in the last days that He would manifest himself in human flush like He did there at sodome. இந்த ஆங்கில வார்த்தையின் சரியான அர்த்தம் என்ன? தேவன் தன்னை மாம்ச சரீரத்தில் வெளிப்படுத்துவார் என்பதாகும். தேவன் மனித சரீரத்தில் வெளிப்படுவார் என்பது கள்ளகபடமுள்ள வேலையாட்களின் மொழிப்பெயர்ப்பு. தேவன் தம்மை மாம்ச சரீரத்தில் **வெளிப்படுத்துவார்** என்பதற்கும் **வெளிப்படுவார்** என்பதற்கும் உள்ள வித்தியாசத்தை உங்களால் புரிந்துக்கொள்ள முடிகிறதா? சத்தியம் தாறுமாறாக்கப்பட்டது.

இ. மீண்டும் ஒரு செய்தி : **எங்காளப் பண்டிகை பக்கம் 29** , முதல் பத்தி, கடைசி வரி "சரி, மாம்சமாகிய

வார்த்தையே நாம் காணும்போது **இக்காலத்தின்** ஒளியாயுள்ளது. இது ஆங்கிலத்தில் Allright. The word made flesh is the Light of the Age when you see it. இதன் சரியான மொழிப்பெயர்ப்பு "நீங்கள் காணும்போது வார்த்தை மாம்சமாகி **காலத்தின்** ஒளியாக இருக்கிறது. பாருங்கள் காலத்தின் ஒளியாக என்பதற்கு இக்காலத்தின் ஒளியாக என்பதற்கும் உள்ள வித்தியாத்தை. காலத்தின் ஒளி என்பது காலங்கள்தோறும் ஒளியாக இருக்கிறது என்பதாகும். இக்காலத்திற்குரிய ஒளி என்பது சரியல்ல. செய்தியை கூட்டு குறைக்க கூடாது. கூட்டிக்குறைப்பது பிசாசு.

ஈ. மீண்டும் ஒரு முக்கியமான செய்தியை இவர்கள் தாறுமாறாக்கி இருப்பதை கவனியுங்கள். **கே.ப. 308** பத்தி 186. இது ஆங்கிலத்தில் And I can't believe that adultery was a predestinated seed. you understand ? இதை தமிழில் "விபசாரத்தினால் உண்டாகும் குழந்தை தெரிந்துக்கொள்ளப்பட்ட வித்து என்பதை என்னால் நம்பமுடியாது என ஆங்கில வார்த்தையை தாறுமாறாக்கி தமிழில் மொழிப்பெயர்த்துள்ளார்கள். இது முற்றிலுமாக செய்தியின் கருத்தையே மாற்றிவிட்டது என்பதை பாருங்கள். விபச்சாரம் என்பதற்கும், விபச்சாரத்தில் பிறந்த குழந்தை என்பதற்கு வித்தியாசம் உண்டல்லவா? இது செய்தியை கூட்டியும் குறைப்பதும் ஆகும். அது பிசாசு.

உ. அடுத்து ஆங்கில செய்தியிலும் அலட்சியம் செய்யமுடியாத, மிகப்பெரிய, மன்னிக்கமுடியாத தவறுகள் உண்டு என்பதையும் இங்கு சுட்டிக்காட்ட விரும்புகிறேன். The revelation of the Seven Seals printed in 1993, page 93 & 94, Para 256 "When the seventh angel is giving his massage, the last trumpet shall sound, and the dead in Christ shall rise" என உள்ளது. வில்லியம் பிரன்காம் குட்நியூஸ் சொசைட்டி மொழிப்பெயர்த்துள்ள செய்தியிலும் **"ஏழு முத்திரைகளின் வெளிப்பாடு** - ஏழு சபையின் காலங்களுக்கும் ஏழு முத்திரைகளுக்கும் இடையே உள்ள பிளவு (புதிய பதிப்பு) பக்கம் 176, பத்தி 256. ஏழாம் தூதன் தன் செய்தியை அளிக்கும்போது கடைசி எக்காளம் முழங்கும். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுத்திருப்பார்கள் என்றே உள்ளது. **ஆனால் ஆங்கில செய்தியும் அதன் தமிழ் மொழிப்பெயர்ப்பும் தவறு**. பாருங்கள் ஆங்கிலத்தில் Voice of God Recordings வெளியிடும் ஆங்கில புத்தகத்திலேயே தவறு என்றால் பின் நம்முடையவர்களை குறைக்கூறி என்ன பயன்? இந்த வார்த்தை சகோ. பிரன்காம் பிரசங்கித்த செய்தியில் அதாவது ஒலிநாடாவில் When the seventh angel has given his massage என பிரசங்கிப்பதை கேட்டேன். அதாவது ஏழாம் தூதன் தன் செய்தியை அளித்தப்பின் என உள்ளது. பாருங்கள் **ஏழாம் தூதன் தன் செய்தியை அளித்தப்பின்** என்பதற்கும், **ஏழாம் தூதன் தன் செய்தியை அளிக்கும்போது** என்பதற்கும் உள்ள வித்தியாசத்தை உங்களால் புரிந்துக் கொள்ளமுடிகிறதா? மாயை எல்லாம் மாயை.

7. சகோ. A. கிறிஸ்டோபர் ராஜ்குமார் The way of a true prophet என்ற செய்தியை தமிழில் **ஒரு உண்மையான தீர்க்கதரிசியின் பாதை** என்று மொழிப்பெயர்க்கும்போது ஆங்கிலசெய்தியில் உள்ள முதல் சுமார் 11 பக்கங்களை மொழிப்பெயர்க்காமலே விட்டுவிட்டார். 11 வது பக்கத்தின் மத்தியிலிருந்து தான் மொழிப்பெயர்ப்பையே ஆரம்பித்துள்ளார்.

8. சகோ. டாக்டர். S.C. ஜக்கப் நித்திரையடைந்தபின் சகோ. மோசஸ் தயானந்தம் பதவி பிரமாணம் எடுத்துக்கொண்டார். சகோ. ஜக்கப் நம் வெளிநாடு சகோதரர்களுக்கு அடிக்கடி ஆலோசனைகள் கொடுப்பார். அவர்களுடைய ஆலோசனைகளை இவர் சில வேளைகளில் நிராகரிக்கவும் செய்வார். அந்த தைரியம் அவருக்கு இருந்தது. அடுத்து பிரஸ்க்கு வரும் ஊழியக்காரர்களுக்கு உதவிகள் செய்து தாங்கவும் செய்வார். அதற்கு பணம் எங்கிருந்து வந்தது? எல்லாம் மொழிப்பெயர்ப்பு, பிரிண்ட் மற்றும் வினியோகத்திற்காக ஒதுக்கப்படும் பணங்களை கையாடல் செய்து உதவிகள் செய்வார். நவீன ராபின் ஹூட். ஆதலால் அவருக்கு கைநஷ்டம் எதுவும் இல்லை. பிரஸ்க்கு செல்லும் சகோதரர்களுக்கு ரூ. 300/-, ரூ. 500/-, ரூ. 1000/- என உதவிகள் செய்வார். இதற்கு மாறாக சகோ. மோசஸ் தயானந்தம் வெளிநாடு சகோதரர்களுக்கு கை பொம்மையாகவே இருந்து வந்தார். அவர்கள் முன் கைக்கட்டி நின்று ஆம், ஆம் என்று சொல்பவராகவே இருந்தார். வரவுகளை கொண்டு தன்னை தான் தேற்றினாரேயன்றி, பிறறை ஆதரிக்கவில்லை. தானும் தன் குடும்பத்தினருமாக செய்திகளை மொழிப்பெயர்ப்பதில் ஈடுப்பட்டனர். தமிழ் மொழிப்பெயர்ப்பு அவரது குடும்பப்பணியாக மாறியது. பணம் ஓரிடத்திலே சேர்ந்தது.

9. இடைப்பட்ட நாட்களில் இவருக்கு போட்டியாக பட்டாபிராம் பாஸ்டர். சகோ. எட்வர்ட், சகோ. அந்தோணி ஆப்மா பலத்தில் எழுந்தார். சகோ. மோசஸ் தயானந்தத்தின் பதவிக்கு போட்டியிட்டார், முயற்சிகள் பல செய்தார், முடிவாக மண்ணையே கவ்வினார். வெளிநாட்டிலிருந்து வரும் அனைத்து ஊழியக்காரர்களுக்கும் தானே பிரதிநிதி, தன்னையே அல்லாமல் இவர்கள் இந்தியாவில் உள்ள சபைகளுக்கு செல்லமுடியாது என கொக்கரித்தார். இவரது டைலாக்குகள் இன்னும் எத்தனையோ உண்டு. ஆனால் இப்பொழுது பொந்துக்குள் பதுங்கிய நிலையில் உள்ளார்.

10. முடிவில் சகோ. மோசஸ் தயானந்தத்திற்கு எதிர்ப்புகள் தோன்றின. ஒருபக்கம் தன்னை கர்த்தரால், அவரது சரீரமாகிய சபை பக்திவிருத்தியடைய சுவிசேஷகனாக ஏற்படுத்தப்பட்டவன் என்று கூறிக்கொண்டார்.

மறுபுறம் அவர் சார்ந்திருக்கும் சபை அவரை சுவிசேஷகனாக ஏற்படுத்தியது எனவும் கூறிக்கொண்டார். மற்றொரு பக்கம் வில்லியம் பிரன்காம் குட்நியூஸ் சொசைட்டியின் நிர்வாகியாகவும் இருந்தார். அதன் மூலம் இவருக்கு விளம்பரம் அதிகம் கிடைத்தது. இந்த விளம்பரத்தைக் கொண்டு உலகம் சுற்றும் வாலிபன் ஆனார். மூன்றாவது ஆங்கில செய்தியை தமிழில் மொழிப்பெயர்க்கும் வேலை. அது இவரின் குடும்பப்பணியாக மாறியது. இவ்வாறாக பல முகங்களினால் தன்னை மக்களுக்கு வெளிப்படுத்தலானார். முடிவாக இவரது எதிரிகள் இவரை தூக்கி எறிந்தனர். ஒரே நாளில் இவரது காரியங்களை முடிவுக்கு கொண்டுவந்தனர். அதன் முடிவு பிரிண்டிங் பிரஸ் விலை பேசப்பட்டு விற்பனையானது. சகோ. அந்தோணி ஆப்மா ஒத்துழைப்பு இல்லாததால் பலகோடிகள் பெருமான கட்டிடம் இன்னும் விலைபோகாமல் இருக்கிறது என அறியவந்தேன் ஆனால் அதே இடத்திலே வில்லியம் பிரன்காம் குட்நியூஸ் சொசைட்டி பெயரிலே நமது மத்தியில் உள்ள பிரபலமான, அநேக மக்களை வசிகரித்துள்ள, நல்ல வருமானத்தை தேடிக்கொண்ட திருமண ரிஜிஸ்டார், பாஸ்டர் அவர்கள் கட்டிட விற்பனையை தானே மேற்கொள்ளவேண்டும் என்று நல்ல எண்ணத்தோடோ / கெட்ட எண்ணத்தோடோ நினைத்து, அந்த தன் கையில் தக்கவைத்துக்கொண்டு சின்னஞ்சிறு செய்திகளை, செய்தியை நன்கு அறியாதவர்களை, செய்தியில் பழக்கம் இல்லாதவர்களை கொண்டு தமிழில் மொழிப்பெயர்த்து, அவ்வப்போது நாங்களும் செய்தியை மொழிப்பெயர்த்து வெளியிடுகிறோம் எனக்கூற, சில செய்திகளை வெளியிட்டு வருகிறார். பிரிண்டிங் வெளியே செய்கிறார். ஆனால் அவைகளை அனுப்பி வைக்க, சுமார் 4000 புத்தகங்களை அனுப்பிவைக்க இவ்வளவு பெரிதான ஒரு கட்டிடத்ததை பயன்படுத்தி வந்தார். ஆனால் இப்பொழுது அந்த பணியை அங்கிருந்து காலி செய்துவிட்டார் என அறியவந்தேன்.

11. அடுத்து, தான் தூக்கி எறியப்பட போவதை முன்கூட்டியே அறிந்த சகோ. மோசஸ் தயானந்தம், உஷாராக இருந்து, சில வெளிநாடு சகோதரர்களை தன்வசப்படுத்தக்கொண்டார். வருமானத்திற்கு வழிவகைகளை தெரிந்துக்கொண்டார். ஜெர்மன் சகோதரர் பாஸ்டர். கெர்டு ரோடேவால்டு எழுதிவரும் செய்திக் குறிப்புகளை தமிழில் மொழிப்பெயர்த்து வெளியிட ஒப்பந்தம் செய்துக்கொண்டுள்ளார். ஒரு பாஸ்டர் வெளியிடும் செய்திகளை ஒரு சுவிசெஷகன் மொழிப்பெயர்த்து வெளியிடுகிறார். இது என்ன அவமானம்? உண்மையாகவே தேவனுடைய அழைப்பைப் பெற்ற ஒரு சுவிசேஷகன் இப்படிப்பட்ட தொழிலில் இறங்குவானா? எப்படியோ தன் ஊழியத்திற்கு பக்கபலமாக ஒரு சில வெளிநாடு ஊழியர்களை வைத்துக்கொண்டு தன் தொழிலை மீண்டும் ஆரம்பித்துவிட்டார். இவர்களுக்கு வெளிநாட்டின் உதவியில்லாமல் ஊழியம் செய்ய முடியாது. இவர் சகோ . பிரன்காம் செய்திகளையும் அவ்வப்போது மொழிப்பெயர்த்து பிரிண்ட் செய்கிறார். இவர் தேவனால் ஏற்படுத்தப்பட்ட ஒரு சுவிசேஷகன் என்றால், தேவன் தன் உள்ளத்தில் வைத்த, வெளிப்படுத்திய காரியங்களை சபை பக்திவிருத்திக்காக அதை வெளியிடலாம். அதற்கு மாறாக பிறர் வெளியிடும் செய்திகளை மொழிப்பெயர்த்துக்கொண்டிருப்பது ஒரு சுவிசேஷகனுக்கு அழகில்லை. அது அவருடைய பணியும் அல்ல. ஒன்று கர்த்தர் கொடுத்த சுவிசேஷ பணிகளை செய்யுங்கள். அல்லது பிறர் செய்திகளை மொழிப்பெயர்த்துக்கொண்டிருங்கள். இந்த இரண்டில் ஏதாவது ஒன்றை சகோதரன் தெரிந்துக்கொள்வது அவருக்கு நல்லது என்று ஆலோசனை கூறுகிறேன். நான் அறிய இன்னும் இரு சகோதரர்கள் தங்களை சுவிசேஷகர்கள் என்று பெருமை பாராட்டி வந்தனர். ஆனால் இப்பொழுது அவர்கள் இருக்கும் இடம் தெரியாமல் காணப்படுகிறனர். நான் ஏற்கனவே இவர்கள் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்டவர்கள் அல்ல என எழுதியுள்ளேன். இவர்கள் தாங்கள் கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட சுவிசேஷகள் எனக்கூறிக்கொண்டு பணம் சம்பாதிக்க வெளிநாடுகளுக்கு மனைவி மக்களை இங்கு விட்டுவிட்டு ஓடினவர்கள். போன மச்சான் திரும்பி வந்த பழமொழியின் படி திரும்பியும் வந்தார்கள்.

12. நான் அநேகம் ஆயிரம் ஆத்துமாக்களை தேவனுடைய வார்த்தையோடும், இக்காலத்திற்குரிய செய்தியோடும் தேவன் என் உள்ளதை வைத்த வெளிப்பாடுகளோடும் **இயேசுவே வாரும்** இதழ் மூலமாக சந்தித்து வருகிறேன். கடந்த 34 ஆண்டுகளாக என்னுடைய அளவை / அதாவது என்னுடைய அழைப்பை மாற்றி மாற்றி மற்றவர்களுடைய வேலைக்குட்பட்டு அதாவது மற்றவர்களுடைய வேலையை நான் செய்து அதாவது என்னுடைய சுவிசேஷ பணியை விட்டுவிட்டு பிறருடைய பணியை அதாவது வெளிநாட்டு சகோதரர்கள் வெளியிடும் புத்தகங்களை மொழிப்பெயர்த்து விநியோகம் செய்துக்கொண்டு, அல்லது வெளிநாட்டினர் நம் நாட்டில் இறக்குமதி செய்யும் அவர்கள் கருத்துகளுக்கு அவர்கள் செய்யும் உதவிகளை கொண்டு, அதற்காக அவர்களின் கருத்துக்களை பிரசங்கித்துக்கொண்டு அதில் நான் என்னை குறித்து மேன்மை பாராட்டவில்லை. 2 கொரி 10 : 14-16 வசனங்களை தியானியுங்கள்.

13. பாஸ்டர் ஐயா தலைமையில் வில்லியம் பிரன்காம் குட்நியூஸ் சொசைட்டியும் தற்போது லோக்கல் சபைகளிடம் எதாவது ஒரு செய்தியை மொழிப்பெயர்த்து வெளியிட பணஉதவி செய்யுங்கள் என திருவோடு நீட்டி பிச்சை எடுத்துத்தான் செய்திகளை மொழிப்பெயர்த்து வெளியிடவேண்டியதாயிருக்கிறது. சபையில் இலட்சக்கணக்கில் பணம் தசமபாகம் காணிக்கையாக வருகிறது. தசமபாகத்தை கொண்டு கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட ஐந்து வகை ஊழியங்களில் உள்ளவர்களை தாங்கி, காணிக்கைகளைக்கொண்டு தீர்க்கதரிசியின் செய்திகளை மொழிப்பெயர்த்து, பிரசுரித்து அதை விநியோகிக்கலாமே? அதற்கு ஏன் மனம்

இல்லை? அரசியலில் குடும்பவாரிசுகளை கொண்டு மக்கள் சேவை என்ற பெயரில் கொள்ளை. அதே பாணியில்தான் சபையிலும் குடும்ப அங்கத்தினர்களை கொண்டு கொள்ளையோ கொள்ளை. அங்கும் அரசியலில் தனிபட்டஒரு குடும்பம் வாழ்கிறது. இங்கும் சபைகளில் தனிப்பட்ட பாஸ்டரின் குடும்பமே வாழ்கிறது. அரசியலில் தலைவர்கள் எப்படியோ அப்படியே சபைகளிலும் தலைவர்கள் / பாஸ்டர்கள் இருக்கிறார்கள். நீங்கள் சபையைக் கொண்டு அரசியலை நிதானிக்கலாம், அரசியலைக் கொண்டு சபையை நிதானிக்கலாம். அரசியலும் சபையும் கலந்துவிட்டதை நீங்கள் அறிவீர்களா?

14. நான் என்னுடைய சுமார் 34 ஆண்டு ஊழியத்தின் பாதையில் கண்டதாவது : நம்முடன் விசுவாசத்தில் உள்ள சகோதரர்களுக்கு ஊழியங்களை தாங்க வேண்டும், ஊழியக்காரர்களுக்கு தேவனுக்குரிய தசமபாகத்தை பண்டகசாலையாகிய சபைக்கு கொண்டு சேர்த்து ஆதரிக்கவேண்டும் என்ற எண்ணமே கிடையாது. ஆனாலும் தங்களை கிறிஸ்துவின் மணவாட்டி என மார்பு தட்டிக்கொள்வார்கள். அதில் ஒன்றும் குறைவு இல்லை. பாருங்கள் ஓசியில் கிடைக்கிறது என ஆசைப்பட்டு தங்களை பாஸ்டர்கள், மேய்ப்பர்கள், சுவிசேஷகர்கள் என அழைத்துக்கொண்டு எனக்கு 100 புத்தகங்கள், 200 புத்தகங்கள் அனுப்புங்கள், அனுப்புங்கள் என மிக்க வாஞ்சையோடு கேட்பார்கள். அனுப்புகிறவர்களும், ஏதோ சகோதரன் ரொம்ப ஊழியவாஞ்சையில் இருக்கிறார் என நினைத்த அவர் கேட்டுக் கொண்டபடி அனுப்பி வைப்பார்கள். பின் அதன் முடிவு என்ன? அந்த புத்தகங்கள் அநேக ஆண்டுகளாக ஒரு மூலையில் கிடந்து குப்பையும் தூசியும் பிடித்து, கரையான் அறித்து ஒன்றுக்கும் உதவாமல் போகும். மற்றபடி பழைய பேப்பர் கடைகளுக்கு செல்லும். ஒருவன் தான் சம்பாதித்தப்பணத்தை இப்படி பாழாக்குவானா? இப்படி செய்தி புத்தகங்களை பாழாக்கிறவர்களும் தங்களை கிறிஸ்துவின் மணவாட்டி என அழைத்துக்கொள்கிறார்கள். அப்படி தங்களை அழைத்துக்கொள்வது அவர்களுக்கு வெட்கமாக தெரியவில்லையே? வேதவாக்கியமானது விற்காதே, ஆனால் அதே நேரத்தில் வாங்கு என்றே சொல்கிறது. கொடுக்கிறவர்கள் விற்கமாட்டார்கள். ஆனால் பெற்றுக்கொள்கிறார்கள் வாங்க வேணுமே. அதாவது அதற்குரிய விலையை கொடுத்து பெற்றுக்கொள்ளவேண்டும் என்றே வேதவாக்கியங்கள் கூறுகிறது. ஆனால் நம்முடைய ஆட்கள், முடிவுகால செய்தி விசுவாசிகள் ஓசியிலேயே பிழைக்கத்தானே நினைக்கிறார்கள். வாங்க மனமில்லையே. நான் இப்படிப்பட்ட அநேக விசுவாசிகளை அடையாளம் கண்டுவைத்திருக்கிறேன். ஆதலால் தான் எழுதுகிறேன்.

15. மேலும் கடைசி நாட்களில் கொடிய காலங்களில் நாம் இருப்பதால் தீர்க்கதரிசியின் செய்திகளை யார் தான் மொழிப்பெயர்ப்பது, விநியோகிப்பது என்கிற ஒரு அமைப்பு இல்லாமல் போய்விட்டது . நினைத்தவர்கள் எல்லாம் மொழிப்பெயர்ப்பை கையாள ஆரம்பித்துவிட்டார்கள். இதனால் நம் மத்தியில் இந்நாட்களில் வரும் மொழிப்பெயர்ப்புகளை நம்மமுடியாது. நாம் மிக்க கவனமாக இருக்கவேண்டும். சமீப நாட்களில் எனக்கு சில செய்தி புத்தகங்கள் கிடைத்தன. அந்த செய்தியை மொழிப்பெயர்த்தது யார் என்று கூறப்படவில்லை. மேலும் நெய்வேலி பகுதியை சார்ந்த சகோ. குமரநேசர் என்ற விசுவாசியின் விசுவாச வெளியீடு மற்றும் Bride Ministry (Rev. 22 : 17) மூலமாக இவை விநியோகம் செய்யப்படுகிறது என்று கூறப்பட்டு, பல செல் நம்பர்களை கொடுத்துள்ளார்கள். இவர்களுக்கென்று விலாசம் ஏதும் கிடையாது. நரிகுறவர்களும் கைகளில் செல் வைத்திருக்கிறார்கள். ஆனாலும் அவர்கள் நாடோடிகாளாக திரிகிறார்கள். ஆதலால் இவர்கள் நாடோடிகளாக இருப்பார்களோ என்கிற ஐயம் என் உள்ளத்தில் எழும்புகிறது. இப்படியாக விலாசம் இல்லாத நாடோடிகள் எல்லாம் தீர்க்கதரிசியின் செய்தியை, இக்காலத்திற்குரிய செய்தியை, வேதவாக்கியங்களை கையாளஆரம்பித்துவிட்டார்கள். இவர்களும் **உரைக்கப்பட்ட வார்த்தையே மூலவித்து** என தலைப்புக் கொடுத்து கீழே William Marrion Branham என எழுதுகிறார்கள். நான் முன்பு எழுதியபடி சகோ வில்லியம் பிரன்காம் செய்திகள் மூலவித்தாக முடியாது. சகோதரனின் செய்திகள் தேவனுடைய வார்த்தையாகிய மூலவித்தை ஆதாரமாக கொண்டதாகும். மூலவித்திலுள்ள வெளிப்பாடுகளை கொண்டதாகுமேயன்றி அவரது செய்திகள் மூலவித்தாக முடியாது.

16. முடிவாக இப்படிப்பட்ட நாடோடிகளின் மொழிப்பெயர்ப்புகளையும் அவர்களுடைய வெளியீடுகளையும் நம்பி மோசம் போகாதீர்கள் என்று உங்கள் எச்சரிக்க வேண்டியது என்மேல் விழுந்த மற்றொரு கடமையாக இருக்கிறது. ஒருவன் தான் ஒன்றுமில்லாதிருந்து, தன்னை ஒரு பொருட்டென்று எண்ணினால் தன்னை தானே வஞ்சிக்கிறனாவான்.

**சகோ. காலேப் யோசுவா**

## கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தார்

1. ஏறத்தாழ 1975ம் ஆண்டு முதல் என்னோடு பழகிவந்த சகோ. அப்பாவு (எ) தேவதாஸ் அவர்கள் 03.01.2012 அன்று கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தார்கள் என அறியவந்தேன். மும்பை சகோ. டேனியல் கிறிஸ்டியான், சகோ. தேவதாஸ் மற்றும் நான் ஆதி நாட்களில் மும்பை, முல்லுண்டு பகுதியில் உள்ள AG சபைக்கு சென்று வந்தோம். **எழும்பி பிரகாசி** என்ற பத்திரிகையை ஆரம்பித்தோம். பின் சத்தியத்தை அறியும்

அறிவை அடைந்தபின் AG சபையை விட்டு வெளியேவந்தோம். நான் **19.11.1978** ல் மும்பை, அம்பர்நாத் பாஸ்டர். கான்வேயிடம் கர்த்தராகிய இயேசுகிறிஸ்து நாமத்தினால் ஞானஸ்நானம் பெற்றேன். சகோ. டேனியல் கிறிஸ்டியான் மற்றும் சகோ. தேவதாஸ் இருவரும் சுமார் ஒரு மாதத்திற்கு முன்பு அவரிடம் ஞானஸ்நானம் பெற்றனர். சகோ. டேனியல் கிறிஸ்டியானை மேய்ப்பனாக கொண்டு தேவனை ஆராதித்து வந்தோம். சகோ. டேனியல் கிறிஸ்டியானோடு எனக்கு ஒருமனப்பாடு ஏற்படவில்லை. நான் அவரை விட்டு என்னை விலக்கிக்கொண்டேன். ஆனால் சகோ. தேவதாஸ் இருவரோடும் ஐக்கியமாகவே இருந்து வந்தார். 30.12.2011 அன்று இரவு மும்பையிலிருந்து என்னிடம் தொலைபேசியில் பேசினார். பின் 01.01.2012 அன்று மாலை என்னிடம் தொடர்புகொண்டு புத்தாண்டு வாழ்த்துக்கள் கூறி ஜனவரி மத்தியில் சென்னை வர இருப்பதாகவும், அப்பொழுது வழக்கம்போல் என்னை சந்திக்க விரும்புவதாகவும் கூறினார். 04.01..2012 அன்று அவருக்கு மிக்க நெருக்கமான ஒரு நண்பருக்கு என்னுடைய காரியமாக நான் போன் செய்தேன். அப்பொழுது அவர் 03.01.2012 சகோ. தேவதாஸ் இறந்துவிட்டது உங்களுக்கு தெரியுமா என்று என்னிடம் கேட்டார். ஆக சகோதரனுடைய மரணத்தை அந்த நண்பர் மூலம் அறியவந்தேன்.

2. 1978 முதல் அநேகர் என்னுடன் கிறிஸ்துவுக்குள் ஐக்கியம் கொண்டிருந்தார்கள். ஆனால் காலப்போக்கில் என்னுடைய கடிந்துக்கொள்ளுதலில் விருப்பமின்றி என்னை விட்டு பிரிந்து பிரிந்து சென்றார்கள். உண்மையை சொல்வதினால், சத்தியத்தை கொண்டு கடிந்து, கண்டனம் செய்து எழுதி போதிப்பதினால் அவர்களுக்கு சத்துருவனேன். நான் தேவனுடைய வார்த்தையை, இக்காலத்திற்குரிய செய்தியை, சத்தியத்தை சத்தியமாக எடுத்துரைக்கும் போது, அவர்கள் ஒவ்வொருவராக என்னை விட்டு பிரிந்து சென்றார்கள். இப்பொழுது என்ன நடக்கிறது? ஒத்துழைப்பு அவர்களிடமிருந்து எனக்கு இல்லை. ஏன்? அது அப்படித்தான் இருக்க வேண்டும். கோதுமை தன்னை வெளிப்படுத்த துவங்கும்போது, பதர் அதிலிருந்து தன்னை விலக்கிக்கொள்கிறது. நான் ஒரு பிரசங்கி அல்ல. மாறாக நான் ஒரு சுவிசேஷகன். ஆதலால் ஒவ்வொருவருடைய பிரசங்க பீடமும் என்னுடையது. ஜலத்தினாலும், ஆவியினாலும் மறுபிறப்பு அடைந்த பரிசுத்தவான்களை கொண்டு, சபை கூடிவரும் இடங்களில் உள்ள பிரசங்க பீடங்கள் என்னுடையது. ஆனால் எந்த சபையிலிருந்தும் எனக்கு ஒத்துழைப்பு இல்லையே. ஆதலால் எங்கோ தவறு உள்ளது. பாருங்கள் உங்கள் சபையில் உள்ள பிரசங்கப்பீடம், தேவனுடைய ஐந்து வகை ஊழியத்தில் உள்ள பிரதிநிதிகளுக்கு என்றால் அந்த பிரசங்க பீடம் எனக்கும் உரியதாகும். ஆனால் உங்கள் சபை மேய்ப்பர்கள் தவறான நபர்களாக இருப்பதினால், என்னை அனுமதிப்பது இல்லை. அவர் நான் அவரது சபையை உடைத்துவிடுவேன் என பயப்படுகிறார். ஆதலால் தான் எனக்கு எங்கும் போக இடமில்லை. எனக்கு பிரசங்கம் செய்ய பிரசங்கபீடங்கள் இல்லை. அவர்களுடைய சபைகளில் நான் பிரசங்கிக்க அவர்கள் என்னை அனுமதிப்பதில்லை. அவர்களது சபை என்னால் காலியாகிவிடும் என நினைக்கிறார்கள். ஆனால் நான் கிறிஸ்துவின் சரீரமாகிய சபையை மட்டுமே பக்திவிருத்தி அடைய செய்ய கர்த்தரால் ஏற்படுத்தப்பட்ட சுவிசேஷகன். நான் என்னை தானே ஏற்படுத்திக்கொள்ளவில்லை. நான் எந்த ஒரு மனிதனாலும் ஏற்படுத்தப்படவில்லை. நான் இங்கு எழுதியுள்ள என் நிலைமைகள் தீர்க்கதரிசியாகிய சகோ. வில்லியம் மாரியன் பிரன்காம் அவர் ஊழியத்திலும் அனுபவித்ததாகும். இது குறித்து **கே.ப. 270** பக்கம் 96 பத்தி 253 ல் நீங்கள் தியானிக்கலாம். ஆதலால் இவர்கள் என்னை ஏற்றுக்கொள்ளாதது குறித்து நான் ஒரு கடுகளவுங்கூட கவலைப்படுவது இல்லை. இந்த சகோதரர் மட்டும் 1978 முதல் அவர் நித்திரையடைந்த நாள்வரை என்னோடு தொடர்புக்கொண்டு தன் ஐக்கியத்தை முடிவு வரை காத்துக்கொண்டார். நிச்சயமாக அது ஒரு ஆச்சரியமான சிநேகம். தங்களது தாயையும், தகப்பனையும் பிரிந்து வாழும் அன்னாரது மூன்று பெண் பிள்ளைகளையும், அவர்களது குடும்பத்தினரையும் 1தெச 4 : 13 - 18 வசனங்களின்படி தேற்றி ஆறுதல் கூறுகிறேன்.

3. இவரோடு கிறிஸ்துவுக்குள் ஐக்கியம் கொண்டிருந்த தொடக்கநாட்களில் நடந்த ஒரு சம்பவம் இதுவரை என்னை விட்டு மறையவில்லை. மும்பையில் ஒருநாள் என் இல்லத்திற்கு வந்தார். அப்பொழுது **இயேசுவே வாரும்** இதழ் போஸ்ட் செய்ய தயார் நிலையில் இருந்தது. என்னை அண்ணாச்சி என்றே அன்று முதல் இதுவரை அழைத்து வந்தார். அண்ணாச்சி, பத்திரிகைகளை ஏன் அனுப்பவில்லை என்று கேட்டார். நான் ஸ்டாம்பு வாங்க போதுமான பணவசதி இல்லை என்றேன். தன்னிடம் கூட பணம் இல்லையே என வருத்தப்பட்டார். பின் ஓரிருமணி நேரத்திற்கு பிறகு என்னிடமிருந்து புறப்பட்டு சென்றார். ஆனால் மீண்டும் என்னிடம் வந்தார். தேவையான ஸ்டாம்புகளை வாங்கிக்கொண்டு வந்தார். பணம் எங்கிருந்து வந்தது என நான் கேட்க, எல்லாம் கிடைத்தது என கூறி மழுப்பினார். சற்று நேரத்தில் என் கண்கள் அவர் கை மீது விழ அவருடைய கைகடிகாரம் இல்லாதிருந்தது. அது எங்கே என்று கேட்க, அதை அடகு வைத்துத்தான் ஸ்டாம்புகள் வாங்கி வந்தேன் என கூறினார். அந்த சம்பவம் என் நெஞ்சில் வேரிட்டு ஆழமாக பதிந்துள்ளது. அவர் இன்று என் கண்முன் இல்லை. ஆனால் அவருடைய நினைவு, அந்த சம்பவம் என் நெஞ்சில் குடிகொண்டு இருப்பதால் இன்று கூட நான் அவரை என் மனகண்களினால் காண்கிறேன்.

ஜனவரி / மார்ச் 2012

கிறிஸ்வின் அன்பில்
**சகோ. காலேப் யோசுவா**